மே 15 - 21, 2005
May 15 - 21, 2005

16.00 24 பக்கங்கள்


REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி


THE SUDAR OLI

வார மலர்





## சொந்தக்காலில் நிற்கமுடியாத சந்திரிக்கா



## அதாவுல்லாவின் அதிர்ச்சி வைத்தியம்





## மீண்டும் பிளேயர்



# மிஸ்டர் வேதாளம்



சந்திரமுகியில் - றஜனி குறிப்பிடுவது போல்... நாய்கள் 'ஊ....ஊ' வென ஊளையிடும் சத்தம். அலுவலகக் கதவுகள், யன்னல்கள் பட..... பட..... பட...... படவென அடித்துக் கொண்டன.... இலேசான சலங்கைச்சத்தம் கேட்க... வெள்ளையாக புகை போன்ற உருவம் ஒன்று எம்மை நோக்கி அசைந்து வர... உண்மையிலேயே பயந்துவிட்டோம்.

மணிக்கூட்டைப் பார்த்தால் நடுச்சாமம் 12 மணி. ஆஹா ஊழியர்கள் எல்லாம் வீட்டுக்குச் சென்ற பின்னர் கொஞ்சம் எழுத்து வேலை இருந்ததால் தனிமையிலே அலுவலகத்தில் தங்கியது ஆபத்தாகப்போய்விட்டதோ என்று கொஞ்சம் வெடவெடத்தபடி இருந்தபோது... எம்முன்னே அசைந்து வந்த வெள்ளைப் புகையிலிருந்த வெளியேறினார் நம்ம வேதாளத்தார்.

"அடடா... நீரா? ஆடிப்போய்விட்டோம். என்ன இவ்வளவு நாளும் திடுதிப்பென வந்து குதித்த நீர் இப்போது மட்டும் இவ்வளவு பந்தாக்களுடன் வருகிறீர்?" என்றோம்.

"ஆமாம் இப்போதெல்லாம் சும்மா கையை வீசிக் கொண்டு தெருவிலே நடக்கப் பயமாக இருக்கிறது. எமக்கே எமக்கென உள்ள இந்த பாதுகாப்பு நடைமுறையை இது நாள்வரை உதாசீனம் செய்துவிட்டுத் திரிந்தேன். இப்போது சில பாதுகாப்புக் காரணங்களுக்காக அதனை மீண்டும் பின்பற்றத் தொடங்கிவிட்டேன்" என்றார்.

"ஓஹோ... அப்படியா! சரி... சரி... உம்மைத்தான் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தேன். எனக்கொரு சந்தேகம்; யாரிடமாவது உமக்குத் தெரிந்தவர்களிடம் கேட்டுத்தீர்த்து வைப்பீரோ?" என்றோம்.

"ஆமாம் தாராளமாகக் கேளுங்கள்" என்றார்...

"இந்த பொதுக்கட்டமைப்பை குறிப்பிட்ட சில நாட்களுக்குள் அமுல் படுத்தாவிட்டால் உதவித் தொகையை வடக்கு, கிழக்குக்கு 60 சதவீதமாகவும், தென்பகுதிக்கு 40 சதவீதமாகவும் வெளிநாடுகள் பகிர்ந்தளிக்கப் போவதாக தூதரக வட்டாரங்களை மேற்கோள்காட்டி வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறதே! அது பற்றி கொஞ்சம் விபரம் திரட்டித்தாருமேன்" என்றோம்.

எமக்கு முன்னால் இருந்த தொலைபேசியைக் காட்டி "இதனை நான் கொஞ்சம் பாவிக்கலாமா?" என்றார்.

"ஓ... தாராளமாக... ஆனால் இந்த நடுச் சாமத்தில் எல்லோரும் தூங்கி இருப்பார்களே" என்றோம்.

"பரவாயில்லை" என்றவர் கண்டபடி இலக்கங்களை அழுத்தி யார் யாரிடமோ பேசினார். "அப்படியா... ஆமாம்... சரி... சரி...' என்று பதிலளித்துவிட்டு ரெலிபோனை வைத்தார்.

"நீங்கள் சொன்ன விடயத்தில் எவ்வளவுதூரம் உண்மை இருக்கிறதோ தெரியாது என்றுதான் எல்லோரும் சொல்கிறார்கள். இது ஜே.வி.பியை அடங்க வைக்க விடப்பட்ட கப்சாவாக இருக்கலாம் என்கிறார்கள் பலரும்" என்றார்.

"இதில் உள்ள சாத்தியப்பாடு பற்றி விசாரித்தீரோ?" என்றோம்.

"ஆம்... ஆனால் இதற்கு சில சிக்கல்கள் இருக்கின்றன. வெளிநாட்டு உதவிகளை புலிகளிடம் நேரடியாக வழங்க சில நாடுகள் முன்வரலாம். ஆனால், சில நாடுகள் தயங்கலாம். அவ்வாறான வேளையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக நிதியை வழங்க வெளிநாடுகள் முயற்சிக்கக்கூடும். ஆனால், அதற்கு புலிகள் இணங்குவார்களா என்பது சந்தேகமே! ஏனென்றால் அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகள் வடக்கு கிழக்கில் பல்வேறு விமர்சனங்களை ஏற்படுத்தி இருக்கின்றன. அதாவது அவைகளின் நடவடிக்கைகள் சுண்டைக்காய் கால்பணம், சுமைகூலி முக்கால்பணம் என்ற நிலையிலேயே இருக்கின்றன."

"புரியும்படி சொன்னால் நல்லது" என்றோம் நாம்.

"அதாவது வெளிநாட்டு உதவிகளைப் பெற்று மக்களுக்கு வழங்குவதை விட அவற்றை வழங்குவதற்காக அவர்கள் செலவிடும் தொகையே அதிகமானதாக இருக்கிறது. எனவே அதற்கு புலிகள் இணங்கமாட்டார்கள். ஆனால், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மூலம் வழங்கும்படி கேட்கலாம். ஆனால் அந்த நிறுவனம் புலிகளுக்குச் சொந்தமானதென தற்போது தென்பகுதியில் கடும் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் அதற்கு எதிர்ப்புகள் கிளம்பலாம்" என்று இழுத்து கொண்டே போனார்.

"அப்படி என்றால் இதுவும் சாத்திப்படாத விடயமா?" என்றோம்.

"கிட்டத்தட்ட அப்படித்தான்" என்றார்.

"சரி நீர் கொண்டு வந்த விடயங்கள் என்ன சொல்லுமேன்" என்றோம். சொல்லத் தொடங்கினார்.

"எஸ்.பியை விடுவிக்கும் விடயத்தில் பச்சைக் கட்சிக்குள் குளிர் யுத்தம் தொடர்கிறது.

கடந்த சில வாரங்களாக புகைந்த விடயம் தணலாகத் தொடங்கிவிட்டதாம். விரைவிலே எரியுமாம்" என்றார்.

"அப்படியா சங்கதி.. சரி.. ஆளுங்கட்சி சேதிகள் எதும்..." என்று இழுத்தோம்.

"ஆளும் கட்சியில் அடுத்த ஜனாதிபதி யார்.. அடுத்த பிரதமர் யார் என்று இழுபறி தொடர்ந்து கொண்டு இருக்கும் நிலையில் கட்சியின் ஆதரவாளர்கள் அதனை முடிவு செய்துவிட்டார்கள்."

"என்ன சொல்கிறீர்?"

"ஆம். கடந்த மேதினம் ஆளும் கட்சியின் ஊர்வலம் காலி முகத்திடல் வழியாக வந்து கொண்டிருந்த போது ஊர்வலத்தில் பிரதமர் மஹிந்தவும் - அமைச்சர் அநுராவும் இணைந்து கொண்டனர். அப்போது ஆதரவாளர்கள் எதிர்கால ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஜயவேவா... எதிர் கால பிரதமர் அநுரா பண்டாரநாயக்கவுக்கு ஜயவேவா என்று கோஷம் போட்டார்களே... அப்படி என்றால் அவர்கள் முடிவு பண்ணிவிட்டார்கள் என்பதுதானே அர்த்தம்" என்றார்.

"அதுசரி இந்த கோஷங்கள் அம்மையாருக்கு பிடிக்குமோ?" என்றோம்.

"பிடிக்காதுதான் என்ன செய்வது? அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்றால் கூப்பிட்டுவைத்து பாட்டுப் பாடலாம். இது ஆதரவாளர்கள். என்ன செய்வது?" என்றார்.

"அதுவும் சரிதான் வேறு"

என்று வேதாளத்தாரைப் பார்த்தபோது.

"இன்றைக்கு இவ்வளவு தான்" என்றவர் மீண்டும் நாய்கள் ஊளையிட... கதவுகள் - யன்னல்கள் படபடவென அடிக்க இலேசான சலங்கைச் சத்தம் கேட்க... வெள்ளையாகக் கிளம்பிய புகைக்குள் புகுந்து மறைந்து கொண்டார்.

# நீதிமன்றத் தீர்ப்புக்களால் 'ஜே'க்கு பெரும் பின்னடைவு!

தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு கடந்தவாரம் பல பின்னடைவான நீதிமன்றத் தீர்ப்புகள் வந்துள்ளன. பொடா சட்டத்தைப் பயன்படுத்தி தனது அரசியல் எதிரிகளைவேட்டையாடிவந்த ஜெயலலிதா, வைகோவின் அரசியல் செல்வாக்குக் காரணமாக முதலாவது தடவையாக பொடா சட்டத்தை துஷ்பிரயோகிக்கும் கைங்கரியத்தை கைவிடநேரிட்டது.



ஜெயலலிதா

அப்போதைய வாஜ்பாய் அரசில் பங்காளியாக இருந்த வைகோவும் தி.மு.கவும் வற்புறுத்திவிடாப்பிடியாக நின்றதால் வாஜ்பாய் அரசு பொடா சட்டத்தின் கீழான வழக்குகளை மறுஆய்வு செய்ய குழு ஒன்றை நியமித்தது. வைகோ பிணையிலும் வெளிவந்தார். பிறகு நடந்த தேர்தலில் வைகோவும் தி.மு.கவும் காங்கிரஸுடன் சேர்ந்து வெற்றியும் கண்டது பழையகதை.

அதன் பிறகு பொடா சட்டத்தை கண்ணை மூடிக் கொண்டு பயன் படுத்துவதை ஜெயலலிதா சற்று தாமதப்படுத்தினார். தேர்தலில் கண்ட தோல்வியால் சற்று அடக்கியே வாசித்தார்.

## பொடா மறு ஆய்வுக்குழு

கடந்தவாரம் பொடா மறுஆய்வுக்குழு மற்றொரு முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை வழங்கியது. தமிழர் தேசிய இயக்கத்தலைவர் நெடுமாறன் உள்ளிட்ட பலருக்கு எதிரான வழக்குகள் சரியானவை அல்ல என மறுஆய்வுக்குழு கூறியுள்ளது. 2002 ஏப்ரல் சென்னைக்கு அருகே நெடுமாறன் விடுதலைப் புலிகளை ஆதரித்து கூட்டமொன்றில் பேசியதாக பொடா சட்டத்தின் கீழ் இந்த வழக்கு தொடரப்பட்டது.



சங்கராச்சாரியார்

வெறுமனே புலிகளுக்கு ஆதரவாகப்பேசியது குற்றமாகாது என மறுஆய்வுக்குழு கூறியிருப்பது ஜெயலலிதாவுக்கு மற்றொரு பின்னடைவாகியுள்ளது. ஏற்கனவே நெடுமாறனும் பிணையில் வெளியே வந்துவிட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. ஆக பொடா சட்டத்தை கொண்டு ஈழஅனுதாபிகளை வேட்டையாடும் சேஷ்டை இப்போதைக்கு சரிவராது என்ற உண்மை ஜெயலலிதாவுக்கு புரிந்திருக்கும்.

## சங்கரமடம் வழக்கு இடம் மாறுமா?

இதேவேளை சர்ச்சைக்குரிய சங்கரமட விவகாரத்தில் தமிழகத்தில் வழக்கு விசாரணை நடந்தால் நீதி, நியாயம் கிடைக்காது எனக்கூறி சங்கராச்சாரியார் வழக்கை வேறு மாநிலத்துக்கு மாற்ற வேண்டும் என்று கோரி உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை அந்த நீதிமன்று விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளது. இதுவும் ஜெயலலிதாவை பொறுத்தவரை முக்கிய பின்னடைவாகும்.

ஒருவேளை சங்கராச்சாரியாரின் மனுவை ஏற்று வேறு மாநிலத்துக்கு விசாரணை மாற்றப்பட்டால் ஜெயலலிதா எந்தச் செல்வாக்கையும் பிரயோகிக்க முடியாது வழக்கில் அவர் தோல்வி அடையலாம். அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இது ஜெயலலிதாவுக்கு தேர்தல் தோல்வியை உறுதிப்படுத்தும் விடயமாகிவிடும்.

## சட்டசபை இடைத்தேர்தல்கள்

இவ்வாரம் காஞ்சிபுரம், கும்மிடிபூண்டி சட்டசபைத் தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடைபெறுகிறது. எப்படியாது தேர்தல் மோசடி செய்து வெற்றியை தனதாக்கும்படி ஜெயலலிதா அமைச்சர்களுக்கு கடுமையாக உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தி.மு.க. – அ.தி.மு.க நேரடியாக மோதும் இந்த இடைத்தேர்தல் அடுத்த மே மாதம் நடைபெறவுள்ள சட்டசபைத் தேர்தலுக்கு முன்னான கடைசி இடைத்தேர்தல் என்பதால் முக்கியத்துவம் பெறுகிறது.

பா.ம.க, ம.தி.மு.க, கம்யூனிஸ்ட், காங்கிரஸ் என சகல கட்சிகளின ஆதரவுடன் தி.மு.க போட்டியில் இறங்கியுள்ளது.

## விஜய்காந்த் புதியகட்சி

இதற்கிடையில்சினிமாநடிகர்களுக்குஅரசியலில் ஈடுபடும் நப்பாசையின் மற்றொரு வெளிப்பாடாகநடிகர் விஜய்காந்த் புதிய கட்சி தொடங்குவதாக அறிவித்துள்ளார். எனினும் முழுமூச்சாக அதற்கான நடவடிக்கை ஏதும் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை.




நெடுமாறன்

ஏற்கனவே தனிக்கட்சி தொடங்கி கையைச் சுட்டுக் கொண்ட நடிகர்களான சிவாஜி, பாக்கியராஜ், ராஜேந்தர் வரிசையில் விஜய்காந்த்தும் சேரக்கூடும் எனபலரும் கூறியதன் விளைவாக விஜய்காந்த் சற்றே தயங்குவதாக தெரிகிறது. கட்சி எதனையும் தொடங்காமலேயே அரசியலில் செல்வாக்கு செலுத்த முயன்று தோற்றுப்போன ரஜனிகாந்த் வேறு நல்லபாடமாக உள்ளார் விஜய்காந்த்துக்கு.

எனினும் பா.ம.க போன்ற கட்சிகள் சினிமாக்காரர்களை கிள்ளுக்கீரையாக நினைப்பது தான் விஜயகாந்த் அரசியலில் இந்த நேரத்தில் நுழைய முயற்சிக்க காரணம் எனக்கூறப்படுகிறது.

சினிமாவுடன் தமிழக அரசியல் பின்னிப் பிணைந்தது தான் என்றாலும் நன்றாகக் காலூன்றி விட்ட அரசியல்கட்சிகள் நான்கைந்து ஏற்கனவே இருக்கும் போது நடிகர்களின் சினிமா வீரப்பேச்சு புதிய கட்சி நடத்தப்போதுமானது அல்ல என்பதே உண்மை.



விஜயகாந்த்

எஸ்.சுரேந்திரஜித்

# சமாதான காலத்தில் தொடரும் தாக்குதல்கள்

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கட்டைப் பறிச்சான் பகுதியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் முன்னரங்க நிலைமீது கடந்தவாரம் இரவு வேளையில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

புலிகளின் நிலைகளில் இருந்தவர்கள் உடனடியாக உஷாராகி பதில் தாக்குதல் நடத்தியமையால் தாக்குதலை நடத்திய இருவரும் தப்பிச் சென்று கட்டைப்பறிச்சான் இராணுவ முகாமுக்குள் சென்றுவிட்டனர் என்று புலிகள் தெரிவிக்கின்றனர்.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மூன்றாண்டுகள் கடந்துவிட்டநிலையிலும் அதில் கூறப்பட்டிருக்கும் விடயங்களை நடைமுறைப்படுத்தி சமாதான சூழலை ஏற்படுத்த அரசோ அரச படைகளோ முயற்சிப்பதாக தெரியவில்லை.

மாறாக சமாதான ஒப்பந்தம் நடைமுறையில் உள்ளது என்ற நம்பிக்கையில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் நிராயுதபாணிகளாக வந்து அரசியல் பணிகளை மேற்கொள்ளும் விடுதலைப்புலி உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களை வலிந்து சண்டைக்கு இழுக்க முற்படுவதுபோலவே இராணுவத்தினரின் அண்மைய செயற்பாடுகள் அமைந்துள்ளன.

புலிகள் அமைப்பில் இருந்து பிரிந்து சென்ற கருணாவை கருவியாகப் பயன்படுத்தி புலிகளை பலவீனப்படுத்தலாம் எனத்தப்புக்கணக்குப் போட்டு இராணுவ புலனாய்வுப்பிரிவினர் அதற்கான காய்களை நகர்த்தி வருகின்றனர்.

கடந்த சில மாங்களுக்கு முன் கிளிநொச்சி சென்று மட்டக்களப்பு திரும்பிக் கொண்டிருந்த புலிகளின் மட்டு - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் படுகொலையுடன் ஆரம்பமாகிய புலிகள் மீதான தாக்குதல்கள் இன்றுவரை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

கௌசல்யன் படுகொலை செய்யப்பட்டு சில நாட்களிலேயே புலிகளின் மட்டு - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் குவேனியைக் கொல்வதற்கு முயற்சிக்கப்பட்டது. இத் தாக்குதலும் அம்பாறை தம்பிலுவில் எனும் பகுதியில் உள்ள படைமுகாமுக்கு அருகில் வைத்தே நடத்தப்பட்டது. இத்தாக்குதலை நடத்தியவர்களும் படைமுகாம்பக்கமாக ஓடியே தப்பித்துக் கொண்டனர். குவேனியும் சக பெண்போராளிகளும் காயங்களுடன் உயிர்பிழைத்தனர்.

தொடர்ந்து வவுனியாவில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தின் மீது சில நாட்கள் கழித்து துப்பாக்கிப்பிரயோகமும் செய்யப்பட்டது. இதில் சில புலி உறுப்பினர்கள் காயங்களுக்கு உள்ளாகி இருந்தனர்.

கடந்த மாதமும் விடுதலைப்புலிகளின் தற்போதைய மட்டு - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் விசேட அதிரடிப்படையினரால் மோசமாகத் தாக்கப்பட்டு படுகாயத்திற்குள்ளானார்.

மட்டக்களப்பில்வைத்து காரணமின்றிக் கைது செய்து தடுத்துவைக்கப்பட்ட தமது உறுப்பினர்கள் இருவரின் விடுதலை பற்றி பேசுவதற்காக சென்றவேளையிலேயே குயிலின்பன்மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இதைவிட கருணாகுழுவை அரவணைத்து அவர்களுடன் இணைந்து பொலன்னறுவை தீவுச்சேனைப்பகுதியில் பாரிய முகாம் அமைத்த இராணுவ புலனாய்வுத் துறை அங்கிருந்தவாறே புலிகள் மீதான நிழல் யுத்தத்தை மேற்கொள்ள முற்பட்டவேளை அந்த முகாம் மீது நடத்தப்பட்ட திடீர்த் தாக்குதலால் அவர்களின் எண்ணம் தவிடுபொடியானது.

இதனால், திருகோணமலை மற்றும் இதர பகுதிகளிலுள்ள புலிகள் மீது கண்வைத்த படையினர் அதன் ஓர் அங்கமாகவே கட்டைப்பறிச்சானிலுள்ள புலிகளின் நிலை மீது தாக்குதலை மேற்கொண்டு இருக்கின்றனர்.

இத்தகைய ஒவ்வொரு தாக்குதல் நடத்தப்படும் பொழுதும் இனந்தெரியாதோரால் அது நடத்தப்பட்டதாக சுலபமாக கூறிவிடுகிறது படைத்தலைமை.

அடிப்படி என்றால் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ஆயுதங்களுடன்வேறு எவராவது இருக்கின்றார்களா? அவர்களை இனம் கண்டு வெளியேற்றும்வல்லமை கூட இராணுவத்துக்கு இல்லையா? அல்லது இருந்தும் அவர்களை இராணுவம் ஊக்குவிக்கிறதா? என்ற பல கேள்விகள் எழுகின்றன.

காலங்காலமாக இனப்பிரச்சினையை தீர்க்கவந்த சிங்கள அரசுகள் சமாதான காலத்தைப் பயன்படுத்தி அரசபடையினர் மூலமாக தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை பலவீனப்படுத்துவதிலும், முக்கியத்துவம் மிக்க தமிழ்ப் போராளிகளை படுகொலை செய்வதிலுமே குறியாக இருந்ததினால் தான் அன்றைய சமாதானப் பேச்சுவார்த்தைகள் யாவும் முறிவடைய நேரிட்டது.

இதனாலேயே தமிழர்கள் பேச்சுவார்த்தை மூலம் எமது பிரச்சினையை தீர்க்க முடியாது என்று ஆயுதப் போராடடத்தில் குதித்தனர். இதனால் நாட்டில் ஆரம்பமாகிய உள்நாட்டுப்போர் சமாதான காலத்திலும் நீறுபூத்த நெருப்பாக இருந்து வருகிறது.

-அனல்வேந்தன்-

இராணுவச் சமநிலையில் இராணுவத்தை ஒருபடி விஞ்சிய நிலையிலேயே புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வந்தனர் என்பது அரசுக்கும், அரச படைகளுக்கும் ஏன் உலகுக்கும் கூட நன்கு தெரியும்.

தெரிந்து கொண்டும் தமது போக்கை மாற்றாமல் தொடர்ந்து பலவிதப்பட்ட வழிகளிலும், இராணுவம் புலிகளை சீண்டிப் பார்த்து வலிந்து ஒரு யுத்தத்துக்குள் புலிகளை தள்ளிவிட முயல்வது பேலவே அதன் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

அத்தகைய நிலை மீண்டும் ஏற்படுமேயானால் இலங்கையின் எதிர்காலமும் கடந்த காலத்தைப் போலவே அமைந்து விடும்.

NATIONAL CHILD PROTECTION AUTHORITY
NO. 330, Thalawathugoda Road, Madiwela, Sri Jayawardenapura, Sri Lanka.
Telephone: 94-2778911-14, Fax: 94-2778915, E.mail: ncpa@childprotection.gov.lk
Website: http:/www.childprotection.gov.lk
unicef

# துவிசாளர் பேராசிரியர் ஹரேந்திர த சில்வா அவர்களின் செய்தி

நிதியுதவிகள், பணியாட்டொகுதியினர் மற்றும் சிறப்பறிஞர்கள் முதலான பல்வேறு தடங்கல்கள் காணப்பட்ட விடத்தும், தற்கால சமூகத்தவரிடையே காணக்கிடைக்கும் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் அத்தகைய துஷ்பிரயோகங்களின் பால் தூண்டுதலளிப்பவர்களுக்கு வழங்கப்படும் தண்டனைகள் முதலியவற்றை எடுத்துக்கூறுவதற்கு உதவும் பல்வேறு கருத்திட்டங்கள். செயற்பாடுகளில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஈடுபட்டுள்ளது. சிறுவர் துஷ்பிரயோகம் இன்று அனைவராலும் பேசப்படுகின்ற ஒரு விடயமாக அமைந்துள்ளதுடன், அது பட்டவர்த்தனமாக கலந்துரையாடப்படும் ஒரு விடயமுமாகிவிட்டது. மேலும், துஷ்பிரயோகம் பற்றி குறித்த அதிகாரிகளுக்கு உடனடியாக அறிக்கையிடுவதனூடாக விழிப்பூட்டும் வேலைத்திட்டங்கள் சிறந்த பெறுபேறுகளை ஏற்படுத்தியுள்ளன என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகின்றேன்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு இவ்வாண்டு மிகவும் செயற்பாடுகள் மிகுந்த ஓர் ஆண்டாகும். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை எமது பொலிசுப் பிரிவுடன்இணைந்து முன்னெடுக்கும் பெருமளவான புலனாய்வு நடவடிக்கைகள் வாயிலாக இலங்கையில் செயற்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பாலியல் துஷ்பிரயோகிகளைக் கண்டறிவதற்கான வாய்ப்பு தோன்றியுள்ளது. முக்கியமாக கொழும்பில் கண்டுபிடிக்கப்பட்டு ஐக்கிய இராச்சியத்தில் வெற்றிகரமாக முறைப்பாடுகள் குறித்து ஆராய்ந்து தண்டனையளிக்கப்பட்ட பிரித்தானிய பாலியல் துஷ்பிரயோகிக்கு எதிராகச் சான்றளிப்பதற்காக நான் உள்ளிட்ட எனது பணியாட்டொகுதியினரில் பலரும், பொலிசுப் பிரிவின் உறுப்பினர்கள் இருவரும் ஹூட் கிறீன் கிரவுன் நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டோம். இந்தச் சம்பவத்தை தொழில்சார் ரீதியில் கையாண்ட விதம் பிரித்தானியப் பொலிசாரை மிகவும் கவர்ந்தது. அது பிரித்தானிய நீதிமன்ற நடவடிக்கை முறையில் குறிப்பிடத்தக்க ஒரு வழக்காக அமைந்தது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் அதன் பணியாட்டொகுதியினர் தொடர்பில் இது ஓர் பெறற்கரிய அனுபவமாகும்.

துஷ்பிரயோகத்துக்குத் தூண்டுதலளிப்போருக்குத் தண்டனையளிப்பதை மேலும் வினைத்திறனுடன் செயற்படுத்துவதற்காக இலங்கையில் வழக்கிலுள்ள சட்டங்களை (பாலியல் துஷ்பிரயோக சட்டமுறைமை) திருத்தியமைப்பதில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சட்ட உப குழுவும், சட்ட வினைப்படுத்துகைப் பிரிவும் ஈடுபட்டுள்ளன. உத்தேச திருத்தங்களை அரசாங்கத்தின் அங்கீகாரத்துக்காக முன்வைக்க முன்னர் நீதித்துறையின் கருத்துக்களைக் கேட்டறிவதற்காக அவை குறித்து சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

இது தொடர்பில் ஏற்பட்ட செலவினங்களை ஈடுசெய்வதற்கு அவசியமான நிதியுதவியை யுனிசெஃப் அமைப்பும், சிறுவர் பாதுகாப்பு நிதியமும் வழங்குகின்றன.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஊடகப் பிரிவினால் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக பல்வேறு தொடர் நாடகங்களும், பாடல்களும், திரைப்படங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. அப்பிரிவினால் கொழும்பில் அமைந்துள்ள சர்வதேச தொழிலாளர் அமைப்பின் ? ஐபெக் நிதியுதவியுடன் சிறுவர் உழைப்புக்கு எதிரான உலக தின நிகழ்ச்சியொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் முன்னெடுக்கப்பட்ட பணிகள் தொடர்பாக விளக்குவதற்கான பல்வேறு பத்திரிகையாளர் மாநாடுகளிலும், ஊடகவியலாளர் சந்திப்புகளிலும் நான் பங்குபற்றினேன்.

சிறுவர்களுக்கு உடலியல் தண்டனையளிப்பதற்கு எதிராக ''ப்ளேன் ஸ்ரீலங்கா'' (Plan Sri Lanka) அமைப்புடன்இணைந்து நிகழ்ச்சித்திட்டமொன்று ஏற்பாடுசெய்யப்பட்டது. சுவரொட்டிகள், அறிவித்தல் பலகைகள், ரூபவாஹினி காட்டூன்துணுக்குகள் முதலியன இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய கூறுகளாக அமைந்தன. ப்ளேன் ஸ்ரீலங்கா அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு ஆராய்ச்சிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.



இலங்கையிலும் வெளிநாடுகளிலும் நான் பங்குபற்றிய பல்வேறு கூட்டங்களில் சிறுவர் போராளிகளின் (Child Soldiers) நிலைமை குறித்துப் பேசப்பட்டது. சிறுவர்களைப் போராளிகளாக இணைத்துக்கொள்வது தொடர்பான பல்வேறு கலந்துரையாடலில் நான் பங்குபற்றினேன். இந்தப் பிரச்சினை தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை முக்கிய பாத்திரம் வகிக்கவேண்டும் என்பது எனது எண்ணமாகும்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையானது சர்வதேச தொழிலாளர்கள் அமைப்பு / ஐபெக் கருத்திட்டம் ஆகியவற்றுடன் சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் கருத்திட்டத்தில் இறங்கியுள்ளது. துஷ்பிரயோகம் காரணமாகப் பாதிப்புக்குள்ளான இத்தகைய சிறுவர்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் செயற்பாட்டுக்கு உறுதுணையாக உளநோய் மருத்துவர்கள், உளவியலாளர்கள், நல்வழி ஆலோசகர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றை ஏற்பாடுசெய்யும் வாய்ப்புக் கிட்டியது.

கடந்தாண்டில் எமது பணியாட்டொகுதியினரால் நிறைவேற்றப்பட்டுள்ள பணிகள் குறித்து உண்மையிலேயே நான் பெருமைப்படுகிறேன். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் நிர்வாக சபைக்கும், நன்கொடையாளர்களுக்கும் குறிப்பாக யுனிசெஃப், பிலேன் ஸ்ரீ லங்கா, சர்வதேச தொழிலாளர் அமைப்பு, ஐபெக் கருத்திட்டம், ஐக்கிய நாடுகளின் எஸ்கெப் தாபனம், யுனிஃபெம், உலகவங்கி, சுவிடன், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கக் குடியரசு ஆகிய அரசாங்கங்களுக்கும், ஏனையோருக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவிக்கின்றேன். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் சிறப்பாக நிறைவேற்றப்பட்ட பணிகளுக்கு அவர்கள் பெரிதும் ஒத்துழைப்பு நல்கியமை நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

***- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை,***
***தலைவர் - பேராசிரியர் ஹரேந்திர டி சில்வா***
***குறிப்பு : குமுதுமாலி மத்துமகே***

## பரிசுக்கான இவ்வாரக் கேள்வி

1. பாலியல் துஷ்பிரயோக சட்டமுறைமையை திருத்தியமைப்பதில் ஈடுபட்டுள்ளவர்கள் யார்?

* அனுப்பப்படும் சரியான விடைகளில் பத்து விடைகள் தெரிவுசெய்யப்பட்டு சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் பரிசில்கள் வழங்கப்படும்.

* *விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:*

ஊடகப்பிரிவு
தேசிய சிறுவர் பாதுகாப்பு
அதிகாரசபை
330, தலவத்துகொட வீதி,
மாதிவெல, பிடகோட்டே.

# கவிதைப் புனல்

### நீயில்லாததால்.....

அன்னுன்னெதிரில் வெக்கும்
அழித்த வார்த்தைகளை – இன்று
தனிமையில் கோர்க்க முயல்கிறேன்
ஆனாலும் பலனில்லை
கூட நீயில்லாததால்....

### இன்றுவரை....

"இறுதியாக" என்ற வார்த்தை கூட
இன்னும் இறுதியாகவில்லை
உனக்கான காத்திருப்பில்...

சு.பிரீத்திகா,
புத்தளம்.

### நிலவே! நிம்மதியின் நிழலையாவது தருவாயா

விடிந்ததிந்த பொழுதொன்று
வேண்டாமினி மானிடப் பிறவியென்று
எத்தனை முறையாசிக்கிறேன்.
யாரவள்?
கொஞ்சி என்னை வஞ்சித்து
சென்றவள்?
இருமனமோ அவள் இதயத்துள்?
உள்ளூர நஞ்சையும்
உதட்டினிலே நல்லதையும்
உச்சரித்துச் சென்றாளே – ஏம்
நிம்மதியிழந்த என்னிதயத்தில்
தீயம்பை வீசுகிறாய் வார்த்தையினால்.
வாழ்க்கை வட்டத்துள்
வலுவிழந்து வாழ்ந்த எனக்கு
வலுவூட்டி வழிகாட்டியானவளே.
இன்று மரணப் பாதையின் வாயிலையும்
திறந்து விட்டாயே
நீயுமோர் சுனாமியா?
உறைந்து போகும்
என்னுணர்வுகளை
இமை திறந்து பார்த்திருக்கும்
வெண்ணிலவே
இரும்புத் திரையினுள் இருந்து
உன்னிடம் ஒன்று கேட்கிறேன்
நிம்மதியின் நிழலையாவது
ஒரு நிமிடம் இங்கே
நிறுத்திவிட்டுப் போவாயா?

தமிழன்பன் லூக்காஸ்,
களுத்துறைச் சிறைச்சாலை.

### வேதனையுறும் நெஞ்சம்

சிந்தனைகள்
அலைபாய
சிறைப்பட்ட
வாழ்க்கையை
எண்ணி எண்ணி
உள்ளம் வெதும்புகிறது.
சொந்தமும்
பந்தமும்
வெகு தூரத்தில்
ஆறாத துயரங்கள்
மட்டும் எம்முடன்
அனுதினமும்
நாமனுபவிக்கும்
துயரங்கள் கண்டு
சிறைக்கம்பிகள் கூட
எமைப்பார்த்து
வெதும்புகின்றன
ஏனோ தானோ –என
நான்கு சுவருக்குள்
நாதியற்ற வாழ்க்கை
தொடர்கிறது....
ஏன் இந்த வேதனை
எமை மட்டும்
வாட்டுகிறது.
உண்ணா நோன்புகள்
இருந்தோம்
வீணான சிறையிருப்பையும்
உளத்துயரையும்
ஊடகங்களுக்கும்,
உரியவர்களுக்கும்
சொன்னோம்.
இலங்கை தேசத்து
நெறிகெட்ட
நீதியும், நியாயமும்
எம்மை
விடுவிப்பதாக இல்லை.
ஒரு இனத்தை மட்டும்
அழித்தொழிக்க
சட்டக்கோவையும்,
அரசியல் யாப்பும்
ஆதிக்கம் செலுத்துவது
அநியாயத்திலும்
பெரும் அநியாயம்.
ஆண்டுகள் பல
கடந்தும்
அடிமைகளாய்
இனவாதிகளின்
பிடியில் சிக்கி
அவதியுறும் எமக்கு
விடுதலையளிப்பது
யாரோ?

ஜோ.கிறிஸ்டி,
களுத்துறைச் சிறைச்சாலை.

### யாரும் இல்லையே!

அள்ளி அள்ளி
கொடுக்குது உலகம்
கிள்ளி கிள்ளி எறியுது அரசு
மழையிலும் வெயிலிலும்
பனியிலும் குளிரிலும்
நுளம்பிலும் கொசுவிலுமே
தொடர்கிறது எமது
துயரத்தின் துள்ளல்கள்
கடந்த யுத்தத்தால்
அகதிகளாக்கப்பட்டோம்.
ஆழிப் பேரலையாலும் அநாதரவானோம்
வந்தார்கள் இவர்கள்
—புஷ்
—கிளின்டன்
—கோபி அனான்
—பீற்றர் ஹேரல்ட்
அனைவரும் சேர்ந்து பார்த்தார்கள்
தென்னிலங்கையின்
அவலத்தை மட்டுமே
எமது மக்களின்
அழுகுரல் கேட்க
யாரும் இல்லையே

ம.புவியரசு,
பெரியநீலாவணை,
களுத்துறைச்சிறை.

### குடிப்பவன்

குடித்தபின் மனிதன்
நிதானமிழப்பதில்லை
குடிப்பதற்கு முன்பே
நிதானமிழக்கிறான்
அதனால்தான் குடிக்கிறான்

கெ.விசாகேசன்,
விசாகமடு.

### நிஜம்

புதுமையற்ற சாதனை
புகழ்பெறாது
புலமையற்ற கவிதை
கலையாகாது
புரையோடிய புண்
எளிதில் ஆறிவிடாது
புகைத்தல் வாழ்வுக்குத்
துணைபோகாது
முதுமையைத் தடுக்க
முடியவே முடியாது
மூட நம்பிக்கையை
வளர்க்கவே கூடாது
மோதல் அமைதிக்கு
ஒத்துவராது
முறுகல் நிலை
உறவுக்கு உதவி விடாது
முற்றும் துறந்த முனிவரை
ஆசை ஒன்றும்
அணுகக்கூடாது

அ.அருசரத்தினம்,
சேனையூர்.

### நம்பியிருக்கிறேன் நான்

மழை மேகத்தால் மறைக்கப்பட்ட
பௌர்ணமி போல....
நீயேன் குடும்ப அழுத்தத்தால்
மறைக்கப்பட்டாய் எனக்கு?

எங்கும் பேரிருள்
மின்சாரம் தடைப்பட்ட தெரு
திகைத்து நிற்கிறது
நீ விலகிய போது
நான் திகைத்தது போல...
மார்கழி மாலைப்பொழுதாக
குளிரும் இதமுமாய்
என்னுள் நீ – இன்னமுமே

வசந்தங்களின் தழுவலாய்
ஆகர்ஷிப்புகளின் அரங்கேற்றமாய்
நிகழ்வுகளின் பொதுநிகழ்வாய்
தேடல்களின் புதையலாய்
என்னுள் இன்னமும் – உன்
பசுமைப் பதிவுகள்

நீயோ...
மனித இயந்திரமாய் இதயம்
தொலைத்து
புதிய தொழிலோடு
புதிய மனிதர்களோடு
சமூகச் சந்தையில்
மிகக்கூடிய பெறுமதியோடு

நானோ...
மெல்லச்சாகும் மனத்தோடு
வாழ்கிறேன் – நமக்கான
இறந்தகால சுகானுபவங்களோடு
உன் அருகே, உன் மண்ணில்
நம்பியிருக்கிறேன் – நான்
ஒரு காலம் வரும்,
புது தீர்வு தரும் – நம்
உறவுகள் வளமாக
திருப்பங்கள் அருகாக – நாம் வாழ.

ஏ.ஆர். சந்துரு,
உடுவில்.

### கனவு

மேள தாளங்கள் முழங்க
மேடையில் அவளும் நானும்
அருகருகே அமர்ந்திருக்க
ஐயர் மந்திரம் ஓத
அவள் கழுத்தில் தாலி ஏற
அட்சதை தூவி அனைவரும்
வாழ்த்திட
நம் காதல் ஜெயித்ததை எண்ணி
இருவர் மனமும் இன்பத்தில்
குதித்திட
இடையே வந்து இடித்தாள்
என் மனைவி
என்னங்க பகலிலும் கனவா என்று

எம்.விஜி,
புதுக்குடியிருப்பு.

### மரணித்த காதல்

பால் மணம் மாறி
பச்சிளம் பருவம் கடந்து
வாலிபக் கடலில்
மூழ்கிக் கிடந்த என்னை
உன் விழிகள்
சுட்டெரித்தன
காதலெனும் தீயால்
பெண்ணே
மலரென்று நினைத்துன்னை
பறிக்க முனைந்தேன்
நீயோ முள்ளாகி – என்
கரங்களை குத்தவில்லை – மாறாக
என் இருவிழிகளை
மூடிவிட்டாய்
மறுப்பு எனும் மடல்
அனுப்பி

சி.க. இசையழகன்,
புதுக்குடியிருப்பு.

### மின்னல்

மழைவரும்
அறிகுறி எதுவும் இல்லை
வானத்தில்
மின்னல் வெட்டியது – ஆம்
அவள் சிரித்துக் கொண்டிருந்தாள்.

### என் குழந்தையும்...

நிழலை தொட்டது
ஆம்ஸ்ரோங் மட்டுமல்ல...
என் குழந்தையும் தான்
பாத்திரத்தில் ஊற்றிவைத்த ...வில்

ப.வ னோஜன்,
மூ... ...ளை

### பிறந்த நாள் பரிசு

உன் நகம் பட்ட
மெல்லிய விரல்கள்
என் காதல் கவடு
என் கன்னத்தின் சிவப்பு
உன் முத்தத்தின் பதிவு
பகற்பொழுது உன்
பார்வைக்காய் ஏங்கும்
இரவுகள் உன்
நினைவுகளை மீட்டும்
என் வார்த்தை
வாழ்க்கை உயிர்
அனைத்தும் நீயே
எனக்குள் மட்டும்
நீ இருப்பதனால்
இந்தப் பிறந்தநாள் பரிசு
என் வாழ்க்கையின்
உனக்கான மொத்தப் பரிசு
நானே தான்.

சத்தி,
திருநல்வேலி.

### உன் வரவை நோக்கி...

அந்திப்பொழுது
தென்றல் காற்று
சில்லென்று வீசிட
மேகக்கூட்டங்கள்
மெதுமெதுவாய்
தவழ்ந்து வர
வந்ததொரு
வனப்பினிலே
உள்ளம் மயங்கி
உனக்காய்
யாசித்தது
உதிரமெங்கும்
ஊறிப்போன
உன் ஞாபகங்கள்
உடலெங்கும்
ஆர்ப்பரித்தன
களைத்திடும் உன்
நினைவுகளும்
நினைக்கையில்
சுவைத்தன
கசப்பான
வாழ்வுகூட
கரும்பாக இனித்தது
விதையாய்
எனக்குள் விழுந்த நீ
விருட்சமாகி
வேர்பதிப்பதெப்போ?
மலரும் மொட்டாகி
மணம்செய்லாம் நீயாக
மகிழ்வோடு
காத்திருக்கிறேன்
உன்வரவை நோக்கி....

யஸ்மினா.

## சிரிக்க சிந்திக்க சிப்ஸ்

❋ அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் ஒருநாள் இரவு நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார். திடீரென அலறி அடித்து நித்திரையிலிருந்து எழுந்து கொண்டார். ஒரு பயங்கரக் கனவு. அந்தக் கனவில் வெள்ளைமாளிகையும், அதற்குள் ஒரு பிணமும் தெரிகின்றன. இது யாருடைய பிணம் என்று லிங்கன் கேட்க. உங்களது பிணம் தான் என்று அங்கு வந்தவர்கள் கூறுகிறார்கள்.


விழித்து எழுந்த லிங்கன், "சில நாட்களில் நான் சுட்டுக் கொல்லப்படுவேன்" என்று தனக்கு நெருக்கமானவர்களிடம் கூறினார். அதேபோல் சில நாட்களில் ஐ ...வில்கீஸ் என்பவனால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

❋ ஜப்பானில் தற்போது மூன்று கோடி கல்யாணமாகாத குமரிகள் இருக்கின்றனர். கல்யாண வயதைத் தாண்டிவிட்ட இந்தப் பெண்களில் பலர் ஜப்பானிய மாப்பிள்ளைகளுக்குப் பதிலாக பிரிட்டிஷ் மாப்பிள்ளைகளைத் தான் கல்யாணம் செய்து கொள்ள விரும்புகின்றனர்.

இந்த மோகத்துக்குக் காரணம் என்ன? இந்தப் பெண்களில் பலர் 30 முதல் 40 வயதை அடைந்துவிட்டவர்கள். வருடம் ஒன்றுக்கு ஏறக்குறைய 35 லட்சம் ரூபாய்க்கு மேல் சம்பாதிக்கக் கூடியவர்கள்.

இவர்கள் தங்களுடைய தொழிலை நிலை நாட்டுவதற்காக தங்கள் வாழ்க்கையின் 5 முதல் 10 வருடங்கள் வரை கடினமாக உழைத்திருக்கிறார்கள்.

ஜப்பானியர்கள் கொஞ்சம் பழமை விரும்பிகள். பழைய பழக்க வழக்கங்களை கைவிட விரும்பாதவர்கள். வேலையை விட்டு விட்டு வீட்டோடு இருந்து குடும்பத்தையும்



குழந்தைகளையும் கவனிக்கும்படி தமது மனைவிமார்களை கொள்வார்கள் என்று இவர்கள் பயப்படுகிறார்கள்.

அதனால் பலபெண்கள் மாத்தியில் எதிர் நீச்சல் போட்டு வெற்றி படைந்த நிலையில் இந்தப் பெண்கள் தங்கள் தொழில்களை பலிகொடுக்க விரும்புவதில்லை. பிரிட்டிஷ் மாப்பிள்ளைகளுக்கு கிராக்கி அதனால்தான்.

❋ மதுரையைச் சேர்ந்த "சுப்ரீம் ஹோட்டல்" அளிக்கும் நூறுக்கும் அதிகமான தோசை வகைகளை தோசை ரசிகர்கள் ருசி பார்த்து மகிழ்கின்றனர். கடந்த ஜனவரியில் இந்த ஹோட்டலில் தோசைத் திருவிழா ஒன்று நடந்து முடிந்திருக்கிறது. இதில் சுவையான ஜெயலலிதா தோசையை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள்.

மிரண்டுவிடாதீர்கள். போலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக பாலியல் குற்றச்சாட்டுக்களை சுமத்தி தமிழ் நாட்டையே கிறுங்க வைத்த ஜெயலலிதாம்




அம்மையாரைப் பற்றி இங்கே சொல்லவில்லை. ஆனால் ஒரு புதிய தோசைக்கு இந்தப் பெயரை ஹோட்டல் காரர்கள் சூட்டியிருப்பதையே சொல்கிறோம்.

பிரபலமாகியிருக்கும் நபர்களின் பெயர்களை தங்கள் விற்பனை பொருள்களுக்குச் சூட்டிப் பணம் சேர்ப்பதில் வியாபாரிகளுக்கு நிகர் வியாபாரிகள் தான்.

வீரப்பன் பிரியாணி, ஜெயேந்திரர் ஜிலேபி, சுனாமி பகோடா என்றெல்லாம் வந்தால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.




A limited number of Exquisite Lake & Parkfront locations -



**FREE**

*Diamond studded gold necklace valued at Rs 250,000 for the first 20 buyers Only.*



Choice of Eight Exclusive 20 perch Individual terraced Villas




*Select from a choice of eight exclusive designs constructed by the waters edge and amidst landscaped parks. Each of these houses says that you've arrived. Exquisite exteriors, beautifully appointed interiors complementing each of these houses are facilities you would love to enjoy. Such as Swimming pools, clubhouse, jogging path, recreation centre including tennis, basketball court and a gym. As well as a mini supermarket and 24 hour controlled security at the entrance facade. In fact all the best of contemporary conveniences in addition to having easy access to the proposed Colombo- Katunayake highway, you'll be only a few minutes away from Colombo. You've earned it, now lay back and enjoy the tranquility and serenity!*

Millennium City

The Township Provider to the Nation

Millennium Villas Ja-Ela

**Ceylinco Developers Ltd.**
Building around your lifestyle

Millennium City, Ja-Ela Site Office
Minuwangoda Road, Ekala, Ja-Ela.
Tel: 4 834801-3, 0714 884012, 0714 884007, 0714 884020, 0714 884021, 0714 884023, 0714 884017 0714 884027 Fax: 4 834803

100, Havelock Road, Colombo 5.
Tel: 2 591710, 2 503195, 0714 884008
E-mail: villas@sri.lanka.net
Website: http:/www.millenniumvilla.com
http:/www.millenniumcitysl.com

BatesAsia Strategic Alliance



# விடுதலை



# மனப்புரட்சியும் மனித விடுதலையும்

## ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி

## மதியுரைஞர் பாலாவின் மற்றொரு பரிமாணம்



யார் இந்த ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி?

கடவுள் என்றும், ஞானி என்றும், புத்த பெருமானின் அவதாரம் என்றும், அனுபூதிமான் என்றும், ஆன்மயோகி என்றும், தத்துவதரிசி என்றும் நாம் பதிக்கும் சமூகப் படிமங்களுக்கும் எமக்குத் தெரிந்த சாதாரண அளவீடுகளுக்கும் அகப்படாத ஓர் அபூர்வமான மனிதர்.

அவர் யார் என்பதை வரையறுத்துக் கொள்வது கடினம். அப்படி வரித்துக்கொண்டு நாம் அவரைப் புரிந்துகொள்ளவும் முடியாது.

'அவர் யார்?' என்ற கேள்விக்கு அவர் யாருமற்றவர் என்பதுதான் பொருத்தமான பதில். ஏனென்றால், அவர் தனது சுயத்தை, அகந்தையை, ஆளுமையை, அகத்தின் முகத்தை அழித்துக் கொண்டவர்.

அவர் ஓர் அசாதாரண மனிதர். அழகான மனிதர்.

> **மனித குலம் இன்று தன்னைத் தானே அழித்துக்கொள்ளும் ஒரு பயங்கர அணுயுகத்தின் விளிம்பில் நிற்கிறது. உலகமானது பிளவுபட்டு, மனித உறவுகள் சிதைபட்டுக் கிடக்கின்றது. வல்லரசுகள் என்றும், நாடுகள் என்றும், இனங்கள் என்றும், மதங்கள் என்றும், வர்க்கம் என்றும், சாதி என்றும் மானிடம் சிதறுண்டு, முரண்பட்டு மோதுகிறது. இனவாதம், மதவாதம் என்ற வெறிபிடித்த சித்தாந்தங்கள் வன்முறைக்குத் தூபமிடுகின்றன. உலகின் பல முனைகளில் யுத்தங்களும், போராட்டங்களும், புரட்சிகளும் வெடித்து மனிதனை மனிதன் அழித்துக் கொண்டிருக்கிறான்.**

தொண்ணூறு ஆண்டுகள் வரை எம்மோடு இப் பூமியில் வாழ்ந்தார். அதில் எழுபத்தைந்து ஆண்டுகள் வரை எம்மோடு கலந்துரையாடினார், போதித்தார், எழுதினார்.

மனித மனம் பற்றி, மனித உறவுகள் பற்றி, மனித விழிப்புணர்வு பற்றி, மனித விடுதலை பற்றி, மனித வாழ்வின் சகல சிக்கலான பரிமாணங்கள் பற்றியும் மிகவும் கனிவுடன், மிகவும் அக்கறையுடன், மிகவும் துல்லியமான தெளிவுடன், மிகவும் அழகான, அற்புதமான கவிதா மொழியில் பேசினார்; எழுதினார்.

அவரது போதனைகள், எழுத்துக்கள் எல்லாவற்றையும் நாம் ஒன்றுசேர்த்து தொகுத்துப் பார்த்தால் அவை ஒரு பெரும் தத்துவார்த்தமாகவோ, கருத்துக் களஞ்சியமாகவோ அல்லது ஓர் ஆன்மீக தரிசனமாகவோ அமையமாட்டா. அவை அனைத்துமே எம்மை நோக்கி எறியப்படும் கேள்விகள்; எம்மோடு சேர்ந்து நடத்தப்படும் தேடுதல்கள்; எமது கனவுகளைக் கலைத்து, நம்பிக்கைகளை உடைத்து, விழிப்புணர்வைத் தூண்டும் விசாரணைகள். கிருஷ்ணமூர்த்தி எமக்கு எவ்வித் தத்துவக் கோட்பாடுகளையும் நெறித்துவிடவில்லை; ஆன்மீக ஞான தரிசனத்தை அளித்துவிடவில்லை; உண்மைப் பொருளைக் கண்டுகொள்ளும் ஒரு மார்க்கத்தை காட்டவில்லை.

யுகம், யுகமாக எமக்குள், எமது மனக் குகை இருட்டினுள் நாமே வரைந்துவிட்ட நிழலுருவங்களை, புன்னந்துவிட்ட பொய்மைகளைக் கண்டுகொள்வதாயின் "நாமே எமக்கு ஒளியாக வேண்டும்" என்கிறார் கிருஷ்ணமூர்த்தி. அவரது போதனை ஒரு புதுமையான சுயதரிசனக் கண்ணாடி.

மனித குலம் இன்று தன்னைத் தானே அழித்துக்கொள்ளும் ஒரு பயங்கர அணு யுகத்தின் விளிம்பில் நிற்கிறது. உலகமானது பிளவுபட்டு, மனித உறவுகள் சிதைபட்டுக் கிடக்கின்றது. வல்லரசுகள் என்றும், நாடுகள் என்றும், இனங்கள் என்றும், மதங்கள் என்றும், வர்க்கம் என்றும், சாதி என்றும் மானிடம் சிதறுண்டு, முரண்பட்டு

> தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் மற்றொரு பரிமாணத்தை - பக்கத்தை - அந்த மனிதருள் புதைந்திருக்கும் இன்னொரு அதிசய ஜீவனை - வெளிப்படுத்துகிறது 'விடுதலை' கட்டுரைத் தொகுப்பு.

மோதுகிறது. இனவாதம், மதவாதம் என்ற வெறிபிடித்த சித்தாந்தங்கள் வன்முறைக்குத் தூபமிடுகின்றன. உலகின் பல முனைகளில் யுத்தங்களும், போராட்டங்களும், புரட்சிகளும் வெடித்து மனிதனை மனிதன் அழித்துக் கொண்டிருக்கிறான். இவ்விதம் மனித வாழ்வு சீர்குலைந்து கிடப்பது ஏன்? மனித உறவுகள் சிக்குப்பட்டு குரோதமடைவது ஏன்? மனிதர்களிடையே அன்பும் அமைதியும் ஒத்திசைவான வாழ்வும் செத்துப்போனது ஏன்? மனிதன் முழுமையோடு, நிறைவோடு, உள்ளும் புறமும் இசைவாக, அமைதியோடு ஆனந்தமாக வாழமுடியாதா?

மனிதன் நாகரிகங்களை தோற்றுவித்தான். அவை அழிந்து போயின. சாம்ராஜ்யங்களைக் கட்டி எழுப்பினான். அவை இடிந்து விழுந்தன. சமுதாய வடிவங்களை உருவாக்கினான். அவை சிதைந்து போயின. மனிதன் மீண்டும் மீண்டும் ஓர் உன்னதமான, புதுமையான சமுதாயத்தைக் கட்டி எழுப்ப விழைகிறான். சமுதாய அமைப்பை மட்டும் மீண்டும் மீண்டும் மாற்றியமைத்து விடுதல் மனிதன் சுபீட்சமடைய முடியுமா?

தனி மனிதனுக்குப் புறம்பான சக்தியாக, தனிமனிதனை ஆட்டிப் படைக்கும் சக்தியாக, தனி மனித தனித்துவத்தை நசுக்கிவிடும் சக்தியாக சமுதாய அமைப்பு இயங்கும் பொழுது அது தனி மனித முழுமைக்கும், மனித விடுதலைக்கும் வழிவகுக்குமா?

சமுதாயம் என்பதே சிக்கலான மனித உறவுகளைக் குறிப்பது அல்லவா? இந்த உறவு எனக்கும் உனக்கும் இடையிலான உறவு. அவனுக்கும் மற்றவனுக்கும் இடையிலான உறவு. மனித உறவுகளின் ஒட்டுமொத்தமான சிலந்திவலைப் பின்னலாக சமூக அமைப்பு உருவகம் பெறுகிறது. தனி மனிதன் தனது மனவுலக இருட்டினுள் பாதை தெரியாது தடுமாறும் பொழுது, பொய்மைகளில் புதைந்து குழம்பும்போது, எனக்கும் உனக்குமுள்ள உறவுகளில் புரிந்துணர்வு இல்லாதபோது, அவனுக்கும் மற்றவனுக்கும் உள்ள உறவுகளில் முரண்பாடு தலைதூக்கும் பொழுது, சமுதாயத்தை மாற்றி அமைக்க விழைவதில் என்ன அர்த்தம் இருக்கிறது? அக உலகத்தை அறவே உதாசீனம் செய்து புற உலகத்தை, பொருளுலகத்தை மட்டும் சீரமைத்தால் மனித வாழ்க்கை சிறப்புற முடியுமா?

இவ்விதம் கேள்விகளை எழுப்பும் கிருஷ்ணமூர்த்தி, முதலில் தனி மனிதன் தனக்குள், தனது மனவுலகில் ஒரு புரட்சியைச் செய்யவேண்டும் என்கிறார்.

"சமுதாயப் புரட்சியானது, தனி மனிதனிலிருந்து, தனி மனிதனின் உள்ளீட்டான அகவுலகப் புரட்சியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். தனி மனிதனின் உள்ளீட்டான புரட்சி நிகழாமல், மனவமைப்பு மாற்றப்படாமல், தனி மனிதனுக்குப் புறம்பாக, வெளியே நிகழும் எவ்வித புதுமையான சமூகப் புரட்சியும் உள்ளடக்கத்தில் உயிரற்றதாகவே இருக்கும். உயிர்த்துடிப்புள்ளதும், காலத்தால் சிதைந்து போகாததுமான ஒரு புதிய சமூக வடிவத்தைக் கட்டி எழுப்புவதாயின் தனி மனிதனின் மனவரங்கில் ஒரு புரட்சி நிகழ்வது அவசியம்" என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

இந்த மனப் புரட்சியானது பிரக்ஞையின் விழிப்புணர்வாக, பிரக்ஞையின் அடித்தளத்திலிருந்து வெடித்தெழ வேண்டும்.

நானே என்னைப் புரிந்துகொள்ளாதவரை, வாழ்வின் அர்த்தத்தை உணர்ந்துகொள்ளாத வரை, பொய்மைகளின் இருண்ட சுவர்களுக்குள் நான் சிறைபட்டுக் கிடக்கும் வரை, நான் மற்றவனைப் புரிந்துகொள்வது எங்ஙனம்? இந்த சமுதாயத்தையும் உலகத்தையும் அறிந்துகொள்வது எங்ஙனம்?

இந்தசமூகமோஉலகமோஎன்னிடமிருந்து மாறுபட்ட ஒரு பூடகமான பொருள்களல்ல. நானே இந்த சமூகத்தையும் உலகத்தையும் சிருஷ்டித்துள்ளேன். இந்த சமூகமும் உலகமும் எனது சுயத்தின் வெளிப்பாடாகவே பொருளுருவம் பெற்றிருக்கின்றன. எனது ஆசைகள், எனது கனவுகள், எனது விருப்பு வெறுப்புகள், எனது மனப்புற்றிலிருந்து பாம்புகளாகச் சீறும் துவேசங்கள், வெறிகள் எல்லாமே இந்த சமூக உலகத்தை, சமூக உறவுகளைப் படைத்திருக்கின்றன. எனவே, நானே இந்த சமூகம், நானே இந்த உலகம்.

நான் சிருஷ்டித்த இந்த சமூக உலகத்தை, நானாகவுள்ள இந்த சமுதாயத்தை, நானே மாற்றி அமைப்பதானால் அந்தப் புரட்சி எனக்குள் தொடங்கவேண்டும். எனது மனவுலகக் களத்தில் அந்தப் போராட்டம் ஆரம்பமாகவேண்டும்.

இந்த உள்ளீட்டான, மனவரங்கப் போராட்டத்தில் எனது விடுதலைக்கான ஆயுதம் எனது விழிப்புணர்வுதான். இந்த விழிப்புணர்வின் வெளிச்சத்தில் எனது மனதின் வேடங்களை, கோலங்களை நான் கண்டுகொள்ள வேண்டும். "பொய்மைகளைக் கண்டுகொள்ளும்பொழுதுதான் உண்மை புலனாகிறது" என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

ஆன்மீக யாத்திரை என்றும், அகவுலகப் பயணம் என்றும், தியானம் என்றும், யோகம் என்றும், எமக்குள் ஒளிந்திருக்கும் ஆன்மத்தின் சூட்சுமத்தை அறிந்துகொள்வதென்றும், நாம் உலகத்தைத் துறந்து, வாழ்க்கையைத் துறந்து, உறவுகளை அறுத்து, யுகம் யுகமாக நடத்திய தேடுதலால் உண்மையைக் கண்டுகொள்ள முடியாது. கடவுள் என்றும், உண்மைப்பொருள் என்றும், நாம் தேடி அலைந்ததெல்லாம் எமது ஆசையின் நிகழ்வுகளன்றி வேறொன்றுமல்ல. கால விசாலத்தின் எல்லைகளைக் கடந்து, சாவின் நியதியை வென்று, துயரத்தின் பளுக்கள் அகன்ற ஒரு நித்தியமான, சிரஞ்சீவியான, பேரானந்தமான வாழ்வினைக் கனவுகண்ட எமது விபரீதமான ஆசை கடவுளாகப் பிறந்தது.

ஆயிரமாயிரம் கோவில்களைக் கட்டி, அந்தக் கடவுளைக் குடியமர்த்தினோம். அர்த்தமிழந்த, அபத்தமான எமது வாழ்க்கைக்கு ஒரு பிரமாதமான அர்த்தமாக, ஒரு அலாதியான நம்பிக்கையாகக் கடவுள் என்ற கருத்துருவத்தை நாம் தழுவிக்கொண்டோம். எமது மனமோ கனவுலகில், கற்பனையுலகில், நிதர்சனத்திற்குப் புறம்பான உலகில் தூங்குகிறது. இந்தப் புராதன மனதால், காலம் காலமாகப் பொய்களால் வனையப்பட்ட மனதால், மூட நம்பிக்கைகளில் மூழ்கிப்போன மனதால், கருத்துலக் கோட்பாடுகளில் கண்டுண்ட மனதால் உண்மையைக் கண்டுகொள்ள முடியாது. நாம் ஒரு குருவை வரித்துக்கொண்டோ ஓர் ஆன்மீக வழிகாட்டியைப் பின்தொடர்ந்தோ ஆச்சிரமத்தில் தவமிருந்தோ, மந்திரங்கள் ஓதி, பிரார்த்தனைகள் செய்து, அழுது புரண்டு ஆண்டவனை வேண்டியோ உண்மைப் பொருளைக் கண்டுகொள்ள முடியாது.

அறிவுப்பசியில் அலையும் எமது மனமோ கருத்துக்களை விழுங்குகிறது. அனுபவத்தைத் தேடித் திரட்டுகிறது. நினைவுப் பளுவைப் பெருக்குகிறது. நடமாடும் நூலகமாக, மற்றவர்களது செத்துப் போன கருத்துக்களை சதா அசைபோடும் இயந்திரமாக, எண்ணத்தின் ஆதிக்கத்திற்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் அறிவார்த்த மனமும் உண்மையைக் கண்டுகொள்ளாது.

எண்ணத்தால், சிந்தனையால், அறிவால், அனுபவத்தால் மனிதர்கள் காலம் காலமாக வரைந்து கொண்ட கருத்துருவச் சித்திரங்கள் எல்லாம் பழைய, இறந்த கால மனவுலகத்தைச் சார்ந்தவை. இந்தப் பழைய மனதின் படிமங்களால் மெய்யுண்மையின் கதவுகளைத் திறக்கமுடியாது என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

"மனித வாழ்வில் எண்ணங்கள் எதற்காக முக்கியத்தைப் பெறுகின்றன என்று விசாரித்துப் பார்த்தீர்களா? மனதின் அனுபவக் கடலிலிருந்து ஓயாது அலைமோதும் கருத்துருவங்களாக, படிமங்களாக சதா மனதை உலைத்துக்கொண்டிருக்கும் இந்த எண்ணங்களுக்கு எதற்காக நாம் அடிமைப்பட்டுக் கிடக்கின்றோம்? மிகவும் தந்திரமாக, மிகவும் நுட்பமாக, மிகவும் சாதுரியமாக இயக்கும் எண்ணமானது தன்னிச்சையாக தனக்கேற்றவாறு சகலத்தையும் திரிபு செய்துகொள்கிறது. மனித உறவுகளில் பிளவையும், முரண்பாட்டையும் தோற்றுவிக்கின்றது. இன்பம், துன்பம் என்று மனித வாழ்வனுபவத்தைக் கூறுபோடுகிறது. எண்ணற்ற அனுபவக் கூறுகளை மனதின் நினைவறையில் குவித்துக்கொள்ளும் எண்ணமானது அந்த அனுபவக் கிடங்கிலிருந்தே மீண்டும் புத்துயிர் பெற்று எழுகிறது. வாழ்க்கை பற்றி எண்ணத்தால் அளிக்கப்படும் விளக்கங்களும், வியாக்கியானங்களும் இறந்த கால அனுபவத்திலிருந்து பெறப்படுபவை. ஆகவே, எண்ணமானது இறந்த காலத்தைச் சார்ந்தது. பழமையானது." என்று குறிப்பிடும் கிருஷ்ணமூர்த்தி, எண்ண அமைப்பின் முழு இயக்கத்தையும் கண்டுகொள்வதுதான் சுயதரிசனத்தின், அகப்புரட்சியின் ஆரம்பம் என்கிறார்.

எண்ண அசைவின் மையமாக எனது சுயம் இயங்குகிறது. இந்தச் சுயம் என்றால் என்ன? நான் என்று எனக்குள்ளிருந்து எண்ணிக்கொண்டிப்பவன் யார்? அவதானிப்பவனாக, அனுபவிப்பவனாக, ஆசைப்படுபவனாக, எனக்குள் என் அகமாக, அந்தரங்க ஆன்மாவாக, என் ஆளுமையாக, என் அகந்தையாக, ஆணவமாக இயங்கிவரும் எனது சுயம் எப்படித் தோற்றம் கொண்டது? இந்த உலகத்தில் எனக்கு எல்லாமே அதுவாக, அதற்காக வாழ்ந்து, அதற்காக அனுபவித்து, அதற்காகத் துயரப்பட்டு, அதை எனது நிரந்தர நான் என்று நம்பி, அலாதியான பிரியத்தோடு நான் வழிபட்டுப் பூசிக்கும் அந்த நான், எனது சுயம், எனக்குச் சொந்தமானது எப்படி?

எனது வாழ்வனுபவத்திலிருந்து, எனது நினைவுலகத்திலிருந்து, எனது பாரம்பரியத்திலிருந்து, எனது பண்பாட்டிலிருந்து, நான் எதிர்கொள்ளும் புறவுலக அழுத்தங்களிலிருந்து எனது சுயம் கருவாகி உருப் பெறுகிறது. எனது சுயத்தின் எலும்பும் சதையுமாக இருப்பதெல்லாம் எனது நினைவுகளின் நிழலுருவங்களன்றி வேறொன்றுமல்ல. எனது மனம் சுவீகரித்துக் கொண்ட கோடானகோடி படிமங்களின் மையத்திலிருந்து எனது சுயம் வெடித்தெழுகிறது.

(19 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கு வெறியாட்டமும் தமிழர் தாயக எதிர்ப்பும்

மட்டக்களப்பு சந்திவெளிப்பகுதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது ஆயுதப்படைகள் நடத்திய வெறியாட்டம் தமிழர் தாயகம் எங்கும் கொதிப்பு நிலையை ஏற்படுத்தியுள்ளது.

கிழக்கில் அண்மைக்காலமாக போராளிகள் மீதும், போராட்ட ஆதரவாளர்கள் மீதும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவந்த படுகொலைத் தாக்குதல்கள் தற்போது பொதுமக்களையும் விட்டுவைக்கவில்லை. இது ஒன்றும் புதிதாக இடம்பெறும் சம்பவமல்ல. எனினும் அரசும் – புலிகளும் போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ள வேளையில் கண்காணிப்புக்குழுவினரின் முன்னிலையில் பொதுமக்கள் மீது தனது காடைத் தனத்தை கட்டவிழ்ந்து விட்டுள்ளது சிறிலங்காவின் ஆயுதப்படை.

மட்டக்களப்பு நகரில் இருந்து 13 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது சந்திவெளி என்ற இடம். சுமார் ஒரு மாதத்துக்கு முன்னதாக இப்பகுதியில் இராணுவக்காவலரண் ஒன்று அமைக்கப்பட்டது. ஏற்கனவே இந்த அரணுக்கு 500 மீற்றர் வடக்காக ஒரு இராணுவ முகாமும் 500 மீற்றர் தெற்காக இன்னொரு இராணுவ முகாமும் உள்ளன.

இந்த நிலையில் புதிதாக அமைக்கப்பட்ட மேற்படி மினி இராணுவ முகாமை (தடைஅரண்) அகற்றக்கோரி போராட்டம் ஒன்றில் ஈடுபடுவதற்கான முஸ்தீபுகள் இந்த அரண் அமைக்கப்பட்ட உடனேயே ஆரம்பிக்கப்பட்டபோதும் கடந்த திங்கள் (9ஆம் திகதி) மக்கள் அமைப்புக்களின் ஏற்பாட்டில் பாரியளவில் மக்கள் திரண்டு எழுந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மற்றும் மறியலில் ஈடுபட்டனர். சந்திவெளி, முறக்கொட்டாஞ்சேனை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள், மாணவர்கள் என போராட்டத்தில் குதித்தனர்.

இயல்பாகவே இராணுவ வெறியாட்டங்களால் கடந்த காலங்களில் மோசமாகப்பாதிக்கப்பட்ட தென்தமிழீழ மக்கள் சமாதான காலத்திலும் பலத்த நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர். இந்த இராணுவ நெருக்கீடுகளே மக்களை கொதித்தெழ வைத்துள்ளன.



## வீதியை மறித்துப் போராட்டம்

சம்பவதினம் மட்டக்களப்பு – வாழைச்சேனை பிரதான வீதியை மறித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அப்பாதையூடான போக்குவரத்துத் தடைப்பட்டது.

இந்தப் போராட்டம் குறித்து கேள்வியுற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் அங்கு விரைந்து வந்தனர். இவர்களின் அழைப்பின் பேரில் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினரும் அங்கு பிரசன்னமாகி இருந்தனர்.

அங்கு வந்த படை அதிகாரிகள் போக்குவரத்துக்குத் தடையாக இருப்பதால் மக்களைக் கலைந்து செல்லுமாறு கூறியபோது அங்கிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் "மக்களின் போக்குவரத்துக்குத் தடையாக இந்த முகாம் அமைக்கப்பட்டுள்ளது, எனவே அதனை உடனடியாக அகற்ற வேண்டும். அதற்காகவே மக்கள் அஹிம்சை வழியில் போராடி வருகின்றனர். அவர்களைப் படையினர் அச்சுறுத்துவது முறையல்ல" எனத் தெரிவித்த போது இது குறித்து வெலிகந்த படை அதிகாரியுடன் பேச வேண்டும் எனவும் எழுத்து மூலம் தருமாறும் படையினர் கோரினர். இதனை நிராகரித்த எம்.பிக்கள் இது மக்களின் போராட்டம் என விளக்கமளித்தனர்.

## பொதுமக்களை தாக்கிய படையினர்

இவர்கள் பேசிக் கொண்டிருந்த சமயம் கொம்மாந்துறை இராணுவ முகாமிலிருந்து வந்த இராணுவ அணி பொதுமக்களைத் தாக்கி விரட்ட ஆரம்பித்தது.

இதனைத் தடுக்கக் கோரிய நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பார்த்து 'உங்களை முதலில் சுடவேண்டும்' என படையினர் மிரட்டினர்.

இராணுவத்தினரின் தாக்குதலால் சிதறியோடிய பொதுமக்கள் எம்.பிக்கள் நின்ற பக்கமாக வந்தனர். தொடர்ந்தும் அவர்களை இராணுவத்தினர் விரட்டி விரட்டித் தாக்கியதால் ஆத்திரமுற்ற மக்கள் படையினரை நோக்கி கல்வீச்சை நடத்தினர். பதிலுக்குப் படையினர் பொதுமக்கள் மீது சுடத் தொடங்கினர். அங்கு வந்த இராணுவக்கவச வாகனமொன்றும் சுட்டுக்கொண்டு அப்பகுதிக்கு விரைந்து வந்தது.

இந்த களேபரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெயானந்த மூர்த்தி, கனகசபை, அரியனேந்திரன், தங்கேஸ்வரி ஆகியோரும் கண்காணிப்புக் குழுவினரும் நிலத்தில் விழுந்து படுத்து தப்பிக் கொண்டனர்.

சுமார் 15 நிமிடங்கள் வரை நீடித்த இராணுவ வெறியாட்டத்தில் கதிரவெளியைச் சேர்ந்த 64 வயதான கந்தசாமி என்பவர் உயிரிழந்தார். 5 மாணவர்கள் உட்பட 20க்கு மேற்பட்டோர் காயமடைந்து வாழைச்சேனை, ஏறாவூர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். சிலரின் நிலை மோசமானதாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்திவெளி வைத்தியசாலைக்கு முன்பாக சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர் அமைக்கப்பட்ட இந்த மினிமுகாம் முன்பாக வேகத் தடைகள் போடப்பட்டு படையினர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். பொதுமக்கள் மீதும் கெடுபிடிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறி புதிதாக அமைக்கப்பட்ட இராணுவ அரணை அகற்றக்கோரி அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது இராணுவம் வன்முறையைப் பிரயோகித்த பின்னரே கொதித்தெழுந்த மக்களால் எதிர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரிகளின் தலையீட்டையடுத்து சம்பவதினம் நண்பகல் 12 மணியளவில் ஆர்ப்பாட்டம் இடைநிறுத்தப்பட்டது. நிலைமை இதனை அடுத்து ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்தபோதும் சம்பவ இடம் போர்க்களம் போல் காட்சியளித்தது.

**கஜன்**

சம்பவம் குறித்து இராணுவத்தரப்பு வழமைபோல் புலி ஆதரவாளர்கள் தம்மை தாக்கியதாகவும் தற்பாதுகாப்புக்காக படைத்தரப்பு சுட்டதாகவும் தெரிவித்தது.

கண்காணிப்புக் குழுவினர், படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதை உறுதிப்படுத்தியுடன் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்களால் ஒரு உயிர் கொடுக்

(16 ஆம் பக்கம் பார்க்க)

**HUMAN DEVELOPMENT ORGANIZATION - HDO**
**Certificate Course On Human Rights - 2005**
**மனித உரிமை பாடநெறி - 2005**

**நோக்கம்:**
இலங்கையில் தமது சமூகம், மனித உரிமைக் கலாசாரத்தை கட்டியெழுப்புவதற்காக சரியான புலமை சார் திறமைகளை போதிப்பவர்களுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் வழங்கப்படுகின்றது.

**பாடநெறி**
- மனித உரிமைகளின் வரலாறு,
- மனித உரிமைகளும் பகுப்பாய்வும்,
- ஐக்கிய நாடு முறை, அதன் செயற்பாடுகள்,
- அனைத்துலக மனித உரிமை பிரகடனம்,
- இலங்கையில் மனித உரிமை, அடிப்படை உரிமைகளின் கட்டமைப்பு,
- பெண்கள், சிறுவர்களின் உரிமைகள்,
- தொழிலாளர் உரிமைகள்,
- அகதிகள் மற்றும் புலம் பெயர்ந்தோருக்கான உரிமைகள்,
- மூன்றாம் தலைமுறையினரின் உரிமைகள்,
- சிவில் சமூகமும் , மனித உரிமைகளை பாதுகாத்தலும்,
- அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் மனித உரிமைகள்

**மனித வளம்**
தேசிய, சர்வதேச அங்கீகாரம் பெற்ற அனுபவமுள்ள விரிவுரையாளர்கள் பயிற்சியை நடத்துவர்.

**பங்குபற்றுபவர்களின் தகைமைகள்**
மனித உரிமை பற்றிய ஆர்வமும் க.பொ.த. உ/தரம் அத்துடன் மனித உரிமைகள் செயற்பாடுகளில் ஒரு வருட அனுபவம் அல்லது க.பொ.த. சா/தரம் அத்துடன் மனித உரிமைகள் செயற்பாடுகளில் மூன்று வருட அனுபவம்.

**காலம்**
3 மாதங்கள் : பாடநெறி நடைபெறும் நாட்கள் சனி அல்லது ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து பி.பகல் 3.00 மணி வரை நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு விண்ணப்பதாரிகள் தமது சுயவிலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டிய காகித உறையை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப இறுதித் திகதி 31.05.2005.

**இணைப்பாளர் - மனித உரிமை**
**மனித அபிவிருத்தி தாபனம்**
**தபால் பெட்டி இலக்கம் 171, கண்டி.**

*மனித உரிமை பாடநெறி தேசிய சர்வதேச மனித உரிமை நிறுவனங்களுடன் இணைந்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.*

**பலராது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPY)**

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்க முடியாத சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோயை உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

**Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)**

*மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோதத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலம் இறைமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.*

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு**

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**கொழும்பில்...**
மே 20 – 25 வரை சந்திக்கலாம் (விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)
New Ahmed Tourist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
Hot Line: 0777 569205

**வவுனியாவில்...**
ஜுன் 11 - 12 ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

**யாழ்ப்பாணத்தில்...**
மே 10 -15
A.S.N. [illegible]
392/A. [illegible] யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 3396

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road
Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

சுடர் ஒளி

மே 15 – 21, 2005

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு–14 டெலிபோன்: 011-4734401—6
பாக்ஸ் : 011 - 4734404
E-mail: editorial@sudaroli.com

## தமிழ்ச்செல்வனின் எச்சரிக்கை

கடந்த மூன்றாண்டுகளாக நீடித்துவரும் போர் நிறுத்த உடன்படிக்கை ஆட்டம் காணும் நிலைமை உருவாகி இருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கிளிநொச்சியில் வைத்து 'ரோய்ட்டர்' செய்தி நிறுவனத்துக்கு அளித்த பிரத்தியேக செவ்வி ஒன்றிலேயே தமிழ்ச்செல்வன் இந்த அபாய அறிவிப்பை விடுத்திருக்கிறார்.

போரினால் அழிவுண்ட தமிழ் மக்களின் இயல்பு வாழ்வை மீளக்கட்டி எழுப்புவது தொடர்பாக அரசு அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் கடந்த இரண்டு வருடங்களாக தடைப்பட்டுப்போய் உள்ளன. இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தயார் என்று ஜனாதிபதி பல தடவைகள் அறிவிப்புக்களை விடுத்தும், இந்த விடயத்தில் எந்த வித நகர்வும் இதுவரை இல்லை.

அதேபோன்று பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சியும் இன்று வருகிறது, நாளை வருகிறது என்ற எதிர்பார்ப்புக்களுடன் காலம் கடந்து சென்று கொண்டிருக்கிறது. புத்தி ஜீவிகள், ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர்.

ஜனாதிபதி வெறும் வாய்ப் பேச்சிலேயே காலத்தைக் கழித்து வருகிறார். எதனையும் உருப்படியாகச் செய்வதற்கு இவருக்கு துணிச்சல் கிடையாது. வெளிப்படையாக ஜே.வி.பி. மீது பழியைப்போட்டு வருகிறார். ஆனால் எந்த விடயத்திலும் கபடத்தனமே மேலோங்கி நிற்கிறது.

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டு நான்கு மாதங்கள் கழிந்துவிட்டன. எதிர்வரும் 26ஆம் திகதியுடன் ஐந்தாவது மாதத்தையும் இது எட்டிவிடப்போகிறது.

பாதிக்கப்பட்ட கரையோரப் பிரதேச மக்களின் மீள்கட்டுமானப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் திட்டம் ஆரம்பம் முதலே புலிகளினால் மட்டும் அல்ல சர்வதேசத் தரப்பினாலும் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இம்மாதம் 16ஆம் 17ஆம் திகதிகளில் கண்டியில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்கு முன் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டு விடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்துக்கு முன் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்திவிட்டால், உதவி வழங்கும் நாடுகளிடம் இருந்து கூடுதல் உதவித் தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நப்பாசையும் அரசுக்கு இருந்தது.

ஆனால் பொதுக்கட்டமைப்பை உருவாக்குவது மேலும் தாமதம் அடையலாம் என்று தற்பொழுது தகவல்கள் தெரிவிக்கின்றன. எனவே ஜனாதிபதி மீண்டும் தடுமாறுகிறார் போன்று தெரிகிறது.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கு பொதுக்கட்டமைப்பு ஒன்று அவசியம் என்பதில் புலிகள் உறுதியாக இருக்கின்றனர்.


ஆனால் பொதுக்கட்டமைப்பு தொடர்பான இணக்கப்பாட்டு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டாலும் அந்த கட்டமைப்பு உரிய முறையில் பயன்தரத்தக்க வகையில் செயல்பட அரசு ஒத்துழைப்பு வழங்குமா என்பதில் புலிகள் இன்னும் சந்தேகம் தெரிவித்தே வருகிறார்கள்.

பொதுக்கட்டமைப்பு உருவாக்குவதை தமிழீழம் உருவாகப் போவது போன்று கூச்சலிடும் தென் இலங்கைப் பேரினவாதிகள்; வெறும் வாய்ப் பேச்சில் காலம் கழிக்கும் ஜனாதிபதி ஆகியோர் உள்ளவரை போர் நிறுத்த உடன்படிக்கை ஆட்டம் காணவே செய்யும்.

# சொந்தக்காலில் நிற்கமுடியாத சந்திரிக்கா!

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமாணத்திற்காக பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்குதல் மற்றும் இலங்கை மின்சாரசபையை மறுசீரமைத்தல் இந்த இரு விடயங்களிலும் அரசாங்கம் உறுதியான ஒரு முடிவை எடுக்க முடியாமல் தடுமாறிப் போயிருக்கின்றது.

அரசாங்கத்தின் இந்தத் தடுமாற்றத்தை சாதாரணமான ஒரு விடயமாகக் கருதமுடியாது. எந்த ஒரு விடயத்திலும் உறுதியான ஒரு முடிவினை எடுக்க முடியாத நிலையில் தான் சுதந்திர கூட்டத்தை அரசாங்கம் செயற்படுகின்றது. இந்த நிலைமை உள்ளூரில் மட்டுமல்ல, வெளியுலகில் சர்வதேச சமூகத்திற்கு அரசாங்கத்தின்பால் நம்பிக்கையின்மையை ஏற்படுவதற்கு வழிகோலுகிறது.


-சோமவன்ஸ-

ஆழிப்பேரலை அனர்த்தம் தொடர்பிலான பொதுக்கட்டமைப்பு என்ற விடயம் குறித்து ஜனாதிபதி என்னதான் தொண்டை கிழியக் கத்தினாலும் உரிய பலனை அவர் அடையமாட்டார் என்பதில் எவருக்கும் சந்தேகம் இருக்காது. இந்த பொதுக்கட்டமைப்பு விடயத்தில் சந்திரிகாவின் ஆரம்பமே தவறானதாகத்தான் இருக்கின்றது.

இந்த உத்தேச பொதுக்கட்டமைப்பு விடயத்தில் விடுதலைப் புலிகளின் சம்மதத்தைப் பெறுவதற்கு அதிதீவிர முயற்சிகளை மேற்கொண்ட திருமதி குமாரதுங்க இந்த விடயத்தின் மறுபக்கத்தைப் பார்க்கத் தவறிவிட்டார். விடுதலைப்புலிகளிடம் உறுதியான பதிலைப் பெறுவதற்கு முன்னர் இந்த விடயத்தை நடைமுறைப்படுத்த முடியுமா என்பதை ஜனாதிபதி சிந்திக்கவில்லை. இலங்கை அரசியலைப் பொறுத்தவரை ஜனாதிபதி சந்திரிகா பல களங்களைக் கண்டவர். எந்த நேரங்களில் எப்படிக் காய்களை நகர்த்துவது என்பதும் அவருக்குத் தெரியும். ஆனாலும் இப்போதைய அரசியல் களத்தில் எதிரிகளும் தனது பக்கம் இருப்பதால் சந்திரிகாவால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் யார் எதிர்ப்புத் தெரிவித்தாலும் அரசாங்கத்தினால் இதனை தனியாகச் செய்யமுடியும். இது யாராலும் மறுக்கப்பட முடியாதது. ஆனால் சந்திரிகாவின் அரசாங்கத்தினால் அதனைச் செய்ய முடியுமா என்பது தான் கேள்வி. பொதுக்கட்டமைப்பு விடயத்தில் புலிகளின் அனுமதியைக் கோரும் அதேநேரத்தில் இது தொடர்பில் ஆளுங்கட்சியின் அபிப்பிராயம் என்ன என்பது தொடர்பிலும் சந்திரிகா அறிய முற்பட்டிருக்க வேண்டும். ஆனால் பொதுக்கட்டமைப்புதொடர்பாக ஒன்பது வாரங்கள் விடுதலைப்புலிகள் ஆராய்ந்த போது அந்தக் காலப்பகுதியில் இங்கு ஆக்கபூர்வமான கருத்தைக் கோரும் எந்தத் திட்டங்களையும் அரச தலைமைத்துவம் மேற்கொள்ள வில்லை.

பொதுக்கட்டமைப்புக்கு விடுதலைப் புலிகள் பச்சைக்கொடி காட்டிய பின்னர் தான் இந்த விடயம் குறித்து ஜனாதிபதி வாய் திறந்தார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அழைத்துப் பேசிய சந்திரிகா அனைத்து அமைச்சர்களுக்கும் (ஜே.வி.பி. அமைச்சர்களைத் தவிர) இதுபற்றி விளக்கினார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர், தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி ஆகியோருடன் இதுபற்றி ஜனாதிபதி பேசினார். ஜே.வி.பி தலைவர்களுடனும் பேசினார். இந்தப் பேச்சுவார்த்தைகள் ஜனாதிபதி எதிர்பார்த்த பலனைத்தர வில்லை.

பொதுக்கட்டமைப்பு விடயம் குறித்து பேச வருமாறு ஜனாதிபதி விடுத்த அழைப்பை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் நிராகரித்தமையும் ஜனாதிபதிக்கு விழுந்த அடியாகும். எனவே, ஜனாதிபதி இந்த முயற்சியை தவறான விதத்தில் ஆரம்பித்தமையே இந்த நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றது.

### என்ன செய்திருக்க வேண்டும்?

இந்த நிலையில் தான், ஜனாதிபதி முதலில் என்ன செய்திருக்க வேண்டும் என்ற கேள்வி எழுகின்றது. ஜனாதிபதியைப் பொறுத்தவரை அவருக்கு அரசாங்கத்தின் பலமும் பலவீனமும் நன்கு தெரியும். ஜே.வி.பியினரைப் பற்றி அவருக்கு மிக நன்றாகத் தெரியும். இந்தப் பொதுக்கட்டமைப்பு விடயத்தை புலிகளுக்குத் தெரிவித்து அவர்களின் இணக்கத்தைப் பெறுவதற்கு முன்னரே இது தொடர்பான அரசாங்கத்தின் தெளிவான நிலைப்பாட்டை ஜனாதிபதி அறிந்திருக்க வேண்டும். இந்த அரசாங்கம் கூட்டணிக் கட்சிகளைக் கொண்டது என்பதால் இதில் தனித்து தீர்மானமொன்றை ஜனாதிபதியினால் எடுக்க முடியாது. இவ்வாறு ஜனாதிபதி செய்திருப்பாரானால் இன்று இந்த சிக்கல் நிலைமை தோன்றியிருக்காது.


-விமல்-

பொதுக்கட்டமைப்பு விடயத்தை பல தரப்பினரும் எதிர்ப்பதற்கு இதுவே பிரதான காரணம். பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஆளுங்கட்சியின் ஒட்டுமொத்த நிலைப்பாடு என்ன என்று கூறுங்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் ஜனாதிபதியிடம் கோருமளவிற்கு அரசாங்கத்திற்குள் ஒற்றுமையில்லாத் தன்மை இருக்கிறது. இதுதான் இன்றைய நிலைமை.

பொதுக்கட்டமைப்பு விடயத்திற்கெதிரான கொள்கையையும், கருத்துக்களையும் அரசின் பங்காளியான ஜே.வி.பி. நாடளாவிய ரீதியில் பரப்பிவிட்டது. ஆனாலும் அவர்கள் நினைப்பது போல் பொதுக்கட்டமைப்பு என்பது பாரதூரமான ஒரு விடயமல்ல. ஜனாதிபதியை ஜே.வி.பி. முக்கியஸ்தர்கள் சந்தித்தபோது பொதுக்கட்டமைப்பு குறித்து ஜனாதிபதியினால் விலாவாரியாக விளக்கப்பட்டது. அப்போது இது தாம் நினைப்பது போல் நாட்டைப் பிரிக்கும் யோசனை அல்லவென்று ஜே.வி.பியினர் உணர்ந்தனர். ஆனால், என்ன செய்யமுடியும்?

ஏற்கனவே பொதுக்கட்டமைப்பிற்கு எதிரான கருத்துக்களை ஜே.வி.பியினர் பரப்பிய நிலையில் இப்போது அதனையொட்டி செல்ல வேண்டிய நிலை ஜே.வி.பிக்குள்ளது. முன்னதாக இந்த விடயம் குறித்து ஜே.வி.பியுடன் பேச்சு நடத்தியிருந்தால் இப்படியான சிக்கலில் ஜனாதிபதி மாட்டியிருக்கத் தேவையில்லை. ஆளுங்கட்சிக்குள் ஒரு கூட்டுப் பொறுப்பு, ஏகோபித்த தன்மைஇல்லாத ஒரு சூழ்நிலையில் ஏனைய தரப்புக்களிடமிருந்து இதற்கு எப்படி ஜனாதிபதி ஒத்துழைப்பை எதிர்பார்க்க முடியும்?


-சந்திரிகா-

### மின்சார சபை விடயம்

இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்பு விடயத்திலும் கிட்டத்தட்ட இப்படித்தான். இந்த விடயத்திலும் ஜே.வி.பியினரின் கைகளே மேலோங்கியிருக்கின்றன. மின்சார சபையை மறுசீரமைப்பு அதற்கு ஏற்படும் நட்டத்தை தவிர்க்க ஜனாதிபதி என்னதான் முயன்றாலும் இதற்கு பல வேறு காரணங்கள் கூறி ஜே.வி.பி. எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றது.

**சிவன்**

பொதுக்கட்டமைப்பு விடயத்திலும், மின்சார சபை மறுசீரமைப்பு விடயத்திலும் ஜனாதிபதி எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அவர்தான் காரணமென்று கூறவேண்டியிருக்கிறது. இந்த இரு விடயங்களைப் பொறுத்தவரை மட்டுமல்ல, எந்த பிரச்சினைகளையும் ஜனாதிபதியால் இலகுவாக தீர்த்துக் கொள்ள முடியாது. ஏனென்றால் ஜனாதிபதியினால் தனித்து எதனையும் செய்ய முடியாது என்பது நிரூபணமாகியிருக்கிறது.

சாதாரண மின்சாரசபை மறுசீரமைப்பை செய்ய முடியாத, அதிகாரங்களற்ற பொதுக் கட்டமைப்பொன்றை ஏற்படுத்த முடியாத சந்திரிகா தேசியப் பிரச்சினைக்கு எப்படி தீர்வைக் காணப்போகிறார்? இதுதான் இன்றைய கேள்வி. இந்தக் கேள்விக்கான விடை வேண்டுமாயின் முதலில் சந்திரிகா தனது சொந்தக் காலில் நிற்கவேண்டும். ஜே.வி.பியின் கால்களை நம்பியிருக்கும் வரை அவரால் ஒன்றுமே செய்துவிட முடியாது.

## வான் புலிகளின் வரவால் திணறும் அரசு

வன்னியில் உள்ள இரணைமடுப் பகுதியில் புலிகளின் விமான ஓடுபாதை ஒன்று இருப்பதாகவும் சிறியரக விமானங்கள் சில புலிகள் வசம் இருப்பதாகவும் செய்திகள் கசிவடைந்ததை அடுத்து அரச பாதுகாப்புத்துறை இவ் விடயத்தில் அதிக அக்கறை செலுத்தியது.

புலிகளின் விமானப்படை குறித்த தனது அச்சத்தை சர்வதேச நாடுகளுக்கு தெரிவித்த இலங்கை அரசு வான்புலிகள் பற்றி பலத்தபீதிக்கும், அச்சத்துக்கும் உள்ளாகியிருந்ததுடன் இந்த விடயம் குறித்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதில் தீவிர அக்கறை செலுத்திவந்தது.

இரணைமடுப் பகுதியில் உள்ள ஓடுபாதை ஒன்றில் புலிகளின் விமானங்கள் தரை இறங்குவதை ஆளில்லாத வேவு விமானங்கள் படம்பிடித்ததாகவும் தேசிய பாதுகாப்புச்சபைக் கூட்டம் ஒன்றில் வைத்து அந்தப் படங்கள் ஜனாதிபதிக்கு காண்பிக்கப்பட்டபோது அதைப் பார்த்த ஜனாதிபதி அதிர்ச்சி அடைந்ததாகவும் முன்னதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஆனால், தற்போதைய நிலையில் புலிகளிடம் சில விமானங்களும் விமான ஓடுபாதையும் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தமது விமானங்களையும், விமான ஓடுபாதையையும் பாதுகாப்பதற்காக வான்புலிகள் இலத்திரனியல் வான் பாதுகாப்பு முறையை ஏற்படுத்தி இருப்பதாகவும் கூறப்படுகின்றது. இது தொடர்பில் ஸ்ரீலங்கா அரசு வெளிநாட்டு உதவிகளைப் பெற உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

கடந்தவாரம் திருகோணமலை சம்பூரில் இருந்து கிளிநொச்சிக்கு விமானப்படையின் விசேட ஹெலிக்கொப்டர் மூலம் புலிகளின் திருமலை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் சென்ற வேளையில் இவரை ஏற்றிச் சென்ற ஹெலிக்கொப்டர் ஏ-9 வீதிக்கு மேலாக இரணைமடுப் பகுதியில் சென்றபோது ஹெலிக்கொப்டரின் அடிப்புறத்தில் பொருத்தப்பட்டிருந்த ஏவுகணை எதிர்ப்புக்கருவி செயற்பட்டதைத் தாம் அவதானித்து உள்ளதாகவும் படைத்தரப்பு கூறுகின்றது.

இதேநேரம் இந்தப் பயணத்தின் போது கிளிநொச்சிக்கு சென்று திரும்பிய ஹெலிக்கொப்டர் ஓட்டுனர் சுமுது தசநாயக்க புலிகளின் விமான ஓடுபாதைக்கருகே உயர்ந்த கோபுரம் ஒன்றிருப்பதைத் தான் அவதானித்திருப்பதாகவும் இது குறித்து விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் டொனால்ட் பெரேராவிடம் முறையிடப்பட்டதை அடுத்து அவரும் இது குறித்து படைத்தரப்பின் உயரதிகாரிகளுடன் தீவிர ஆலோசனை நடத்தியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

எது எப்படி இருப்பினும் வான்புலிகள் பற்றிய அச்சத்தில் தடுமாறிக் கொண்டிருக்கும் அரசும், அரசபடைகளும் அடுத்து என்ன செய்வது எனத் தெரியாது திணறிக் கொண்டிருக்கின்றன.




### ஒரே குழப்பமான நிலை

சிறைவாசம் அனுபவித்து வரும் எஸ்.பி. திஸநாயக்காவை விடுதலை செய்வதற்கான நடவடிக்கையில் மிலிந்த மொரகொட எம்.பி இறங்கியிருப்பது அந்தக் கட்சியிலுள்ள பலருக்குப் பிடிக்கவில்லையாம். எஸ்.பி.யின் வருகையால் தமது இருப்பு பாதிக்கப்படுமென்று கருதும் பலர் இது பற்றி ஏற்கனவே கட்சித்தலைவரைச் சந்தித்து வினவியிருக்கின்றனராம்.

''மிலிந்த மொரகொட, எஸ்.பியின் வேண்டுகோளுக்கமையவே ஜனாதிபதியிடம் செல்லவிருக்கின்றார். ஜனநாயக ரீதியில் இயங்கும் எமது கட்சி இதற்கு தடைவிதிப்பதா? '' என்று அவர்களிடம் கேட்டாராம் ரணில், அது சரி, ஜனாதிபதியிடம் மன்னிப்புக்கோரமாட்டேன் என்று கூறிய எஸ்.பி இப்போது ஏன் அதற்கு முயலவேண்டும்? இந்தக் கேள்வியைப் பலர் எஸ்.பியிடம் கேட்டபோது தான் அப்படியான கோரிக்கை எதனையும் முன்வைக்கவே இல்லையென்று திட்டவட்டமாகக் கூறினாராம் எஸ்.பி.

என்றாலும், விடுதலை செய்வதற்கு உதவுமாறு கூறினாலும் அதனை பகிரங்கமாகக் கூறமுடியாத ஒரு நிலையில் எஸ்.பி இருப்பதை யார் அறிவார்? முதலில் எஸ்.பியின் நிலைமையைப் புரிந்து கொள்ளுங்கள்.

### தலைவரைக் கூப்பிடு

பொதுக்கட்டமைப்பு விவகாரம் குறித்து கடந்தவாரம் ஜே.வி.பி முக்கியஸ்தர்களை ஜனாதிபதி சந்தித்தபோது ஜனாதிபதி கூறிய விடயங்களை கிளிப்பிள்ளை போல் ஜே.வி.பியினர் கேட்டுக்கொண்டனராம்.

இந்தச் சந்திப்பில் ஜே.வி.பி தலைவர் சோமவன்ஸ கலந்து கொள்ளவில்லை. ''எங்கே உங்கள் தலைவர்?'' என்று பேச்சு ஆரம்பிக்குமுன்னரே ஜனாதிபதி வினவியபோது ஜே.வி.பியினர் நிலைதடுமாறிப் போனார்களாம்.

சோமவன்ஸ இந்தப் பேச்சில் கலந்துகொள்ளாமைக்கு முக்கிய காரணமொன்று இருக்கிறது. பொதுக்கட்டமைப்பு விடயம் தொடர்பில் ஜனாதிபதி எதனைக் கேட்டாலும் தலைவரில்லாமல் பதில் கூறமுடியாது என்ற பதில் கூறும் வாய்ப்பை தமது கட்சி முக்கியஸ்தர்களுக்கு வழங்குவதற்காகவே சோமவன்ஸ இதற்கு செல்லவில்லையாம்.

அது சரியாகத்தான் நடந்தது. பொதுக்கட்டமைப்பு யோசனைகளை முன்வைத்த பின்னர் இதுபற்றிய ஜே.வி.பியின் நிலைப்பாடு என்ன என்று வினவினாராம் ஜனாதிபதி. அப்போது உடனடியாக பதிலளித்த ஜே.வி.பியினர் ''தலைவரில்லாமல் எங்களால் எதுவும் கூறமுடியாது. அவரிடம் கேட்டே இதனைத் தீர்மானிக்க வேண்டும்'' என்றனராம். அதற்கு ஜனாதிபதி என்ன பதிலளித்தார் தெரியுமா?

''தலைவரிடம் கதைத்து உறுதியான முடிவை எடுங்கள். மறக்காமல் அடுத் கூட்டத்திற்குத் தலைவரைக் கூட்டி வாருங்கள்'' என்றாராம் ஜனாதிபதி.

### தடுமாற்றம்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் இப்போதெல்லாம் சற்று குழம்பித்தான் காணப்படுகிறாராம். அவரது வலதுகையாக இருந்த கண்டி மாவட்ட எம்.பி பைசர் முஸ்தபா கட்சிக்குள் புரட்சியை ஆரம்பித்திருப்பதே இந்த குழப்பத்திற்குக் காரணம்.

இருவரும்முரண்பட பல காரணங்கள் இருக்கின்றன. இப்போது முரண்பட்டாயிற்று. இப்போது யார் கீழே இறங்கி வருவது என்ற தன்மானப் பிரச்சினை காரணமாக இருவருக்கிடையேயான விரிசலே அதிகரித்து வருகிறது.

''நான் இப்படியே இருக்கமாட்டேன். இந்த மாத இறுதிக்குள் ஒரு முடிவை எடுப்பேன்.'' என்றாராம் முஸ்தபா. ''கட்சியை விட்டு வேறுகட்சிக்கு பைசர் சென்றுவிடுவாரா?'' என்று தனக்கு நெருக்கமானவர்களிடம் கேட்கிறாராம் ஜூனியர் தொண்டமான். எல்லாம் குழப்பமயம் கலகம் பிறந்தால் தானே நியாயம் கிடைக்கும். என்ன நான் சொல்வது சரிதானே?

### தூதரக விசாரணை

இலங்கை வந்திருந்த இந்திய வெளியுறவுத்துறை செயலர் ஷியாம் சரணுக்கு கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் தனிப்பட்ட இராப்போசன விருந்துபசாரமொன்றை நடத்தியமை குறித்தும் அதில் சரண் வெளியிட்ட கருத்துகள் குறித்தும் 'சுடர் ஒளி' நாளிதழில் நாம் செய்தியை வெளியிட்டிருந்தோம்.

இந்த செய்தி வெளியான தினத்தன்று இந்த விடயம் குறித்து கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் கூடுதல் கவனத்தை செலுத்தியதாம். சம்பந்தப்பட்ட விருந்துபசாரத்தை ஏற்பாடு செய்த ஐ.தே.க முக்கியஸ்தர் ஒருவரை தொடர்புகொண்ட இந்திய உயர்ஸ்தானிகராலய முக்கியஸ்தகர் ஒருவர் ''இந்த உள்வீட்டு விடயம் எப்படி வெளிவந்தது? இதனால் அரச உயர்மட்டம் தங்களை தப்பாக நினைத்துவிடும்'' என்றெல்லாம் கூறினாராம். உண்மையைக் கூறுவதில் என்ன தப்பு. உண்மையைக் கூறாமல் மறைப்பதில் என்ன சரி இருக்கின்றது. இதனையே நாம் கேட்கின்றோம்.

### யார் பின்னணி?

ஜனாதிபதி சந்திரிகாவின் பொதுக்கட்டமைப்பு யோசனைக்கு பொதுவாக பல அரசியற்கட்சிகள் எதிர்ப்பையே தெரிவிக்கின்றன.

இவ்வாறு இக்கட்சிகள் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கான காரணம் என்ன? உபகண்டத்தில் உள்ள பிரதான சக்தியொன்று இந்த கட்சிகளின் பின்னணியில் உள்ளதாம். ''பொதுக்கட்டமைப்பு என்ற ஒன்று உருவாவதை நாம் விரும்பவில்லை. இதனை எதிர்த்து செயற்படுங்கள். உங்களுக்கு நாங்கள் இருக்கிறோம்'' என்று இந்தச் கட்சிகளுக்கு அறிவும் அனுசரணையும் தாராளமாக வழங்கப்பட்டுள்ளதாம். இது அம்மையாருக்கும் தெரியுமாம். ஆனால், என்ன செய்ய, மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் இருக்கிறார் அவர்.

## தே.மு.கா.விலிருந்து ஹரீஸுக்கு கல்தா!

# அதாவுல்லாவின் அதிர்ச்சி வைத்தியம்!

அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா தலைமையிலான தேசிய முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினுள் கடந்த சில மாதங்களாக இடம்பெற்றுவந்த பனிப்போர் இப்போது உச்சக்கட்டத்தை அடைந்திருக்கிறது. கட்சியின் செயலாளர் நாயகமான எச்.எம்.எம். ஹரீஸ், பிரதித் தலைவரான ஏ.அஸீஸ் ஆகியோர் கட்சி அங்கத்துவத்திலிருந்து விலக்கப்படும் அளவுக்கு முரண்பாடுகள் வலுப்பெற்றுள்ளன.

தேசிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் அதாவுல்லா, செயலாளர் நாயகம் ஹரீஸ் ஆகியோரிடையே தோன்றியுள்ள முரண்பாடு கட்சியைப் பிளவுபடுத்தும் அபாயத்தை ஏற்படுத்தியிருக்கிறது என 2005. 04.17ஆம் திகதி 'சுடர்ஒளி' வார இதழில் இதே பகுதியில் சுட்டிக்காட்டியிருந்தோம். ஆனால், அது இவ்வளவு குறுகிய காலத்திற்குள் இடம்பெறும் என நினைக்கவில்லை.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.க. அரசுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வேட்டு வைத்ததைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுத்தேர்தலில் தேசிய முஸ்லிம் காங்கிரஸ் எனும் பெயரில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்தில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்ட அதாவுல்லாவும், ஹரீஸும் அப்போதே தங்களுக்குள் பரஸ்பரம் மனக்கசப்புகளை வளர்த்துக்கொண்டு வந்துள்ளனர்.

தாம் மட்டுமே வெற்றியீட்டிவிட வேண்டும் என்ற மனப்பாங்கில் இருவரும் செயற்பட்டதாகவும், தனி விருப்பு வாக்கு வேட்டையில் ஈடுபட்டார்கள் எனவும் அப்போது கதைகள் அடிபட்டன. ஒருவருக்கொருவர் குழிபறிக்கும் வேலைகளை மேற்கொண்டார்கள் எனவும் கூறப்பட்டது.


அதாவுல்லா

அதே வேளை 'நுஆ' தலைவி பேரியல் அஷ்ரபும் அம்பாறை மாவட்டத்தில் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்திலேயே போட்டியிட்டார். அதனால் இம்மூவரினதும் பொது எதிரியான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸையும், அதன் தலைவரான ரவூப் ஹக்கீமையும் தோற்கடிப்பதில் அவர்கள் உறுதிபூண்டிருந்தபோதிலும் தான் எப்படியோ வெற்றியீட்டியாக வேண்டும் என்பதில் அவர் மிகக்கவனமாகக் காய் நகர்த்தி வந்தார்.

எனினும், வெற்றிலை அணி பலமானதாகவும், ஒற்றுமையாகவும் இருக்கிறது என முஸ்லிம் வாக்காளர்களுக்குக் காண்பிப்பதற்காக பேரியல் அஷ்ரப், அதாவுல்லா, ஹரீஸ் ஆகிய மூவரினதும் புகைப்படங்கள் தாங்கிய போஸ்டர்கள் ஒட்டப்பட்டன. ஆனால், தேர்தல் பிரசாரங்களுக்காக ஒரே மேடையில் இவர்களால் அமர முடியவில்லை. பேரியலும், அதாவுல்லாவும் தனித்தனியாகவே கூட்டங்களில் பங்குபற்றினர்.

இதனால், மனமுடைந்த ஹரீஸ் தேர்தல் நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபடாமல் சற்றுச் சோர்ந்து - தளர்ந்து போயிருந்தார். இதன் போது ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸில் அவர் மீண்டும் இணைந்து கொள்ளப்போகிறார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் தேர்தலில் கடைசி வரை தாக்குப் பிடித்து தோல்வியையே தழுவிக்கொண்ட ஹரீஸ் தேசிய முஸ்லிம் காங்கிரஸை ஓர் அரசியல் கட்சியாகப் பதிவுசெய்வதற்கான முயற்சிகளிலும், முஸ்லிம் சமூகத்தின் உரிமைகள் தொடர்பான வேலைத்திட்டங்களில் ஈடுபடுவதற்கான நடவடிக்கைகளிலும் இறங்குவதற்குத் தயாரானார்.

இருந்தபோதிலும் தேசிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான அமைச்சர் அதாவுல்லா, செயலாளர் நாயகம் ஹரீஸின் நடவடிக்கைகளுக்கு அனுமதியோ, ஒத்துழைப்போ வழங்கவில்லை என்று அவரே அடிக்கடி கூறிவந்தார். இதனால்தான் இருவரிடையேயும் கருத்து முரண்பாடுகள் தோன்றின.

இதுதவிர சமாதானப் பேச்சுகளில் முஸ்லிம் தனித்தரப்பு அவசியமில்லை என அமைச்சர் அதாவுல்லா தெரிவித்துவந்த கருத்துக்களும் ஹரீஸை ஆத்திரமடையச் செய்தது. அதனால் தேசிய முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கொள்கை, கோட்பாடுகள், நிலைப்பாடுகள் பற்றி மக்களுக்குத் தெளிவுபடுத்துவதில் செயலாளர் ஹரீஸ் தர்மசங்கடப்பட்டு வந்தார்.

அதேவேளை, தேசிய முஸ்லிம் காங்கிரஸின் பெயரால் கிடைக்கப்பெற்ற அமைச்சுப் பதவி அதாவுல்லாவின் சொந்த ஊரான அக்கரைப்பற்றுப் பிரதேசத்திற்கு மாத்திரமே பயன்படுத்தப்பட்டுவருகிறது. ஏனைய பிரதேசங்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்கின்ற விமர்சனங்களும் ஹரீஸுக்கு நெருக்கடியைத் தோற்றுவித்தது.

இந்நிலையில் கடந்த டிசம்பர் மாதம் இடம்பெற்ற ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பேரழிவடைந்த அம்பாறை மாவட்டத்தின் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு கிழக்கு அபிவிருத்தி அமைச்சரான அதாவுல்லா உதவவில்லை என்ற குற்றச்சாட்டும் எழுந்தது. இதனால் தனது கட்சித் தலைவரான அமைச்சர் அதாவுல்லாவை பகிரங்கமாகவே கண்டிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஹரீஸுக்கு ஏற்பட்டது எனலாம்.


இதனைத் தொடர்ந்தே அதாவுல்லா - ஹரீஸ் முரண்பாடு முறுகல் நிலைக்குச் சென்றுள்ளது. தேசிய முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் என்ற அடிப்படையில் ஹரீஸ் தெரிவித்துவருகின்ற விமர்சனங்களும், குற்றச்சாட்டுகளும் எதிர்காலத்தில் தனக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடலாம் என்பதை உணர்ந்தே அவரை கட்சியிலிருந்து தூக்கியெறிந்துள்ளர் அமைச்சர் அதாவுல்லா.

அதனைக்கூட தான் நேரடியாகச் செய்யாமல் கட்சியின் பிரதிச் செயலாளர் ஐ.ஏ. ஹமீட் என்பவர் மூலம் நிறைவேற்றியுள்ளார். செயலாளர் நாயகம் ஹரீஸை கட்சியிலிருந்து விலக்கிய விடயத்தில் தனக்கு நேரடித் தொடர்பில்லை என்பது போல் அமைச்சர் அதாவுல்லா மௌனம் சாதித்து வருகின்றார்.

கடந்த பொதுத்தேர்தல் முடிந்து சில மாதங்களிலேயே தேசிய முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் ஹரீஸ் கட்சியிலிருந்து விலக்கப்பட்டுவிட்டார் எனவும் அப்போதிருந்து புதிய செயலாளர் தானே என்றும் ஊடக அறிக்கையொன்றில் ஐ.ஏ.ஹமீட் என்பவர் தெரிவித்துள்ளார்.

ஒரு கட்சியின் செயலாளர் அப்பதவியிலிருந்து விலக்கப்படுவதைவிட, அங்கத்துவத்திலிருந்து நீக்கப்படுவதென்பது மிகவும் முக்கியத்துவம் மிக்க விடயமாகும். ஆனால், அது குறித்து ஊடகங்கள் மூலம் அறிவிக்கப்படவுமில்லை, கட்சி அங்கத்தவர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்குத் தெரியப்படுத்தவுமில்லை. அத்துடன் புதிய செயலாளர் இவர்தான் என ஒருவரை அறிமுகப்படுத்தவுமில்லை.

ஆகையினால் ஹரீஸ் விலக்கப்பட்டதென்பது அவரது அண்மைக்கால கருத்துக்களின் எதிரொலியாக இப்போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானமே என்பதில் சந்தேகமில்லை. தேசிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான அமைச்சர் அதாவுல்லா, மீது அவர் குற்றச்சாட்டுகள் எதனையும்சுமத்தாமலும்,விமர்சனங்கள் செய்யாமலும் அடக்கி வாசித்திருந்தால் நிச்சயமாக கட்சியிலிருந்து தூக்கி வீசப்பட்டிருக்கமாட்டார்.


ஹரீஸ்

ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸில் கடந்த சில வருடங்களாக நடந்து வருகின்ற நிகழ்வும் இதுதான். அமைச்சர் பேரியல் அஷ்ரப், ஹிஸ்புல்லா, மருதூர் கனி, நஸீர் அஹமட் எனத் தொடங்கி அதாவுல்லா, அஸீஸ், டாக்டர் ஹப்ரத் போன்றோரும், அதன்பின்னர் றிஷாத் பதியுதீன், நஜீப் ஏ.மஜீத், அமீரலி என்றும் தலைவர் ஹக்கீமினால் விலக்கப்பட்டவர்களின் பட்டியல் நீண்டு செல்கிறது.

**அஸ்லம் எஸ்.மௌலானா**

பொதுவாக முஸ்லிம் கட்சியொன்றில் தலைமைத்துவம் பற்றி விமர்சிக்கும் உரிமை அங்கத்தவர்களுக்குக் கிடையாது. கருத்துச் சுதந்திரம், ஜனநாயகம், ஒழுக்கக்கோவை என்பதெல்லாம் முஸ்லிம் கட்சிகளில் கடைப்பிடிக்கப்படுவதென்பது முயற்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பித்தன் பதில்கள்

*அ. அருள்ஈசன் உடையார்கட்டு.*

**கேள்வி:— பள்ளிக் காதல் நிறைவேறுமா?**

பதில்:— பள்ளிக்காலம் வாழ்வில் ஒருமுறைதான் வரும். அதில் ஏற்படும் பசுமையான நினைவுகளோ வாழ்க்கை முழுவதும் தொடரும். அதை ஒழுங்காக அனுபவித்து சுவைப்பதை விட்டுவிட்டு காதல் கீதல் என்று ஏன் சோகத்திற்குள் விழுகிறீர்? ஒழுங்காகப் படிக்கிறவேலையைப்பாரும்.



*கே. மதுமதன் விசுவமடுமேற்கு.*

**கேள்வி:— மை டியர் பித்து மாமா! காதலித்து விட்டு பின் பெற்றோரின் அனுமதி இன்றி ஓடிப்போய்த் திருணம் செய்துகொள்பவர்களைப் பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்:— உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் துணிந்த கட்டைகள். உயிருக்குயிராய் காதலித்து விட்டு பெற்றோரின் வற்புறுத்தலால் காதலைக் கைவிட்டு வேறொருவருடன் காலம்பூராவும் கண்ணீருடன் வாழ்க்கை நடத்துவதைவிட காதலித்தவரையே கரம்பற்றி வாழ்க்கையை நல்லபடியாக அமைத்துக்கொள்வதே சிறந்தது.

*தே. ஆதிரை, மீசாலை.*

**கேள்வி:— பித்தா! மாணவர்கள் ரியூசன் என்றால் ஓ, ஓ என அங்கலாய்க்கின்றனர். ஆனால் பாடசாலை என்றாலோ பாடசாலையா என்று அலுத்துக்கொள்கின்றனர். ஏன் பித்தா?**

பதில்:— தற்போது பிரபலபாடசாலைகள் எல்லாம் ஆண்கள் அல்லது பெண்கள் மட்டும் படிக்கும் பாடசாலைகளாத்தான் இருக்கின்றன. ஆனால் ரியூசன் என்றால் ஆண்கள், பெண்கள் என பலவிதப்பட்ட, பலரசனையுடைய பலரும் ஒன்று கூடுகிறார்கள். அப்படி என்றால் பம்பல், பகிடி எனப் பலவிதப்பட்ட பண்டங்களுடன் படிப்பையும் மேற்கொள்வது மாணவர்களுக்கு பிடித்திருக்கிறது போல.

*அ.ஜென்சன், மல்லாவி.*

**கேள்வி:— பித்தா கல்யானமானவர், மனைவியுடன் வசிப்பவர் எனத் தெரிந்தும் சிலரைச் சிலபெண்கள் 'லவ்' பண்ணிவிடுகிறார்களே என்ன கொடுமை பித்தா?**

பதில்:— நல்லகேள்வி ஜென்சன். பெண்களே இப்படித்தான். கைப்பிடித்த கணவனை வீட்டில் கண்டபடி உதைப்பதும் தம்மைக் காதலிக்கும் ஆண்களை கண்டபடி அலையவிட்டு ஏமாற்றுவதுமாக இருந்துவிட்டு பின் யாரோ ஒரு கலியாணமானவரை........ சீ.சீ.... எட்டாப் பழத்துக்கு கொட்டாவிவிட்டுக்கொண்டு இருப்பார்கள். விட்டுவிடும்.

*கறுப்புமல்லிகை, மல்லாவி.*

**கேள்வி:— பாசமுள்ள பித்தா பணம், பணம் என்று சாகின்ற சிலர் பணத்துக்காக பந்த பாசங்கள் என்பவற்றையும் கூட மறந்து சிறிதும் திரும்பிப்பாராது பணம் சம்பாதிப்பதிலேயே குறியாக இருக்கிறார்களே! அவர்களுக்கு நீர் என்ன கூற விரும்புகிறீர்?**

பதில்:— வாழ்க்கையை வசதியாகவாழ்வதற்கு பணம் ஓரளவு தேவைதான். ஆனால் பணம்தான் வாழ்க்கை என்று இல்லை.பணத்தை எந்தக்காலத்திலும் தேடிக்கொள்ளலாம். பந்தபாசஅரவணைப்பை வெறுத்து அவர்களை ஒருவேளையாவது பார்க்கக் கூட நேரமின்றி சம்பாதிக்கும்பணத்தினால் ஒன்றையும் சாதித்து விட முடியாது.

*தீபச்செல்வன்,யாழ். பல்கலைக்கழகம்.*

**கேள்வி:— இலங்கை வானொலியில் இடம் பெறும் இதயவீணைபற்றி உமது கருத்து என்ன?**

பதில்:— மக்களால் நிராகரிக்கப்பட்ட பின்பும் தம்மை மந்திரி ஆக்கிய அரசுக்கு தேடித் தேடி தமது விசுவாசத்தைக் காட்டும் கூட்டத்தின் வீணாகானம் அல்லவா.... ? சும்மாவா ......?

*சுஜீவன். சங்கத்தானை, சாவகச்சேரி.*

**கேள்வி:— பித்தா! பாடசாலை ஒன்றில் ஆசிரியர் ஒருவருக்கு கல் எறிந்துள்ளார்கள். இது ஆசிரியருடையதவறா? மாணவர்களுடைய தவறா?**

பதில்:— அது கல்எறிந்த மாணவர்கூட்டத்தைப் பொறுத்துத்தான் சொல்லவேண்டும். வழமையாகவே எல்லோருக்கும் எடுத்த



தெற்கெல்லாம் கல்லெறியும் கூட்டம் என்றால் அதில் ஆசிரியரின் தவறு என்று சொல்ல இடமில்லை. ஆனால் நல்ல ஒழுக்க சீலரான மாணவர்கூட்டத்தால் அந்த ஆசிரியருக்கு மட்டும் கல் எறியப்பட்டிருந்தால் அது நிச்சயமாக ஆசிரியரின் தவறு.

*வி.மரியயூலிற், யூனியன்குளம்.*

**கேள்வி: மைடியர் பித்தா! காதலித்து திருமணம் செய்தவுடன் தம் பெற்றோர் வீட்டையே எட்டிப்பார்க்காதவர்கள் பற்றி?**

பதில்:— அதெல்லாம் கொஞ்சநாள்தான் . கலியாணமான புதிதில் கொஞ்சநாள் அந்த மாதிரிபொழுது போகும். எல்லாம் மறந்துதான் போகும். சில மாதங்கள் சென்றபின் நடக்கும் ருத்திர தாண்டவத்தில் இருவரில் ஒருவர் தப்பிஓடி தாய்வீட்டுக்கு வரும் அழகை நீர் பார்க்கவில்லை போல் இருக்கிது.

*செந்தில்ராஜ், யாழ்ப்பாணம்.*

**கேள்வி:— இவ்வளவு பிரபல கதாநாயகிகள் சூப்பர் ஸ்டாருடன் ஜோடிசேர போட்டி போட்டபோதும் ஏன் நேற்று வந்த நயன்தாராவை சந்திரமுகியில் சூப்பர் ஸ்டார் ஜோடியாக போட்டுள்ளார்?**



பதில்:— என்னப்பா செந்தில்ராஜ்........ இது கூடவா தெரியவில்லை. துள்ளி விளையாடும் இளம் புள்ளி மான் — கருநீல விழிகள் — பளிங்குக் கன்னம் — பவளச் செவ்வாய் — முத்துப்பற்கள் — கார் மேகக் கூந்தல் — மாந்தளிர் மேனி — விம்மும் மார்பகம் — விடுவாரா சூப்பர் ஸ்டார்?

*பகீரதன், திருகோணமலை*

**கேள்வி:— அன்பின் பித்தா ..........! கற்பனையில் காதலியுடன் டூயட் பாடுகின்றவர்கள் பற்றி?**

பதில்:— நிஜத்தில்தான் முடியவில்லை. சொப்பன தேவதைகளுடனாவது சொர்க்கத்துக்கு ஒருமுறை போய்வரட்டும் விட்டு விடும்.

*மவ்றூப், கல்முனை.*

**கேள்வி:— காதல் அரங்கம் என்ற தமிழ் படத்தில் முழு நிர்வாணக் காட்சிகள் இடம்பெற்றுள்ளனவே! ஏன் பித்தா?**

பதில்:— காட்டவேண்டியதை பல்வேறு கோணங்களிலும் காட்டியதால் ரசிகர்களுக்கு சலித்துவிட்டது. அதுதான் மாபெரும் நிர்வாணப்புரட்சிக்கு தயாராகி விட்டார்கள்.

*வதனி, பம்பலப்பிட்டி..*

**கேள்வி:— பித்தா சிக்கனத்துக்கும், கஞ்சத்தனத்துக்கும் வித்தியாசம் என்ன?**

பதில்:— பட்டுச்சேலைக்குப் பதில் வொயில் சேலை சிக்கனம். அரைமுளத் துண்டை இழுத்து உடலில் ஒட்டிக்கொள்வது கஞ்சத்தனம்.

*பாலகுமார், உப்புவெளி.*

**கேள்வி:— பித்தா!காதல், காமம் வேறுபாடு என்ன?**

பதில்:— இரண்டும் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கிடப்பவை. காமத்தைப் பிரிக்க முற்பட்டால் காதல் செத்துவிடும்.

***லிங்கநாதன், வவுனியா.***

**கேள்வி:— முதலிரவு என்றால் என்ன பித்தா?**

பதில்:— முக்கியமானதென எதை இதுவரை நினைத்தோமோ இதுதானா என்று அங்கலாய்க்கும் இரவு.

*அ.ஜென்சன், மல்லாவி*

**கேள்வி:— பித்தா காதலியுடன் சினிமாவுக்குப் போய்விட்டு வீட்டுக்கு வந்தவுடன் நண்பனோடு படம் பார்த்தேன் என்று முழுப் பொய்யை மனைவியிடம் சொல்லலாமா?**

பதில்:— ஏன் மனைவி மட்டும் தனது காதலனுடன் பூங்காவில் சுற்றிவிட்டு கணவனிடம் ஆபிசில் இன்று லேட்டாய்ப் போச்சு என்று கூறுவது நியாயமோ.

*கார்த்திகா, மட்டக்களப்பு.*

**கேள்வி:— பித்தா! பெண்களைக் கண்டால் பேய் இரங்குமாமே எப்படி?**

பதில்:— இனம் இனத்தைக் கண்டால் இரங்கத்தானே செய்யும்.

*நடராஜலிங்கம், யாழ்ப்பாணம்*

**கேள்வி:— பித்தா! வெளிநாடொன்றில் ஒரு பெண்ணையன் ஒருவனை கற்பழித்ததாக முறையிட்டு பெண்ணுக்கு ஆறு மாத சிறைத்தண்டனை கொடுக்கப்பட்டுள்ளதாமே? அப்படி நடக்குமா?**

பதில்:— ஏன்நடக்காது. ஆனால் முறையிட்ட பையன் வெறும் மோட்டு ஆசாமி.

*கிருபாகரன், கிளிநொச்சி*

**கேள்வி:— பித்தா! சுதந்திர ஊடகவியலாளர் சிவராமின் படுகொலைபற்றி உங்கள் கருத்து என்ன? இந்தக் கொலைக்கு யார் பொறுப்பு?**

பதில்:— கோழைத்தனமான நய வஞ்சகச் செயல், பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் கடத்தப்பட்டு, உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் சடலம் கிடந்ததைப் பார்க்கும்போதே உமக்கு யார் செய்தது என்று புரியவில்லையா.....

*துரைராஜசிங்கம், உருத்திரபுரம்*

**கேள்வி:— பித்தா! பிளிஸ் ஜோக் ஒன்று தாருமேன்?**



பதில்:— மிகவும் களைத்து இளைத்துப் போய் தனியார் வைத்தியசாலைக்குள் புகுந்த ஒருவர் வைத்தியரிடம் பிரசவலியில் துடித்துக் கொண்டு இருக்கும் தன் மனைவியை உடன் பார்க்கவேண்டும் எனக் கேட்டார். வைத்தியரோ இப்பொழுது அங்கே யாரும் போகமுடியாது சற்றுப் பொறு என்றார். ஆனால் அவரோ ஒரு நிமிஷம்கூட என்னால் பொறுக்கமுடியாது. அவளின் துடிப்புக்கு ஆறுதல் வேண்டும் என்றான்.

வைத்தியர் மனதிற்குள் நினைத்தார். 'இவன் அன்றும் அவளின் துடிப்பை அவசரப்பட்டு ஆறுதல் படுத்தப் போய்த் தானே அவள் இந்த அவஸ்த்தைக்கு உள்ளாகி இருக்கிறாள்.'

*சிவசுதன் — மட்டக்களப்பு*

**கேள்வி:— பித்தா! காதலில் வெற்றி அடைவது சுகமா அல்லது தோல்வி அடைவது சுகமா?**

பதில்:— இரண்டுமே சுகம்தான். காதலித்தவளுக்குத் தெரியாதவரை.

---

# அழகு ஆபத்தானது!

தனது கணவர் அன்பாகப் பேசி தன்னிடம் இருந்து அபகரித்துச் சென்ற ஐந்து இலட்சம் ருபாவை மீட்க காவல் நிலையத்தை நாடினார், ஒரு மனைவி அங்கு அவரது கற்பு விலைபேசப்பட்டது.

மனித நேயம் படைத்தவர்களின் இரத்தத்தை உறைய வைக்கும் இந்த நாடகம் தமிழ்நாட்டின் குமரிமுனையிலுள்ள மேக்கா மண்டபம் என்ற ஊரில் அரங்கேறி இருக்கின்றது.

லதா குமாரி என்ற இந்தப் பெண் சொல்வதைக் கேளுங்கள்.

"பிரச்சினையே பொலிஸ் அதிகாரிகளுடைய பார்வையில்தான். காவல் நிலையத்துக்கு புகார் கொடுக்கப்போனால் அதை வாங்காமல் எனது நெஞ்சைத்தான் ஏற இறங்கப் பார்க்கிறார்கள். புகாரை வாங்க முன் என்னை வளைத்துப் பிடிக்க முடியுமா, முடியாதா என்பதை தெரிந்து கொள்வதில்தான் அதிக ஆர்வமாய் அவர்கள் இருந்ததை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. இந்த முயற்சியின் பின்புதான் எனது மனுவையே படித்துப் பார்த்தார்கள்.

எல்லோரையும் போல கல்யாணத்தின் பின் வாழ்க்கைப் பயணத்தை சுமுகமாகத் தான் தொடங்கினேன். ஆனால், அவரோ - அதாவது எனது கணவரோ - அருவருக்கத்தக்க விதத்தில் எனக்கு செக்ஸ் தொல்லைகள் கொடுத்தார். அவரிடமிருந்து தப்பிக்கவும் நான் அவரிடம் கொடுத்த ருபா ஐந்து லட்சத்தை பெற்றுக் கொள்ளவுமே காவல் துறையை நாடினேன். நடந்ததோ வேறுகதை.

டி.எஸ்.பிஒருவரிடம்சென்று புகார் கொடுத்தேன். அதை விசாரிக்க வந்த பொலிஸ் இன்பெக்டரோ "என்னைக் கவனி பிறகு' உன் புருஷனை நான் கவனிக்கிறேன்" என்று கூறி என்னை ஆழம்பார்த்தார்.



பெண் ஒருத்தி காவல் நிலையத் துக்கு வந்தால் இப்படித் தான் நடந்து கொள்வீர்களா என்று கோபமாக நான் அவரிடம் கேட்டேன். ஆனால், அவரோ நக்கலாக என்னை ஏற இறங்க பார்த்துச்சிரித்தார்.

அவராவது - அதாவது அந்த இன்ஸ்பெக்டரோ பரவாயில்லை. நான் புகார் கொடுத்த டி.எஸ்.பியோ இன்னும் மோசம். விஷயத்தை வெளிப்படையாகவே கேட்டு விட்டார்.

தொடர்ந்து அவர் என்ன சொன்னார் தெரியுமா? "நான் எப்படி இளமையாக இருக்கிறேன், பார்த்தாயா? நாகர் கோவில் கெஸ்ட் ஹவுஸுக்கு வருகிறாயா? என்று அழைத்தார். நான் அசந்துபோய் அந்த இடத்தைகாலிசெய்துவிட்டேன்.

அடுத்ததாக மதுரை சென்று தென் மண்டல ஐ.ஜியைச் சந்தித்தேன். என்ன செய்யவேண்டும் என்று நேரடியாக விஷயத்தை கேட்டார். நான் சொல்லச் சொல்ல குறித்துக் கொண்டவர் வேகமாக நடவடிக்கை எடுத்தார். எனது கணவரை வேறொரு டி.எஸ்.பி.யும், இன்ஸ்பெக்டரும் விசாரித்தார்கள். சமாதானம் பேசி என்னை அனுப்பிவைத்தார்கள்.

இப்படி லதாகுமாரி என்ற அப் பெண் தெரிவித்தார்

பெண்கள் அழகாக இருப்பதே ஆபத்துத்தான்.

# திகவாவியும் தீர்த்தவாவியும்!

வரலாறு எனப்படுவது செயப்படு பொருள் அல்ல! ஆனால், இலங்கைத் தீவில் இத்தகைய கைங்கரியம் அமாவாசை இருட்டிலும் அரங்கேறி வருவது கண்கூடு. உலகின் எந்தவொரு நாட்டின் வரலாற்றையும் விட இலங்கைத்தீவின் வரலாற்றில் மாறாட்டங்கள் அமோகம். எழுத்து, மொழி, சமயம் தொடர்பாகவும் இலங்கை வரலாற்றில் பல மூடிமறைப்புகள் உண்டு. முந்திவந்த செவியை பிந்தி வந்த கொம்பு மறைப்பதுபோல.

இலங்கையின் ஆதிக்குடிகளான இயக்கரும் நாகரும் திராவிடரென்பதை யாவரும் அறிவர். ஆரியர்கள் கி.மு. ஆறாம் நூற்றாண்டிலேயே இலங்கையில் குடியேறினார்கள். ஆரியர் வருமுன் இலங்கையில் இயக்கர், நாகர் ஆட்சி நிலவிவந்தது. ஆனால், காலப்போக்கிலான சமய மாற்றங்களால் அவர்களின் இனவழி மறைக்கப்படக் கூடியதல்ல. கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் (கி.மு. 247) பின்னரே நாகர்கள் பௌத்த சமயம் தழுவத் தலைப்பட்டனர். அதற்கு முன்னர் அவர்கள் சைவர்களாக வாழ்ந்தார்கள். இதனை சிங்கள பௌத்த வரலாற்று நூலான மகாவம்சத்திலிருந்தும் அறியலாம். அநுராதபுரியில் 'லிங்கவீடு' இருந்திருப்பதாக முன்னாள் தொல்லியல் ஆணையாளரான டாக்டர் செனரத் பரணவிதான சொல்லியிருப்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

> காலத்திற்குக்காலம் மதத்தின் பெயரால் தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்படுவது முடிவற்ற தொடர்கதையா?

அவ்வாறு சைவர்களாகவிருந்து காலப்போக்கில் பௌத்த சமயம் தழுவிய நாகர்கள் வடக்கிலும் தெற்கிலும் வாழ்ந்தமை போன்றுதான் கிழக்கிலும் வாழ்ந்தார்கள்.

வடக்கில் நாகர்கள் வாழ்ந்ததால் 'நாகதீவு' எனப் பெயர்வழங்கப்பெற்றது போலவே கிழக்கில் நாகர் வாழ்ந்த இடம் 'நாகமுனை' என வழங்கப் பெற்றது. இவ்வாறு வடக்கிலும்' கிழக்கிலும், தெற்கிலும் நாகர்கள் வாழ்ந்துவந்ததன் காரணமாகவே சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இலங்கைத் தீவை 'நாகநாடு' என குறிப்பிட்டனவென்க. கடற்கோள் தொடர்பாகச் சொல்லும் மணிமேகலைப் பாடல் வருமாறு:

*'தீங்கனி நாவ லோங்குமித் தீவிடை*
*இன்றேழ் நாளில் இருநில மாக்கள்*
*நின்று நடுக்கொய்த நீநில வேந்தே*
*பூமி நடுக்குறூஉம் போழ்தத் திந்நகர்*
*நாக நந்நாட்டு நானூறி யோசனை*
*வியன்பா தலத்து வீழ்ந்து கேடெய்தும்''*

மேற்சொன்ன பாடலில் இலங்கைத்தீவானது 'நாக(நந்)நாடு' என்று சொல்லப்பட்டிருப்பதனை அறிய முடிகிறதல்லவா?


இன்று கிழக்கிலங்கையில் திருக்கோயில் என வழங்கப்பெறும் பிரதேசமே பண்டைக் காலத்தில் நாகமுனை என்று வழங்கப்பெற்று வந்தது. அங்கு நாகர் செறிந்து வாழ்ந்ததாலேயே அப் பெயர் தோன்றியது. கல்முனைக்கு அணித்தாக 'நாகமடு' எனும் இடமும் உண்டு. பிற்காலத்திலேயே பண்டைய நாகமுனை திருக்கோயில் என்ற பெயரில் வழங்கப்பெறலாயிற்று.

நாகர்கள் நாகமுனையைத்தான் இராசதானியாக்கி ஆட்சி புரிந்திருத்தல் வேண்டும். இன்று திருக்கோயில் கடலில், கடல் மேல் மட்டத்தில் தெரியக் கூடியவாறு காணப்படும் கட்டட இடிபாடுகளின் பின்னணி என்ன? அது இராவணனின் வெளிச்ச வீடு என்று சொல்லப்படுகிறது. இதில் எவ்வித உண்மையும் இல்லை. நாகர்கள் அநுராதபுரியில் கடம்பநதிக் கரையோரத்தில் கட்டியிருந்த பழைய நகரம் பின்னர் அகழ்வாராய்ச்சியால் கண்டறியப்பட்டது. அதன் காலம் கிறிஸ்துவுக்கு முன் ஆயிரம் ஆண்டுகள். அங்கு பிரிட்டிஷ் ஆட்சியினர் பிற்காலத்தில் அகழ்வாராய்ச்சி நடத்தியிருக்காவிட்டால் இப்பேருண்மை வெளிவந்திருக்க முடியாது.

அதுபோன்று நாகமுனை (திருக்கோயில்) கடலில் காணப்படும் கட்டட எச்சங்கள் இன்றுவரை சிங்கள அரசுகளினால் ஆராயாமல் விடப்பட்டமை கிணறு தோண்ட பூதம் புறப்பட்ட கதையாகிவிடுமோ என்ற அச்சத்தினால்தான்.

அங்கு நாகர்களின் இராசதானி இருந்திருக்கலாம். அல்லது அவர்கள் கட்டிய வெளிச்ச வீடு இருந்திருக்கலாம். இன்று அங்கு காணப்படுவது அக்கட்டடங்களின் எச்சங்களே! பழங்காலத்தில் கடல் புகுந்து (கடற்கோள்) நாகமுனையை அழித்திருக்கலாம்.

யாழ். ஆரியச்சக்கரவர்த்திகளின் பிற்கால இராசதானிதான் நல்லூர். அவர்களின் பழங்கால இராசதானி வல்லிபுரம் கடற்பிரதேசத்தில் அமிழ்ந்து கிடக்கும் சிங்கை நகர் ஆகும். அந்தக் கட்டட எச்சங்கள் தொடர்பாகவும் இதுவரை, எந்த சிங்கள அரசும் ஆராய முற்படவில்லை. உண்மைகள் விழித்தெழுமென்ற அச்சம்தான்! வட இலங்கையில் எக்காலத்திலும் தமிழ் அரசர்கள் அரசியற்றியிருக்கவில்லை என்று கூறும் சிங்களப் பேரினவாதிகள் அங்கு தமிழரசர்களின் பழைய இராசதானிகளை ஆராயப் புகுவார்களா?



இதுபோன்றுதான் கிழக்கிலங்கையின் நாகமுனை (திருக்கோயிலின்) கடலில் காணப்படும் கட்டட எச்சங்கள் தொடர்பான கதையும் ஆகும். அது இராவணனின் வெளிச்சவீடு போன்றதான கட்டட எச்சங்கள் அல்ல! அது நாகரினால் இயற்றப்பெற்ற கட்டடத்தின் எச்சங்கள் ஆகும்.

> இவ்வாரம் இலக்கியப் பொழில் பகுதியில் 'திகவாவியும் தீர்த்தவாவியும்' என்ற ஆக்கம் இடம்பெறுகிறது.

கிழக்கிலங்கையில் தொன்றுதொட்டு நாகர்களே பரந்து வாழ்ந்து வந்தனர். அங்கு வழங்கும் தமிழ்மொழி யாரால் கொண்டு வரப்பட்டது? அங்குள்ள ஊர்ப்பெயர்கள் யாவும் தமிழ்ப் பெயர்களே! அவை எப்படித் தோன்றின? சைவர்களாகவிருந்த நாகர்கள் பின்னர் பௌத்தர்களாகவும் மாறினர். சைவ கோயில்களை கட்டியிருந்த நாகர்கள் பின்னர் பௌத்த விகாரைகளையும் கட்டினர்.

நாகர்கள் பௌத்த சமயம் தழுவியதை சாதகமாகக் கொண்டுதான் வரலாற்றுப்புரட்டை வழிநடத்திச் செல்கிறார்கள். தமிழ் மக்களின் வாழ்நிலங்கள் முன்னர் சிங்களவர்கள் வாழ்ந்த நிலங்கள் எனக்கூறி திட்டமிட்ட குடியேற்றங்களைச் செய்யவும், அதற்கேற்ப தமிழ் ஊர்ப் பெயர்களை சிங்களப் பெயர்களாக மாற்றி அமைக்கவும் பின்னைய சிங்கள இனவாத ஆட்சியினருக்கு வசதியாயிற்று.

திராவிடர்களான நாகர்கள் பழங்காலத்தில் பௌத்த விகாரை கட்டியிருந்தால் அந்தப் பிரதேசத்தினை சிங்களப் பிரதேசம் என்று சொல்வது எப்படிப் பொருந்தும்? இப்படிச் சொல்லிச் சொல்லித்தான் சிங்களக் குடியேற்றங்கள் நடந்தேறி வருகின்றன.

இலங்கையில் வெள்ளையர் போனபின் உருவான சிங்கள அரசு முதன்முதல் கிழக்கிலங்கையில் சிங்களக் குடியேற்றம் செய்வதற்கு திகவாப்பி விகாரையை 'சாட்டு'க்கு எடுத்துக் கொண்டது. இந்த திகவாப்பி விகாரையை கட்டியவர் யார்? நாகரினாலேயே இவ்விகாரை கட்டப்பட்டது. ஆதலின் அப்பிரதேசம் தொடர்பாக யதார்த்தமான வரலாற்றினை இங்கு சுட்டிக் காட்டுவது அவசியமாகின்றது.

1948 இல் முதன் முதல் சிங்களப் பெரும்பான்மை அரசு உருவானபோது தமிழ்ப்பிரதேசத்தில் திட்டமிட்ட குடியேற்றங்களைச் செய்வதில் அக்கறை கொண்டிருந்ததை நாம் மனதில் கொள்ள வேண்டும். இவை யாவும் சிங்கள இனவாதத் தலைவர்களால் முன்னரே திட்டமிடப்பட்டிருந்த விடயங்கள் தான். வெள்ளையர் போனபின் ஆட்சியைக் கையிலெடுத்து 'மண் கொள்ளை' செய்யலாமென காத்திருந்தார்கள். இலங்கையில் முதற்பிரதமரான டி.எஸ்.சேனநாயக்காவும் நாயகப் போர்வை போர்த்த இனவாதிதான். இனி சொல்லவா வேண்டும்.

கிழக்கிலங்கையில் 1949 இல் பட்டிப்பளை ஆறு எனும் தமிழ்ப்பிரதேசம் பெரும்பான்மையினரை குடியேற்றும் முகமாக அம்பாறை என பெயர் மாற்றம் செய்யப்பட்டு பாரிய சிங்களக் குடியேற்றம் உருவாக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில்தான் திகவாப்பி என்று சொல்லப்படும் வாவி உண்டு. (சிங்கள மொழியில் 'வாப்பி' என்பதும் 'வெவ' என்பதும் வாவி எனும் தமிழ்ச் சொல்லின் திரிபாகும்) நடுக்காடுப்பற்று பிரதேசத்தில் பொன்னன் வெளியில் தான் இந்த வாவி அமைந்துள்ளது. இதிலிருந்து இந்த வாவி தமிழ்ப்பிரதேசத்திலேயே அமையப்பெற்றிருப்பது கண்கூடு. திகவாவி என்பது நூற்றிப்பன்னிரண்டு ஏக்கர் அளவு கொண்ட குளமாகும். இன்று அக்குளத்தில் தண்ணீர் இல்லை. கால ஓட்டத்தில் குளம் தூர்ந்துபோய் அது வயலாக மாறியுள்ளது.

சுமார் முந்நூறு ஆண்டு காலமாக பெரும்பான்மையாக முஸ்லிம் விவசாயிகளும் சிறுபான்மையாக தமிழ் விவசாயிகளும் இதில் விவசாயம் செய்து வந்தார்கள். 1952 இல் இப்பகுதியில் ஏற்பட்ட சிங்கள முஸ்லிம் கலவரத்தின் எதிரொலியாக தமிழ் விவசாயிகளும் பாதிக்கப்பட்டு காரைதீவில் குடியேறினர். (இது இலங்கையின் முதற்பிரதமரான டி.எஸ்.சேனநாயக்காவால் அம்பாறையில் சிங்களவர் பெருவாரியாக குடியேற்றப்பட்டதால் விளைந்த வினையாகும்)

> வாராவாரம் வெளிவரும் 'இலக்கியப் பொழில்' பகுதியில் இலக்கிய அறிஞர்கள் மட்டுமல்ல இலக்கிய ஆர்வலர்களும் எழுதலாம். கட்டுரைகள் யாவும் தரம் கண்டு பிரசுரிக்கப்படும்.

இப் பிராந்தியத்தில் அமைந்துள்ள திகவாப்பி விகாரை கி.மு.இரண்டாம் நூற்றாண்டு பழைமை வாய்ந்தது. அதனைப் பின்னர் பார்ப்போம். தற்போது முந்நூறு ஆண்டுகளுக்குள்ளான இதன் வரலாற்றை சிறிது நோக்குவோம்.

திகவாவியில் 'திகவாப்பி விகார' எனப் பெயரிய பழைய விகாரை உண்டு. இவ்விகாரையில் தலைமைக் குருவும் பிறிதொரு குருவுமாக இரண்டு பௌத்த தேரர்கள் இருந்துள்ளார்கள். தற்போது ஒருவர் மட்டுமே உள்ளார். இப்பிராந்தியத்தில் முன்னர் சிங்கள மக்கள் இல்லாததாலும் தமிழ் பௌத்த மக்கள் மீண்டும் சைவ சமயம் தழுவிக் கொண்டதாலும் முஸ்லிம் விவசாயிகளே இப் பௌத்த குருக்களுக்கு தானம் வழங்கி வந்ததாக அறியப்படுகிறது.

திகவாவி எனும் பெயர் 'திக' என்ற சிங்கள இளவரசனின் பெயரால் உண்டானதாக ஈ.ரி.கன்னங்கரா தனது 'யாழ்ப்பாணமும் சிங்கள பாரம்பரியமும்' (Jaffna And the Sinhala Heritage, 1984) எனும் ஆங்கில நூலில் கூறுகிறார். திக என்பவன் யார்? இவனை ஒரு இளவரசனாக கன்னங்கரா காண்பிக்கிறார். இக்குளம் கவந்தீசனால் கட்டப்பட்டதென சொல்லப்படுகிறபோது 'திக' என்ற இளவரசனின் பெயர் இக்குளத்தில் சூட்டப்பெற்றமை ஒரு பெரிய புதிர்.

## இலக்கியப் பொழில்

'மட்டக்களப்பு மாண்மியம் நூலில் திகவாப்பி எனும் பெயர் தீர்த்த வாவி என்று சொல்லப்பட்டிருப்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். திகவாவிக்கு கந்தக்கட்டுக்குளம் அல்லது கந்தையா கட்டுக்குளம் எனும் பெயர்கள் முற்காலத்தில் வழங்கப்பட்டு வந்துள்ளன. இவையே புராதன பெயர்கள் ஆகும். இத்தமிழ்ப் பெயர்களை தனது நூலில் தவிர்க்க முடியாத நிலையில் வெளியிட்டிருக்கும் கன்னங்கரா இவற்றினைப் பிற்காலப் பெயர்களாக காண்பித்திருப்பது அவரின் வரலாற்றுப் புரட்டன்றி வேறல்ல. கந்தையா கட்டுக்குளம் எனும் பெயரை முதலியார் எஸ்.ஓ.கனகரத்தினம் எழுதிய நூலிலும் காணமுடியும். (A Monograph of the Batticaloa Disirict of the Eastern Province Ceylon by S.O. Kanaharatnam M.Sc. 1921) உண்மை என்னவெனில் 'திகவாப்பி' எனும் பெயரே பின்னெழுந்த பெயராகும்.

சொல்லேருழவன்
ம.க.அ.அந்தனிசில்

மட்டக்களப்பு மாண்மியம் நூல் இக்கந்தையா கட்டுக்குளத்தினை தீர்த்தவாவி என்று குறிப்பிட்டிருப்பதால் புராதன காலத்தில் அப்பகுதியில் கந்தனின் ஆலயம் இருக்கப் பெற்று உற்சவகாலங்களில் கந்தன் தீர்த்தம் ஆடிய குளமாக இக்குளம் இருந்திருத்தல் வேண்டும். இப்பின்னணியிலேயே இது கந்தக்கட்டுக்குளம் அல்லது கந்தையா கட்டுக்குளம் என அழைக்கப்பட்டு வந்தது. தவிரவும் தீர்த்த வாவி என்ற பெயரின் விகுதியான வாவி என்ற பதம்தான் 'வாப்பி' என கொச்சைப்படுத்தப்பட்டு 'திக' என்ற பகுதியுடன் இணைந்து திகவாப்பி என உருவாக்கப்பெற்றிருப்பதிலிருந்து இது பின்னைய பெயர் என்பது தெள்ளெனப் புரியவரும்.

முற்காலத்தில் மத சர்ச்சைகள் தோற்றம் பெற்றிருக்கின்றன. ஆதியில் சைவர்களாக இருந்த நாகர்கள்தான் பின்னர் பௌத்தர்களாக மதம் மாறினார்கள். அவர்கள் பௌத்த விகாரைகளையும் கட்டினார்கள். யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் களனியிலும் நாகர் இயற்றிய விகாரைகள் உண்டு. ஏழாலையிலுள்ள விகாரையும் நாகவிகாரை என்றே வழங்கப்படுகிறது.

அவ்வாறு யாழ்ப்பாணத்தில் தமிழ்ப் பௌத்தர்களால் இயற்றப்பெற்ற பழைய விகாரைகளை ஆதாரமாகக் கொண்டு அங்கு முற்காலத்தில் பௌத்த சிங்கள மக்கள் வாழ்ந்தார்களென்று பேரினவாதிகள் திசை திருப்பி வாதிப்பது போலவே தீகவாப்பியிலும் முற்காலத்தில் பௌத்த சிங்கள மக்கள் வாழ்ந்ததாக சாற்ற முனைகிறார்கள்.

இதற்கு கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்குரிய இரண்டு கல்வெட்டுக்களும் பத்து பழங்கால பௌத்த சின்ன எச்சங்களுமாக பன்னிரண்டு சான்றுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இப்பின்னணியில்தான் மீண்டும் அங்கு சிங்களக் குடியேற்றம் உருவாக்கும் எண்ணம் பேரினவாதிகளுக்குத் தோன்றக் கூடும். ஆனால், அப்பகுதியில் கிடைக்கப்பெற்ற பழங்கால பன்னிரண்டு சான்றுகளை ஆதாரமாகக் கொண்டு அங்கு பௌத்த சமயம் சார்ந்த மக்கள் வாழ்ந்துள்ளார்களெனக் கொள்ளலாமே தவிர இனரீதியாக சிங்கள மக்கள் மட்டும் வாழ்ந்தார்களென கூறமுற்படுவது பிழையான கூற்றாகும். அவ்வாறாயின் முற்காலத்தில் அப்பகுதியில் வாழ்ந்த பௌத்தர்கள் யாரென்ற பூதாகரமான கேள்வி எழுகிறது.

திகவாவி தொடர்பாக சொல்லப்படும் கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்குரிய இரு கல்வெட்டுக்களும் திகவாவியிலிருந்து சுமார் பதினைந்து மைல் தொலைவிலுள்ள கொண்டவெட்டுவான் எனும் இடத்தில் தமிழ் விவசாயிகளால் கண்டெடுக்கப்பட்டதாகும். கொண்டவெட்டுவானில் பரம்பரையாக தமிழ் விவசாயிகளே விவசாயம் செய்து வருகின்றனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)




தமிழ்த்திரையுலகில் தற்போது அனைவரது தூக்கத்தையும் கலைத்துவரும் நாயகி நயன்தாரா.

ரசிகர்களின் கனவுக்கன்னியாகி விட்டார் நயன்தாரா! ஐயா, சந்திரமுகி படங்களில் குடும்பப் பாங்கான கதாபாத்திரத்தில் முத்திரை பதித்தவர் இப்போது கள்வனின் காதலி படத்தில் படுகவர்ச்சியாக நடித்துக் கொண்டிருக்கிறார். சித்திரை வெயிலைப் பார்த்துக் கூசிய கண்கள் நயன்தாராவைப் பார்த்தும் குளுகுளுவென சிலிர்த்தது. அதே வசீகரப் புன்னகையை பளீர் என வீசினார்.

அவரிடம் சென்று நாம் சிறு கேள்விக் கணைகளைத் தொடுத்தோம். அதற்கு அவர் அளித்த பதில்கள் வருமாறு.

*** கள்வனின் காதலி படத்தில் திடீரென கவர்ச்சியாக நடிக்கிறீர்களே? இப்படி நடித்தால்தான் வெற்றி பெற முடியும் என முடிவு செய்துவிட்டீர்களா?**

நான் அதிகமாக விரும்பி நடிப்பது குடும்பப் பாங்கான கதாபாத்திரங்களில்தான். அது எல்லாக் காலத்திலும் நிறைவினைத் தரும்! கள்வனின் காதலி படத்தில் கவர்ச்சியாக நடிக்க வேண்டும் என்று கேட்டார்கள். கதாபாத்திரமும் அப்படி அமைந்திருந்தது. அதனால் நடிக்கிறேன். எனக்கு அதில் எந்தவித தயக்கமும் கிடையாது.

கவர்ச்சி என்பது நாகரீகமான முறையில் வெளிப்பட்டால்தான் பார்த்து ரசிக்க முடியும். முகம் சுளிக்கிற அளவுக்கு நான் நடிக்க மாட்டேன். இப்போது நான் ரசிக்கும்படியாக இல்லையா?

*** அழகாக இருக்கிறீர்கள்! அதிக சம்பளம் கொடுத்தால் அதிகமாக கவர்ச்சி காட்டி நடிக்கிறீர்கள் என்று பேசப்படுகிறதே?**

கதாபாத்திரத்துக்குத் தகுந்த மாதிரித்தான் நடிக்க முடியும். பணத்திற்காக கதாபாத்திரத்தை மாற்ற முடியுமா? நல்ல கதையில் என்னுடைய கதாபாத்திரம் சிறப்பாக அமைந்தால் நான் நடிக்க ஒப்புக் கொள்கிறேன். கள்வனின் காதலி படத்தில் எனது கதாபாத்திரம் சிறப்பாக அமைந்திருக்கிறது. நீங்களே படத்தைப் பார்த்துவிட்டு என்னைப் பாராட்டுவீர்கள்?

*** தமிழ்த் திரையுலகிற்கும் மலையாளத் திரையுலகிற்கும் வித்தியாசம் தெரிகிறதா?**

நான் மலையாளத்தில் நடித்துக் கொண்டிருக்கும்போதுதான் தமிழ்ப்பட வாய்ப்புக் கிடைத்தது. அங்கு பிஸியாக இருந்ததால் உடனே ஒப்புக் கொள்ளவில்லை. கொஞ்சம் கால அவசாசம் கேட்டுத்தான் ஏற்றுக்கொண்டேன். தமிழில் நடிப்பது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. இரண்டு மொழிப் பட உலகுக்கும் பெரிய வித்தியாசம் எதுவும் கிடையாது! மலையாளத் திரையுலகம் சிறியது. தமிழ் திரையுலகம் பெரியது. இங்கு உள்ள டெக்னீஷியன்கள் போலத்தான் அங்கும் இருக்கிறார்கள். நான் தமிழ் மக்களுக்குத் தலை வணங்குகிறேன்.

***தமிழ் மக்களை விரும்புவது சரி! தமிழ் இளைஞனை திருமணம் செய்து கொள்வீர்களா?**

ஓ! யெஸ்! நிச்சயமாக. கல்யாணம் பற்றி இப்போது சிந்திக்க நேரமில்லை. எல்லா விதமான கதாபாத்திரங்களிலும் நடித்துப் புகழ் பெற வேண்டும். அதுதான் இப்போது என் லட்சியம்! கனவு! (சரி தமிழ் இளைஞர்கள் நீங்களும் விண்ணப்பிப்பதற்குத் தயாராகலாம்)

*** காதல் வயப்பட்டது உண்டா?**

இல்லை. காதல் என்பது தானாக அரும்பி அதன் பிறகு உணர வேண்டும். அது இப்போது உணர்வோ, அரும்பவோ அனுமதிக்க மாட்டேன். காதலை விடத் திறமை மீது நம்பிக்கை வைத்து அதனை செயற்படுத்தி வெற்றி பெறவே விரும்புகிறேன். தொழில் மீது தான் இப்போது காதலும் பக்தியும் இருக்கிறது.


'சந்திரமுகி' -நயன்தாரா-

*** நயன்தாரா என்ற பெயரின் அர்த்தம் யாது?**

நயன் என்றால் கண்களில் பாவனை! தாரா என்றால் நட்சத்திரம். நட்சத்திரக் கண்கள் என்று கூடச் சொல்லலாம். பெங்காலி மொழியில் போம் என்று சொல்வார்கள். மலையாளத்தில் அன்னப்பறவை என்று அர்த்தம். எனக்கு கண்கள் அழகாக இருக்கிறதென்று தோழிகள் சொல்வார்கள். முன்பு மாடலிங் வாய்ப்புகள் தேடி வந்தது. விடுமுறை நாட்களில் நடிக்கத் துவங்கினேன். இப்போது அதுவே தொழிலாகிவிட்டது. மலையாளத்தில் மூன்று, தமிழில் மூன்று படங்கள் நடித்துவிட்டேன். தெலுங்கில்கூட அழைக்கிறார்கள். கால்ஷீட்தான் இல்லை.

*** உங்கள் குடும்பம் பற்றி?**

அழகான, இனிமையான குடும்பத்தில் பிறப்பதற்கு தவம் செய்ய வேண்டும் என்பார்கள். நான் தவம் வாங்கிப் பிறந்தேனா அல்லது வரம் பெற்று பிறந்தேனா என்று தெரியவில்லை. கேரளாவில் உள்ள திருவல்லாதான் என் சொந்த ஊர். அப்பா சி.கே.குரியன். அம்மா ஓமனா. ஒரு அண்ணன். அதில் நான் கடைக்குட்டியும், செல்லக் குட்டியும்கூட. எனக்கு சி.ஏ. படிக்க ஆசை! என்றார்.


'ஐயா' நயன்தாரா-

## தந்தையைப்போல சகல ...



அப்பாவுக்கு தப்பாத பிள்ளை சிம்பு. குணமாகட்டும்,, கோபமாகட்டும்,, திறமையாகட்டும்,, இன்னொரு தாடி வைக்காத ராஜேந்தர். ஆனால் அடுக்குமொழி பேசாத துடுக்கு பிள்ளை சிம்பு. இவர் தான் இயக்கிய மன்மதன் படத்தின் மூலம் தன்னிடமுள்ள திறமைகளை வெளிக்காட்டியிருக்கிறார்.

இவரின் வளர்ச்சியைப் பார்த்தால் தந்தையைப்போலவே எதிர்காலத்தில் நடிகர், கதை, திரைக்கதை, வசனம், இயக்கம், பாடல்கள், இசை, எடிட்டிங், படப்பிடிப்பு என அனைத்திற்கும் சேர்த்து சிம்பு என்ற தலைப்பைப் போடுவார் போலத் தெரிகிறது. (பரவாயில்லை எழுத்துக்களுக்கு செலவிடும் நேரம் குறைவாகும்)

மன்மதன் படத்தின் டைட்டிலில் இயக்குனர் பெயர் வேறாக இருந்தாலும் அப்படத்தை இயக்கியது சிம்புவேதான் என்பது அனைவருக்கும் தெரிந்தவிஷயம்.

இவர் அடுத்து நடிக்கப் போகும் வல்லவன் படத்திலும் அதேபோல் ஒரு டம்மி இயக்குனரை வைத்துக் கொள்ளலாமா என்று ஆரம்பத்தில் யோசித்தார்கள். பிறகு சிம்புவின் பெயரையே

## சரணின் புதிய பட புதிய நாயகி காம்னா



இந்தியாவுக்கே பிரசித்தமானவர் தாத்தாவின் பெயர் ராம் ஜெத்மலானி, பேத்தியின் பெயர் காம்னா! தன்னுடைய புதுப் படத்திற்கு ஹீரோயின் தேடிக் கொண்டிருந்த சரண் மும்பையில் பார்த்த பொம்மைதான் காம்னா. ஆனால், இன்ரநெட்டில் தேடிக் கண்டுபிடித்ததாக அவர் பெருமையடித்துக் கொள்வது வேறு விஷயம்!

இதயத்திருடன் படத்தில் காம்னாவின் இதயத்தை திருடப் போவது ஜெயம் ரவி.

## சிநேகாவுக்கு மிரட்டல்

சிட்டிசன் படத்திற்குப் பிறகு ஷரவண சுப்பையா இயக்கும் படம் ஏபிசிடி. இதில் சிநேகா கதாநாயகி. ஏற்கனவே துணிமணி உட்பட பல விஷயங்களில் டார்ச்சர் பண்ணிய சிநேகா சமீபத்தில் ஊட்டிக்கு படப்பிடிப்புக்கு போயிருந்த போது குளுகுளு கேரவேன் கேட்டாராம்.

ஊட்டியில் போய் கேரவேன் எதற்கு ? அதைச் சென்னையில் இருந்துதான் கொண்டுவர வேண்டும். ஊட்டியே குளுகுளு என்றுதானே இருக்கிறது என புரொடக்ஷன் மேனேஜர் சொல்ல சிநேகா டென்ஷன் ஆகிவிட்டார்.

சிநேகா டென்ஷன் ஆனதால் படப்பிடிப்புக்கு ஒத்துழைக்க மாட்டாரோ என்று பயந்த ஷரவண சுப்பையா புரொடக்ஷன் மேனேஜரைப் பார்த்து சவுண்டு விட அவரோ கிளம்பி சென்னைக்கு வந்துவிட்டார்.

எப்படியோ படப்பிடிப்பு முடிந்து சென்னை திரும்பினர். அடுத்து செட்யூல் கும்பகோணத்தில்! ரயிலில் ஏசி கோச்சில் சிநேகாவுக்கு டிக்கெட் போடப்பட்டிருந்தது. ஆனால் என்னால் ரயிலில் எல்லாம் வரமுடியாது. ஏசிவேன் ஏற்பாடு பண்ணுங்க என சிநேகா தரப்பில் சொன்னதோடு ரயிலையும் தவறவிட்டுவிட்டனர். பொறுமையிழந்த புரொடியூசர் சிநேகா வீட்டிற்கு போன் போட்டார்.

நாளைக்கு காலையில் கும்பகோணத்தில் இருக்கணும். வரலைன்னா- நடக்குறதே வேற என மிரட்டல் விட துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்கிற கதையாய் தனது காரிலேயே கிளம்பிக் கும்பகோணம் போய் நின்றாராம் சிநேகா.

## சூர்யா - த்ரிஷா இணையும் ஆறு

ஒரு வார்த்தை ஒன்பது பொருள் தரும். அப்படியொரு வார்த்தை ஆறு!

ஆறு என்பது எண். ஆறு என்பது நதி. ஆறு என்பது அடங்குவது. அதனால்தான் ஆறுவது சினம் என்றார்கள். ஆனால், அடங்க மறுத்து தன்போக்கில் செல்லும் காட்டாறு சூர்யா. நூறுசதவிகித அக்ஷனுடன் தயாராகிறது ஹரி இயக்கும் ஆறு.

சரண் தயாரிப்பு. ஆனாலும் இவரது ஆஸ்தான இசையமைப்பாளர் பரத்வாஜ் இசையமைக்கவில்லை. ஹரியின் ராசியான ஹரிஸ் பெயராஜும் இல்லை. அதிஷ்டம் அடித்திருப்பது தேவி ஸ்ரீ பிரசாத்துக்கு. ஹரி படங்களுக்கு தொடர்ந்து ஒளிப்பதிவு செய்துவரும் ப்ரியன் கேமிராமேன். எடிட்டிங் வி.டி.விஜயன்தான்.

இதுவரை மதுரை, நெல்லை, நாகர்கோவில், கோவை என தென்னக நகரங்களை மையமாக வைத்து படம் எடுத்துவந்த ஹரி முதன் முறையாகத் தலைநகருக்கு வருகிறார். 'ஆறு' படம் முழுக்க சென்னையை மையப்படுத்தியது.

தெலுங்கில் ஹரிகோட்டை ராக்கெட்டாக டபரே சென்று கொண்டிருக்கும் த்ரிஷா, 'ஆறு' கதைபிடித்து நடிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார். 'சாமி' மாமியாக த்ரிஷாவுக்கு 'ப்ரேக்' கொடுத்துவிட்டார் ஹரி அல்லவா. தீபாவளிக்கு இப்படம் வெளியாகவுள்ளது.

## மணியின் ...

தற்போது நடித்துவரு...
ஏற்றாவாறே தன்னை...
முதலிடத்தில் திகழ்பவர்...
வெளியாக ... '...
தொடர்ந்து அவர் நடிக்க...
மணிவண்ணனின் ம...
ளார்.

மலையாளத்தில மம்...
மெகா ஹிட்டான படம்...
களும்! '' திருடுவ...
கக் கொண்ட ஒரு கு...

அப்பா இரண்டு...
றிய கதை. மலையா...
வும் ஒரு மகனாக...
தார். இப்போது...
தயாரிக்கி...
ஹீரோ...

இ...
மூத்த...
மகனாக...
கதாநாயகி...
வியிருக்கிறார்...
யாக இருப்பதால்...
ருக்கிறது.

## மே 22 ...

அசத்தல்! ஒரே வார்...
பார்த்தவர்கள். தமிழ் சி...
படம். அதன் அறுவடை...
துள்ளார் ஆஸ்கார் பிலி...

அந்நியனை வாங்க...
தமிழ் மற்றும் கேரளா, க...
சந்திரன்.

ஷங்கர் படத்தின் மற்...
எனப்படும் வெளிநாட்டு...
வெளிநாடுகளிலும் ரவ...
கிறார்.

பாடல்களைப் பொ...
மலைறந்து ரண்டக்க ரண்...

ஏ.ஆர்.ரஹ்மான் என்...
கிறவர்களும் உண்டு.

மே 22 இல் 'அந்நிய...
அளவில் தமிழ்சினிமா...
கொஞ்சம் ராயலாக...

## சர்ச்சை தொ...

காய்ச்சமரம் தான் கல்லடி படும் என்று எந்த பிரகஸ்பதி சொன்னாரோ. கையில் கிடைக்கும் போதெல்லாம் ஒரு கல்லெறிந்து விட்டுப் போகிறார்கள் ஒவ்வொருவரும். சச்சின் திரைக்குவரும் முன்பாகவே இப்படத்தில் இடம்பெற்ற ஒரு பாடல் குறித்து சர்ச்சையை கிளப்...


'சச்...
-விஜய், ...

# தலையிலும் கலக்கும் சிம்பு


'தொட்டி ஜெயா' சிம்பு, கோபிகா-

போட்டுக் கொள்ளலாம் என்று முடிவெடுத் திருக்கிறார்கள்.

ஏ.வி.எம். ஸ்டூடியோவில் நான்கு நாட்களாக இப்படத்தின் விளம்பரங்களுக்கு தேவையான போட்டோ செலக்ஷன்களை எடுத்துக் கொண்டிருக்கிறார் சிம்பு. வல்லவனில் அவருடன் ஜோடி சேர்வது யார் யார் தெரியுமா? நயன்தாரா, சந்தியா, ரீமாசென்!

கதாநாயகிகள் மட்டுமல்ல... எடுத்துக் கொள்கிற வேலையிலும் ஒன்றுக்கும் மேற்பட்ட சாய்ஸ்தான் அவருக்கு. கதை, திரைக்கதை, வசனம், எடிட்டிங், டைரக்ஷன் என்று அதிகாரபூர்வமாக களத்தில் இறங்கப் போகிறார் சிம்பு.

முன்னதாக வல்லவன் தயாரிப்பாளர் தேனப்பன் தயாரித்த கனா கண்டேன் பட பாடல்களை திரையிட்டுப் பார்த்தாராம். ஒவ்வொரு பாடலையும் திரும்பத் திரும்ப போடச்சொல்லி பார்த்தவர். படத்தின் நாயகன் ஸ்ரீகாந்தையும், இயக்குனர் கே.வி.ஆனந்தையும் தொலைபேசியில் அழைத்து பாராட்டித் தள்ளினாராம்.

# தமிழ்நாட்டு மருமகளாகும் நடிகை ஐஸ்வர்யா



அழகுப் பதுமை ஐஸ்வர்யா தமிழ் நாட்டின் மருமகள் ஆகப் போகிறார். இந்தி நடிகர் விவேக் ஒபராய் சமீபத்தில் அளித்த பேட்டி ஒன்றில் தனக்கும் ஐஸ்வர்யாவுக்கும் கடந்த இண்டு வருடங்களாக இருந்த காதலை ஒப்புக் கொண்டிருக்கிறார். விரைவில் இருவரும் திருமணம் செய்துகொள்ளப் போவதாகவும் அந்த பேட்டியில் சொல்லியிருக்கிறார்.

இந்த விவேக் ஒபராய் தமிழ் நாட்டுக்காரர் என்கிறார்கள். இவருடைய அம்மாவும் நடிகர் சத்யராஜும் உறவினர்களாம். விவேக் ஒபராயின் பேட்டி வந்தவுடன், சத்யராஜை துளைத்தெடுத்த மீடியாக்களிடம், தானும் விவேக் ஒபராயும் உறவினர்கள்தான் என்ற உண்மையை ஒப்புக்கொண்டிருக்கிறார் சத்யராஜ். இந்த உறவு முறை எப்படி என்று கேட்டால் மயக்கம் போட்டு விழுகிற மாதிரி பதில் வருகிறது சத்யராஜிடமிருந்து. மொத்தத்தில் இருவரும் உறவு என்றே வைத்துக் கொள்வோம். ஆனால், இதையும் மீறித்தன் மனிதாபிமானத்தால் தமிழகத்தையே தன் சொந்தமாக்கி கொண்டுள்ளார் விவேக் ஒபராய். அதனால் ஐஸ்வர்யாவை வா மருமகளே வா என்று அழைப்பதில் வாயாரப் பெருமைப்படுகிறான் தமிழனும் அவனது குடும்பமும்!

# மகனாக விக்ரம்

...துவரும் நடிகர்களில் தனது வேடத்திற்கு ...னை மாற்றிக்கொள்ளும் நடிகர்களுள் ...பவர் நடிகர் விக்ரம். இவர் நடித்து ...ள் 'அந்நியன்' படத்தைத் ...நடிக்க உள்ள ஒரு படத்தில் ...ர் மகனாக நடிக்கவுள்

...ம மம்முட்டி நடித்து ...டம் ''தொம்ம...னும் மக் ...வதையே ... தொழிலா ... குடும் ... பத்தின் கதை! ...ண்டு ... மகன்களைப் பற் ...ா ... ளத்தில் அப்பாவாக ...வும் மம்முட்டி நடித்திருந் ... அந்தப் படத்தை தமிழில் ...றார் ராக்லைன் வெங்கடெஷ். ... விக்ரம்.

இதில் அப்பாவாக மணிவண்ணன். ...ூத்த மகனாக விக்ரமும், இன்னொரு ...ாக மலையாளப் புதுமுகம். படத்திற்கு ...யகியாக த்ரிஷாவைப் போடச் சொல் ...றார் விக்ரம். தெலுங்கில் த்ரிஷா பிஸி ...தால் பேச்சுவார்த்தை நடத்து கொண்டி...

# எஸ்.ஜே.சூர்யாவுடன் ஆட்டம்போடும் கரீனா

எஸ்.ஜே.சூர்யா தற்போது நடித்துவரும் 'அ...ஆ... வைத் தொடர்ந்து நடிக்கும் படம் 'கள்வனின் காதலி. இவர் குஷி படத்தின் ஹிந்தி ரிமேக்கில் நாயகியாக நடித்தவர் கரீனா கபூர். அந்த நேரத்தில் பாலிவூட்டில் டவுனாகியிருந்த தனது மார்க்கெட்டை சூர்யாவின் குஷி படம் தூக்கி நிறுத்தியது. இதனால் மிகவும் சந்தோஷமான கரீனா இதற்குக் கைமாறாக நீங்கள் கேட்கும் உதவியைச் செய்வேன் என்று சூர்யாவிடம் சொன்னார்.

அதற்கான சந்தர்ப்பம் இப்போது கரீனா கபூருக்கு கிடைத்துள்ளது. எஸ்.ஜே. சூர்யா நடிக்கும் கள்வனின் காதலி படத்தில் ஒரே ஒரு பாடலுக்கு ஆடிவிட்டுப் போகுமாறு கரீனாவிடம், எஸ்.ஜே. சூர்யா கோரிக்கை வைக்க அம்மணியும் சந்தோஷமாக தலையாட்டிவிட்டாராம்.

பாலிவூட்டின் கனவுக் கன்னி கரீனாவை தமிழில் அறிமுகம் செய்யும் வாய்ப்பு தனக்கு அமைந்ததில் எஸ்.ஜே.சூர்யா குஷியில் இருக்கிறார். பரவாயில்லை குஷியில் பிறந்த நட்பு குஷியிலேயே முடிந்திருக்கிறது.


'சத்துரியன்' -குணால், நந்தனா-

# ...2 இல் அந்நியன் ரிலீஸ்

...வார்த்தையில் சொல்லிப் போகிறார்கள் 'அந்நியன்' ட்ரெயிலர் ...ழ் சினிமா அண்ணாந்து பார்க்கும் அளவிற்கு வந்திருக்கிறது ...டை — பதரோ கதிரோ— தானே அனுபவிப்பது என முடிவெடுத் ...பிலிம்ஸ் ரவிச்சந்திரன்.

...ாங்க முட்டி மோதுகிறார்கள் விநியோகஸ்தர்கள். ஆனால், ...ா, கர்நாடகத்தில் தானே சொந்தமாக ரிலீஸ் செய்கிறார் ரவிச்...

...ா மற்றொரு வியாபார ஏரியா வெளிநாடுகள். எப்.எம்.எஸ் ...நாட்டு உரிமையையும் யாருக்கும் இவர் விட்டுத்தரவில்லை. ...ம் ரவிச்சந்திரனே நேரடியாக 'அந்நியன்' ரிலீஸ் செய்...

...பொறுத்தவரையில் ரசிகர்களின் நாவில் லக்கலக்க ...ரண்டக்க குடியேறியிருக்கிறது. ...ா என்றால் அதன் வீச்சே தனி என்று ஆதங்கப்படு...டு.

...ந்நியன்' தியேட்டர்களுக்கு வருகிறது. இந்திய ...ிமாவின் தரத்தைப் பேசப்போகும் படம் இது. ...ாகவே வரவேற்போம்.

# ...டரும் சச்சின்

...பினார். சங்கர் தாதா எம்.பி.பி.எஸ் என்ற படத்தின் உரிமையாளர். அவர் கூறிய புகார் கோர்ட் வரைக்கும் போய் பரபரப்பை ஏற்படுத்தியது. சங்கர் தாதா படத்தில் வரும் நாபேரு காஞ்சனா மாலா என்ற பாடல் மெட்டில் சச்சின் படத்திலும் ஒரு பாடலை உருவாக்கியிருந்தார் இசையமைப்பாளர் தேவிஸ்ரீபிரசாத். அந்த பாடலை சச்சின் படத்தில் பயன்படுத்தியதற்காக சங்கர் தாதா தரப்பில்கேட்ட தொகை எவ்வளவு தெரியுமா? கிட்டத்தட்ட ஒரு கோடியாம். பின்னர் ஏதோ பேசி முடித்து அந்த பாடலை இடம்பெறச் செய்தார்கள். அதுவும் படம் ரிலீஸ் ஆன சில நாட்கள் கழித்து.

இப்போது பிரச்சினை வேறொரு ரூபத்தில் வந்திருக்கிறது. குண்டு மாங்கா தோப்புக்குள்ளே என்று இன்னொரு பாடல் மூலம் வந்திருக்கிறது இந்தப் பிரச்சினை. தெலுங்கு பட அதிபர் சுபாரெட்டி என்பவர் உயர் நீதிமன்றத்தில் ஒரு மனுவை தாக்கல் செய்திருக்கிறார். நல்ல தீர்ப்பு வரும் என்று இரு தரப்பும் காத்திருக்கிறது.

...சச்சின்' ...், பிபாஷா-


-தியா-

# எப்படியும் நடிக்கத் தயார் -தியா

நடிகை தியா நடித்த படங்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். ஆனால், இன்றைய கனவுக்கன்னிகள் பட்டியலில் தியாவுக்கு ஒரு அழுத்தமான இடத்தைக் கொடுத்திருக்கிறார்கள் ரசிகர்கள். சிரித்தால் கன்னத்தில் விழுகிற குழியில் தினம் தினம் விழுந்து சிராய்த்து செல்கிற ரசிகர்களுக்காகவே அடிக்கடி சிரித்து வைக்கிறார் தியா! இந்தக் கன்னக்குழியை யாராவது ஹீரோக்கள் பாராட்டியிருக்கிறார்களா என்றால், அதற்கும் ஒரு சிரிப்பு சிரித்து சிராய்ப்பை கொடுக்கிறார்! ...நான் என்ன பிரீதி ஜிந்தாவா? ...ன் கன்னக்குழியை ரசிக்க? ...என்ற எதிர்க்கேள்வி வேறு! ...குறும்பு என்ற படத்தில் ...தான் தியா அறிமுகம். ...டுத்த எடுப்பிலேயே ...கவர்ச்சியை கடைவிரித் ...துக் காட்டியதால் தொடர்ந்து ...வருகிற படங்களில் துண்டு ...துக்கடா வேடமும், அதேஅள...வுக்கு துணியும் கொடுக்கிறார்...களாம். நல்லவேளையாக குடும்...ப்பாங்கான வேடம் ஒன்றை ...கொடுத்திருக்கிறார்கள் தற்போது திரைக்கு வந்திருக்கும் கற்க கசடற என்ற படத்தில்! இதில் டான்ஸ் டீச்சராக நடித்திருக்கிறாராம் தியா.

நடிகை என்றால் கவர்ச்சியாகவும் நடிக்கணும், குடும்பப்பாங்கான வேடத்திலும் நடிக்கணும், பைத்தியமாக நடிக்கச் சொன்னாக் கூட நடிக்கணும், அம்மாவாக, பாட்டியாக நடிக்க சொன்னாக்கூட நடிக்கணும் என்கிறார். நடிப்பைப் பற்றிப் பேசினால். விட்டால் பாட்டியாக மாறி பாக்கு இடிப்பார் போலிருக்கிறது. பாட்டியாகவும் நடிப்பேன் என்று இளவயசிலேயே பேட்டி கொடுக்க ஒரு துணிச்சல் வேண்டும். அது இருக்கிறது தியாவுக்கு.

பேச்சில் பக்குவமும், தன்னடக்கமும் இருக்கிறதே. என்ன காரணம்? என்று விசாரித்தால். அவர் பி.எஸ்.சி. சைக்காலஜி படித்தவராம். இதேதுறையில் பி.எச்.டி. பண்ண வேண்டும் என்பதுதான் தியாவின் லட்சியமாக இருக்கிறது. சரி, சைக்காலஜி படித்தது சினிமாவில் எந்த அளவுக்கு உதவியாக இருக்கிறது தியாவுக்கு. சினிமாவில் தினம் தினம் நூறு பேரை சந்திக்கிறேன். யாரிடமும் நான் ஏமாந்துவிட மாட்டேன். என்னைச் சுலபமாக ஏமாற்றிவிட முடியாது. அதுக்கு காரணம் நான் படிச்ச படிப்புத்தான் என்கிறார்.

சிரித்தபடி விடை கொடுக்கிறார். அப்போது அவர் கன்னத்தில் விழுகிற குழியில் நாளைய வெற்றி சொகுசாக படுத்துக் கிடப்பது தெரிகிறது.

# அப்பச்சன் தயாரிக்கவுள்ள இரு படங்கள்

'ப்ரண்ட்ஸ்' வெற்றிப் படத்தைத் தயாரித்த அப்பச்சன் மலையாளி. இவர் சிறிய இடைவேளைக்குப் பிறகு மீண்டும் முழு வேகத்தில் தமிழுக்கு வந்திருக்கிறார்.

இந்தமுறை அப்பச்சன் தயாரிப்பது இரண்டு படங்கள். முதல் படம் இந்த வருட இறுதியில் தயாராகிறது. 'பிரண்ட்ஸ்' பட ஹீரோ விஜய் மீண்டும் அப்பச்சனுடன் இணைகிறார். படத்தை இயக்குகிறார் எஸ்.ஜே.சூர்யா.

இவரின் மற்றைய தயாரிப்பில் நடிப்பவர் தனுஷ். 'இவர் புதுப்பேட்டை', 'திருடன் போலீஸ்' படங்களுக்குப் பின் இந்தப் படத்தில் நடிக்க உள்ளார்.

மலையாளத்தில் திலீப் கதாநாயகனாக நடித்த, 'ரசிகன்' படம் இது. இதில் மோகன்லாலின் ரசிகராகவே திலீப் நடித்திருந்தார். எனவே தமிழில் தனுஷ், ரஜினி ரசிகராக நடித்தால் எப்படி இருக்கும் என யோசித்து வருகிறது தயாரிப்பாளர் தரப்பு.

# முதுமைப் பருவத்தில் ஏற்படும் சிறுநீர்ப் பிரச்சினைகள்

இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்

நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஐயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு - 14

**கேள்வி:— வயது 17, பெண். க.பொ.த உயர்தர பரீட்சைக்கு படித்துக் கொண்டிருக்கின்றேன். எனக்கு அடர்ந்த கூந்தல் இருந்தது. கடந்த ஒரு வருடமாக திடீரென்று மயிர் உதிர்கின்றது. நான் ஆரோக்கியமாக இருக்கின்றேன். வேறு நோய்கள் எதுவுமில்லை. வாரம் ஒரு தடவை 'ஷாம்பூ' உபயோகிப்பேன். இடையிடையே தேசிக்காய், சிகைக்காய் உபயோகிப்பேன். கடந்த ஒரு வருடமாக அயலூரில் வசித்து வருகின்றேன். எனது மயிர் உதிர்தலுக்கு காரணம் என்ன?**

பதில்:— திடீரென்று மயிர் உதிர்ந்ததற்கு உங்கள் கேள்வியில் நீங்கள் தந்த இரண்டு விஷயங்கள் ஒருவேளை காரணமாக இருக்கலாம். மனதில் STRESS என்கிற மன அழுத்தம் அதிகரிக்கும் போது தலைமயிர் உதிரலாம். நீங்கள் இப்போது பரீட்சைக்கு படித்துக் கொண்டிருப்பதாகக் கூறியிருந்தீர்கள். நல்ல முறையில் சித்தியடைந்து — உயர் படிப்பு படிக்கவேண்டும் என்ற எண்ணம் மன இறுக்கத்தைத் தரும். பரீட்சைக்கு தயாராகும் வேளைகளில் திடீரென்று குடும்பத்தில் மனத்தாக்கம் தரக்கூடிய துக்ககரமான விஷயம் நடத்திருக்கும் வேளைகளில், அலுவலகங்களில் TENSION, இறுக்க சூழலில் பணிபுரியும் வேளைகளில் சம்பந்தப்பட்டவர்கள் ஆணாயிருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி அவர்களுக்கு மயிர் உதிர்தல் ஏற்படுவதை எனது அனுபவத்தில் கண்டுள்ளேன். இது ஒரு தற்காலிகமானதே.



மனஇறுக்கத்தை புரிந்து கொண்டு அதனை தரக்கூடிய சூழலை அறிந்து அதற்கேற்ப வாழ்க்கைமுறையை மாற்றி — பரீட்சையில் பாஸ் பண்ணுவது அவசியம் தான். அதற்காக தகுந்த முறையில் படிக்க வேண்டியதுதான். அதைவிட்டு — மன இறுக்கத்தை ஏன் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். என்று நீங்களே அறிந்து கொண்டால் — இந்த STRESS போய்விடும். தலைமயிர் உதிர்தலும் குறைந்துவிடும். பரீட்சையை எதிர்கொள்ளும் துணிவும் வந்துவிடும். எதிர்பார்த்ததைவிட திறமையாக பரீட்சையை எழுதியும் விடுவீர்கள்.

அடுத்ததாக பரீட்சைக்கு தயாராகும் போது பசியின்மை தூக்கமின்மை என்பவை கூட இந்த மன இறுக்கத்தால் ஏற்படும். இதனால் உடலுக்கு தேவையான போசாக்கு குறைவு ஏற்படும். இந்த நிலை கூட மயிர் உதிர்தலை அதிகரிக்கும். எனவே — போஷாக்கான உணவு, அத்துடன் Multi vitamin மாத்திரைகள் ஒவ்வொரு மாணவரும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் காலங்களில் உட்கொள்ள வேண்டும். இந்த மாதிரியான மன இறுக்கத்தால் மாணவிகளின் மாதவிலக்கு வட்டத்தில்கூட ஒழுங்கின்மை ஏற்படுவதுண்டு.

உங்களின் மயிர் உதிர்தலுக்கு அடுத்த காரணம் நீங்கள் உங்கள் ஊரைவிட்டு வந்து வேறு ஊரில் கடந்த ஒரு வருடமாக இருப்பது. கிணற்று நீரின் கடினத்தன்மை ஊருக்கு ஊர் வித்தியாசமானது. இந்த வித்தியாசம் கூட தலைமயிர் உதிர்தலுக்கு காரணம். வேறு இடங்களிலிருந்து — கொழும்புக் குடிதண்ணீரில் கலந்திருக்கும் குளோரின் மருந்து நிமித்தம் தலைமயிர் உதிர்வதை அனுபவப்பட்டுள்ளார்கள். எனவே தற்காலிகமாக ஏற்பட்டுள்ள இந்த பிரச்சினையை மறந்து படிப்பில் கருத்தூன்றுங்கள்.

**கேள்வி:— ஆண், வயது 76. நினைத்தவுடன் சிறுநீர் வந்துவிடுகிறது. சிறுநீர் போவதை அடக்க முடியாது. சிறுநீர் கழிக்கும் போது தூரத்தில் விழாமல் வேகம் குறைந்து ஒழுகுகின்றது. இரவில் அடிக்கடி எழுந்து சிறுநீர் கழிக்க வேண்டியுள்ளது. அப்படி சிறுநீர்கழித்தாலும் குறைவாகத்தான் போகின்றது. இதனால் தூக்கம் கெட்டு — உடம்பு களைப்பாக இருக்கின்றது. இது என்ன நோய். சிறுநீரைப் பரிசோதித்து பார்த்ததில் தொற்றுகள் எதுவுமில்லை என்கிறார்கள். பரிகாரம் கூறவும்.**

பதில்:— உங்களுக்கு ஏற்பட்டுள்ளது புரஸ்ரேற் (Prostate) சுரப்பி கோளாறு என்று நீங்கள் தந்துள்ள விஷயங்களைக் கொண்டு தீர்மானிக்கமுடிகின்றது.

சிறுநீர்ப்பையின் கழுத்துப்புறத்தில் சிறுநீர் குழாயை வளைத்து புரஸ்ரேற் சுரப்பி அமைந்துள்ளது. இந்தசுரப்பியிலிருந்து வரும் சுரப்பு, விந்தணுக்களைபோஷிக் கின்ற, எடுத்து செல்கின்ற திரவத்தன்மையை விந்துவுக்குத் தருகின்றது. சிறுவயதில் சிறு கஜூக்கொட்டை வடிவில் உள்ள இந்த சுரப்பி, வயதாகும் போது மெல்ல மெல்ல பெருத்து வளர்கிறது.

ஐம்பது வயதுக்கு பின்னர் இந்த வளர்ச்சி பொதுவாக காணப்படுகிறது. இந்த வளர்ச்சியினால் சிறுநீர்க்குழாய் அழுத்தப்பட்டு சிறுநீர் கழிப்பது கஷ்டமாகிறது.

ஆரம்பத்தில் சிறுநீர் கழிக்க ஆரம்பிக்க கஷ்டமாயிருக்கும். பின்னர் சிறுநீர்ப்பையில் உள்ள சிறுநீர் முற்றாக வெளியேறாமல் இருப்பதால் அடிக்கடி — அதுவும்இரவில் சிறிதளவு, பலதடவை — சிறுநீர் கழிக்கவேண்டி ஏற்படும். நினைத்தவுடன் அடக்க முடியாமல் சிறுநீர் கழிக்கும் அவசரம் ஏற்படும். சிறுநீரின் அளவும், கழிக்கும் வேகமும் குறைவதால் — சிறுநீர் கழித்த பின்னரும்சொட்டு சொட்டாக சிறுநீர் கசியும்.

ஆரம்பகாலத்தில் சிறுநீர்ப் பரிசோதனையில் எதுவும் கண்டறியமுடியாது. அடிக்கடி— அதுவும் இரவில் அடிக்கடி — சிறுநீர் கழிவதால் டயபட்டீஸ் என்ற சர்க்கரை வியாதி என்று பலர் உங்களைப்போல சந்தேகப்படுவதுண்டு. ஆனால்,சிறுநீர் கழிக்கும் போது சிறுநீர்ப்பை முற்றாக வெறுமை அடையாததால், மீதி தேங்கிநிற்கும் சிறுநீர் தொற்று ஏற்பட வாய்ப்புண்டு.

எனவே நீங்கள் ஒரு சத்திர சிகிச்சை நிபுணரை சந்திக்க வேண்டும். அவர் உங்கள் மலவாசலூடாக உங்களைச் சோதித்து உங்கள் புரஸ்ரேற் சுரப்பி வீங்கியிருக்கின்றதா என்பதை அறிந்து கொள்வார். அத்துடன் ஆண்களுக்கு வரும் புற்றுநோய்களில் புரஸ்ரேற் சுரப்பியில் ஏற்படும் புற்றுநோய் முதலிடம் வகிப்பதால் உங்கள் இரத்தத்தை பரிசோதனை செய்து அதனையும் அறிந்து கொள்வார். சில வேளைகளில் சத்திரசிகிச்சை செய்து கொள்ளும்படி அறிவுறுத்தவும் கூடும்.

**கேள்வி:— வயது 20. எனக்கு நினைவு தெரிந்த மட்டில் — சிறு வயதிலிருந்தே— எனக்கு மூக்கால் எந்த வித மணத்தையும் நுகரமுடியாது. எத்தனையோ வைத்தியம் செய்தும் பலன் கிடைக்கவில்லை. பரிகாரம் கூறவும்.**

பதில்:— உங்களுக்கு ஏற்பட்டுள்ளது Anosmia என்ற மணங்களை நுகரும் புலன் உணர்வு இல்லாமலிருப்பதே.

எங்கள் மூக்கினுள் தோலில் மணங்களை நுகர்வதற்குரிய நுகரும் நரம்புக் கலங்கள் உள்ளன. இவற்றை ஆங்கிலத்தில் Smell Receptors என்று அழைப்பார்கள். இந்த கலங்கள் மூக்கையும் — மூளையையும் பிரித்து நிற்கின்ற மண்டை ஓட்டின் ஒரு பகுதியான Cribriform எலும்பினூடாக Olfactory Nerve என்று அழைக்கப்படுகின்ற நுகர்வுணர்வு நரம்போடு சேர்ந்து கொள்கின்றன.

எமது நுகரும் உணர்வுகள் இந்த நரம்பினூடாக, மூளையின் ஒரு பகுதியான Temporal Lobe இல் உள்ள நுகர் உணர்வை அறியக்கூடிய மையப் பகுதிக்கு அனுப்பப்பட்டு மணங்களை நாம் அறிய உதவுகின்றன. இந்த நரம்புப் பாதையில் ஏதாவது ஒரு பகுதி பாதிக்கப்பட்டால் எமக்கு எதனையும் மணக்கமுடியாது. நீண்ட நாள் சளி தொந்தரவு, இன்புளுவன்சா காய்ச்சல் என்பவை நுகரும் நரம்புகளைத் தாக்குவதால் நுகர்வுணர்ச்சி இல்லாமல் போகலாம்.

இது தற்காலிகமான இழப்பே ஒழிய நிரந்தரமானதல்ல. ஆனால் மண்டை ஓட்டில் ஏற்படும் உடைவுகள், மற்றும் விபத்துக்களில் முகத்தில் ஏற்படும் தாக்கங்கள் என்பன Cribriform எலும்பை தகர்ப்பதால் அதனூடாக செல்லும் நரம்புகள் பாதிக்கப்பட்டு நிரந்தரமாக நுகர் உணர்வு அற்றுப்போகலாம். திடீரென்று இந்த நிலை ஏற்பட்டால் மூளையில் ஏற்படும் புற்றுநோய் காரணமாக இருக்கலாம்.

உங்கள் வினாவின்படி உங்களுக்கு நினைவு தெரிந்த காலத்திலிருந்து நுகரும் உணர்வை இழந்திருப்பதாக அறிய முடிகிறது. எனவே, புற்றுநோய் இதன் காரணமாக நிச்சயம் இருக்காது. சிறுவயதில் தலையில் ஏற்பட்ட விபத்துகள், சிலவேளை உங்கள் நரம்பை பாதித்திருக்கலாம்.

இவ்வளவு காலம் இந்த உணர்வு உங்களுக்கு இல்லாததால் — இனியும் வைத்தியம் செய்து — உணர்வை மீட்கலாம் என்று எனக்கு நம்பிக்கையில்லை. இந்த உணர்வு இல்லாதது பெரிய இழப்பு இல்லாவிடினும் வாழ்க்கையின் ஒரு சில அரிய இன்ப உணர்வுகளை உங்களால் அறிய முடியாது என்பது துக்ககரமானதே. உணவின் ருசியைக் கூட நுகரும் உணர்வு இருக்கும் போது தான் ரசிக்க முடிகிறது. சளிசுரத்தினால் இந்த உணர்வு தாற்காலிகமாக பாதிக்கப்பட்டவர்கள் இந்த உண்மையை உணர்வர்.



# திகவாவியும் தீர்த்தவாவியும்!.....

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்று இவ்விரு கல்வெட்டுகளும் அம்பாறை கச்சேரி முன்னால் நாட்டப்பெற்றுள்ளன.

அம்பாறை கச்சேரிக்கு முன்னால் இவ்விரு கல்வெட்டுகளும்இலங்கை அரசினால் நாட்டப்பெற்றிருப்பதற்கு அவசிய காரணம் என்ன? தொல்பொருள் திணைக்களகாட்சி சாலையிலேயே கல்வெட்டுக்கள் பேணப்படுவது வழக்கம். அப்படியிருக்க இவ்விரு கல்வெட்டுகளும் அம்பாறை கச்சேரி வாயிலில் நாட்டப்பெற்றிருப்பது ஏன்? தமிழ்ப் பிரதேசத்தில் பாரிய சிங்கள குடியேற்றம் செய்ததை மூடி மறைப்பதற்காகவே இக்கல்வெட்டுக்கள் அங்கு நாட்டப்பெற்றனவா? பண்டைக்காலத்தில் அங்கு சிங்களவர்கள் வாழ்ந்தார்களென்ற மாயையை தோற்றுவிக்கவே இக்கல்வெட்டுக்கள் அங்கு காட்சிப் பொருளாக நிலைநிறுத்தப்பட்டனவென்றால் அதற்கு கல்வெட்டுக்களில் சான்றாதாரம் எதுவுமில்லை என்பதே உண்மை.

இக்கல்வெட்டுக்கள் சிங்கள எழுத்துக்களில் எழுதப்பெற்றிருக்கவில்லை என்பது கவனத்திற்குரியது. சிங்கள எழுத்து வடிவம் கி.பி. எட்டாம் அல்லது ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முன் தோற்றம் பெற்றிருக்கவில்லையாகையால் இக் கல்வெட்டுக்கள் எப்படி சிங்கள எழுத்தில் எழுதப்பெற்றிருக்க முடியும்? ஆதலின் சிங்கள எழுத்து வடிவம் தோன்றுவதற்கு பல நூறு ஆண்டுகளுக்கு முந்திய மேற்சொன்ன இருகல்வெட்டுக்களிலும் தமிழ்ப்பிராமி எழுத்துவடிவங்களும், அசோக பிராமி எழுத்து வடிவங்களுமே காணக்கிடக்கின்றன. இவ்விரு கல்வெட்டுக்களிலும்முள்ள வாசகம் பொதுவானது. இவ்வாசகத்தினை ஆதாரமாகக்கொண்டு அப்பகுதியில் பௌத்த சிங்கள மக்கள் முற்காலத்தில் வாழ்ந்தார்களென்ற கூற்றை நிலை நாட்ட முடியாது. பெரும்பான்மை தமிழ்ப்பிராமி எழுத்துக்களும் சொற்ப அளவு அசோகபிராமி எழுத்துக்களும் கலந்து பொறிக்கப்பட்டுள்ள மேற்சொன்ன இரு கல்வெட்டுக்களின் வாசகம் வருமாறு!

'இக்குளத்துத் தண்ணீரை விவசாயிகள் சேதாரமில்லாமல் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்; இதனை மீறுவோர் தண்டிக்கப்படுவர்.'

கி.மு.இரண்டாம் நூற்றாண்டில் துட்டகைமுனுவின் தம்பியான சதாதிசையினால் (கி.மு.137 — 119) தமிழ்ப்பிரமி அசோக பிராமி எழுத்துக்களில் பொறிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் இக்கல்வெட்டுக்களிலிருந்து அப்பிராந்தியத்தில் மக்கள் வாழ்ந்தார்கள் என்பதையும், விவசாயம் செய்துள்ளார்கள் என்பதையும் அறிய முடிகிறதே தவிர அப்பிராந்தியத்தில் (பௌத்த) சிங்கள மக்கள் வாழ்ந்தார்களென்பதற்கான தரவுகள் எதனையும் காணப்பெறமுடியவில்லை. திகவாவி பிராந்தியத்தில் கிடைக்கப்பெற்ற மேற்சொன்ன இருகல்வெட்டுக்கள்தவிர்ந்த பிற பௌத்த சின்ன சிதைவுகளை ஆதாரமாகக் கொண்டு அப்பிராந்தியத்தில் பௌத்த மக்கள் வாழ்ந்தார்களென்று சொல்லப்படுவது சரியான செய்திதான். ஆனால், அது பௌத்த சிங்கள மக்களா அல்லது தமிழ்ப் பௌத்தர்களா என்பதே கேள்வி!

திகவாவியிலுள்ள விகாரையை கவந்திசனின் இரண்டாம் புதல்வனான சதாதிசை கட்டியதாக சொல்லப்படுகிறது. உண்மையில் அந்த விகாரையின் பெயர் என்ன? திகவாப்பி விகாரையென்றால் அது 'திகுகுல விகாரை' என்றுதான் பொருளமையுமாதலால் இது பொருத்தமான பெயராக தென்படவில்லை. தமிழில் தீர்த்தவாவி என்று வழங்கப்பட்ட பெயரில் புனிதம் உண்டு. ஆனால், அதனை திகவாப்பி என குளத்தின் பெயர் கொண்டு சொல்லும் போது அதில் எந்தவிதமான திவ்வியமும் புலப்படவில்லை. ஆதலால் நாகனால் கட்டப்பட்ட இவ்விகாரை நாகவிகாரையென்ற பெயரால் வழங்கப் பெற்று வந்து பின்னர் சில ஐயங்கள் தோன்றும் வண்ணம் பெயரில் மாறாட்டம் செய்யப்பட்டிருக்கலாம்.

கி.மு.இரண்டாம் நூற்றாண்டில் பட்டிப்பளை ஆறுபிரதேசம் (அம்பாறை) எவ்வாறிருந்தது. அந்நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்து வந்த ஆரியர்கள் திருகோணமலையில் தரையிறங்கி பட்டிப்பளை ஆறு பிரதேசத்துக்கு வந்து அங்கு குடியேறியதாக ஈ.ரி. கன்னங்கரா 'யாழ்ப்பாணமும் சிங்கள பாரம்பரியமும்' எனும் தனது நூலில் கூறியுள்ளார். இதிலிருந்து அங்கு முன்னர் ஆரியர்கள் யாரும் வாழ்ந்திருக்கவில்லை என்ற உண்மை வெளியாகிறது. (வளரும்)

# கனவாகிப்போன காகிதத் தூதுக்கள்

''இரத்தினபுரியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த எட்டுப்பேர் பரிதாபமான முறையில் படுகொலை, மாத்தளையில் பன்னிரெண்டு வயது சிறுமிமீது பாலியல் துஷ்பிரயோகம், 'சி' எழுத்து முன்னணி நடிகை விபசார வழக்கில், கிளிநொச்சிப் பகுதியில் பாரிய வாகன விபத்து. ஆறுபேர் பலி, பேனா நண்பர்கள் பகுதி...''

கையில் கிடந்த செய்திப்பத்திரிகை ஒன்றின் பக்கங்களை புரட்டி மேலோட்டமாக செய்திகளின் தலைப்புக்களை மட்டும் மேய்ந்து கொண்டிருந்த சுதன் 'குறுக்கெழுத்துப்போட்டி' வெளியாகியுள்ள பக்கத்துக்கு வந்ததும் கொஞ்சம் நிதானித்தான்.

''குறுக்கெழுத்துப் போட்டி – 45 இற்குரிய பாராட்டுப்பெறுவோர்கள்'' என்ற உப தலைப்பின் கீழ் சுதனது பெயர், முகவரி வெளியாகி இருந்ததைக் கண்ட சுதனின் மனம் மகிழ்ச்சியில் துள்ளியது. அதேவேளை ''பரிசுக்குரியவரின் பெயர்'' என்பதில் தனது பெயர் வரவில்லையே என்ற சிறு ஏக்கமும் அவனது மனதில் பரவியே இருந்தது.

''பரிசுக்குரியவரின் பெயர்'' என்பதின் கீழ் வெளியாகியிருந்த அதிஷ்டசாலியின் பெயர், முகவரியை அவதானித்த சுதனது மனதில் ஏதோ ஒரு இனம்புரியாத உணர்வு ஒன்று குத்திக் கொண்டது.

''எஸ்.மதுமிதா – இல.26, கந்தர்மடம், யாழ்ப்பாணம்'' என்ற அந்தப் பெயரையும், முகவரியையும் திரும்ப திரும்ப படித்துக் கொண்டிருந்த சுதனது உதடுகள் அவனையும் அறியாமல் ''மதுமிதா'' என்று மென்மையாக உச்சரித்துக் கொண்டது.

அவனது மனம் அவனுக்கு ஓர் அழகான உருவத்தை மூளைக்கு அனுப்பியது. இள மஞ்சள் நிறத்தில் கண்களைக் கவரும் கட்டுடலுடன் காந்தக் கண்களும் கொண்ட இருபது வயது மதிக்கத்தக்க அழுகுப்பதுமையாக மதுமிதா அழகாகச் சிரித்தாள் சுதனது கற்பனைத் திரையில்.

வெற்றுக் காகிதம் ஒன்றை கையிலே எடுத்துக் கொண்ட சுதன் ''அன்புள்ள, மதுமிதா.... உங்களை எனக்கோ அல்லது என்னை உங்களுக்கோ தெரியாது. எனினும் உங்களை பேனா நண்பியாக அடைய ஆசைப்படுகின்றேன்....''

என்ற முகவுரையுடன் அழகான கையெழுத்துக்களால் எழுதி முடித்தான் ஓர் கடிதம்.

*****

''இக்கடிதம் கண்டவுடன் உடன் பதில் போடவும், இப்படிக்கு பேனா நண்பி மது'' என்ற வரிகளுடன் முடிக்கப்பட்டிருந்த அந்தக் கடிதத்தை மூன்றாவது தடவையாகவும் படித்து முடித்தான் சுதன். அவனது மனதில் மகிழ்ச்சிப் பிரவாகம் ஆர்ப்பரித்தது. தீபாவளிக்கு கொளுத்திவிடப்பட்ட சக்கரவாணம் போல் அவனது மனமும் மகிழ்ச்சியில் இராட்டினமாகச் சுழன்று கொண்டிருந்தது. சுதனது முகத்தில் சந்தோசரேகைகள் பிரகாசித்தன. ஏதோ ஓர் வெற்றியை பெற்றுவிட்டவனைப் போல் துள்ளிக்குதித்தவன்

''பெண்ணொருத்தி பெண்ணொருத்தி படைத்துவிட்டான் என்னிடத்தில் என்னிடத்தில் கொடுத்துவிட்டான்....''

என்று பாடிக்கொண்டிருந்த வானொலிப் பெட்டியைப் பார்த்து

''நிலமை தெரிஞ்ச ரேடியோ''

என்று மின்சாரத்தில் இயங்கிய அந்த சடப்பொருளை பாராட்டியபடி மேசையருகில் உட்கார்ந்தான்; உடன் பதில் எழுதுவதற்காக... முண்டியடித்துக் கொண்டு வார்த்தைகள் பேனாவால் காகிதத்தில் உதிர்ந்து கொண்டிருந்தன.

''அன்புள்ள, மது....... உங்களை நேரில் பார்ப்பதற்கு மிகவும் ஆவலாகவும், ஆசையாகவும் உள்ளது. உங்களது படம் ஒன்று கூட அனுப்ப மாட்டன் என்று அடம் பிடிக்கிறீங்கள்... எங்கள் இரண்டு பேரினதும் மனமும், ரசனையும் ஒரே மாதிரியானவை என்று எமது கடிதங்கள் மூலம் தெரிகிறதல்லவா? ஆதலால் நாங்கள் ரெண்டு பேரும் ஒருவரை ஒருவர் நேரில் சந்திச்சால் பிழையா? நான் என்ன கருத்தை உங்களுக்கு சொல்லவாறன் என்று புரிந்து கொள்வீர்கள் என்று நம்புகின்றேன்... விரைவில் இதற்கு பதிலை உங்களிடம் இருந்து மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றேன். இப்படிக்கு பிரியமுடன் உங்கள் சுதன்'''

என்று எழுதி முடித்த கடிதத்தை ஒரு முறை திரும்பப் படித்து திருப்திப்பட்டுக் கொண்டான்.

''பிரியமுடன் உங்கள் சுதன்''

என்று கடிதம் முடிக்கப்பட்டிருந்தது மதுமிதாவின் மனசுக்குள் இனம்புரியாததொரு மகிழ்ச்சியை கொடுத்தது. இதமான தென்றல் அழகிய ரோஜா இதழில் முட்டிமோதி பின் அவளது மணநுகர்ச்சிக் கலங்களுக்கு




–கருணா–

அளித்த இதமான சுகந்தத்தை ''உங்கள் சுதன்'' என்ற அந்த வரிகள் ஏற்படுத்தியதை அவளது மனம் உணர்ந்தது.

''உங்கள் சுதன்'' என்ற வரிகளை திரும்ப திரும்ப உதடுகள் நோகாமல் உச்சரித்தவள் தனக்குள்ளே வெட்கப்பட்டுக்கொண்டாள். காலச் சக்கரங்கள் சுழன்று கொண்டிருக்க, சுதனும், மதுமிதாவும் காகிதத்தூதுக்கள் மூலம் பேனாநண்பர் பதவியை காதலர் எனும் பதவியாக மாற்றி, ஒருவரை ஒருவர் பார்க்காமல் காகிதத்தூதுக்கள் மூலம் காதலர் உலகில் சஞ்சரித்துக் கொண்டிருக்க ஆறுமாத காலம் ஓடியிருந்தது...

''இண்டைக்கு மதுவை சந்திக்கப் போறனே''

என்ற நினைப்பு ஒரு ஆனந்த அலையாக பொங்கியெழுந்து சுதனின் மனதில் முட்டிமோதி ஆர்ப்பரித்தது.

''எப்படா அஞ்சு மணியாகும்''

என்று ஆவலுடன் பன்னிரெண்டு மணியையே கடக்காத கடிகாரத்தை அடிக்கடி பார்த்துக் கொண்டான். ஓரிடத்தில் நில்லாது பரபரப்புடன் உழன்று கொண்டான்

அதேபோல....

''மது நீங்கள் எப்படி இருந்தாலும் பரவாயில்லை, யார் எதிர்த்தாலும் பரவாயில்லை நான் மாறமாட்டன். உங்களை என்றுமே நேசித்துக்கொண்டேயிருப்பேன், உங்களையே கைபிடித்து வாழுவன், இயலாமல் போனால் நான் உயிருடன் இருக்கவே மாட்டேன். என்று ''கடிதத்தில் உறுதிமொழி தந்தவனை இன்டைக்கு நேரில் பாக்கப்போறன்.'' என்ற நினைப்பு மதுமிதாவின் மனதில் மகிழ்ச்சியாறாகப் பாய்ந்து கொண்டிருந்தது.

''எப்பிடி இருப்பார். என்னைக் கண்டவுடன் என்ன செய்வார்...?'' என்று அவளது மனம் எண்ணியதும் தன்னையறியாமல் வெட்கப்பட்டுக் கொண்டாள். மகிழ்ச்சியில் பூரிப்படைந்தாள். அதேவேளை ஏதோ ஓர் அச்ச உணர்வும் பரபரப்பும் அவள் மனதில் பரவியிருந்ததையும் மதுமிதா உணர்ந்து கொண்டாள். நேரம் சரியாக மாலை ஐந்து மணி பத்து நிமிடம். இடம் 'பூங்கனிச்சோலை' பூங்கா.

''இள நீலநிற சட்டையும் சிவப்பு நிற தொப்பியும் போட்ட இளம் பெண் எவராவது தென்படுகின்றார்களா?''

என்ற பரபரப்புடன் அங்குமிங்குமாக அந்த பூங்காவில் சுற்றித்திருந்தான் சுதன். பரபரப்பான அவஸ்தையுடன் கைகளைப் பிசைந்து கொண்டிருந்த சுதன் இளநீல நிறத்தில் சேட்டும் கறுப்பு நிற ஜீன்சும் சிவப்புநிறத்தில் தொப்பியும் அணிந்திருந்தான்.

''ஹலோ சுதன்''

என்ற குரல்கேட்டு திரும்பியவன் அங்கு இளநீலநிற சட்டையுடன் சிவப்புநிற தொப்பியுடன் இளம்பெண். மதுமிதா சிரித்துக்கொண்டு நிற்பதைக் கண்டதும் என்ன பேசுவதென்றே தெரியாது திகைத்தான். பாரிய அலையொன்று பாறாங்கல்லுடன் மோதி உடைந்தது போன்று திகைத்தவனின் உதடுகளுக்கு என்ன பேசுவதென்று தெரியவிலலை. ''என்ன அப்படியே நிக்கிறீங்கள்..... நீங்கள் சுதன் தானே?''

என்று மதுமிதா கேட்ட கேள்விக்கு என்ன பதிலை சொல்வதென்று சுதனுக்கு தெரியவில்லை. அழகாக கட்டப்பட்ட மணல் வீட்டை கடலலை ஒன்று ஒரு நொடிப்பொழுதில் கழுவிச் சென்றதைப்போல சுதனது கற்பனை கோட்டை அவளைக்கண்டதும் தகர்ந்து போயிருந்தது.

''நீங்கள்... சுதன் தானே?''

என்று அவள் திரும்பவும் ஒரு முறை கேட்டதும் ஒருவாறு சுதாரித்துக் கொண்டவன்

''இல்ல நான் வே.... வேற.... ஆள் நீ... நீங்கள் வேற ஆரையோ தே... தேடுறீங்கள் போல....''

என்று தட்டுத்தடுமாறி அவசர அவசரமாக கூறிக்கொண்டு அந்த இடத்தைவிட்டு நழுவினான் சுதன்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

# கப்பித்தாவத்தையில் கப்பியுள்ள இருள்!

யாழ்ப்பாணத்தவரின் கைங்கரியமாக ஸ்தாபிக்கப்பட்ட கொழும்பு, மருதானை கப்பித்தாவத்தை ஸ்ரீபால செல்வவிநாயகர் ஆலயம் தொன்மையானது; அருள்மிகு மூலமூர்த்தியைக் கொண்டது.

ஆனால் அதன் இன்றைய அவலநிலையைப் பார்த்து பெரும் விசனமும், மனப் புழுக்கமும் அடைந்துள்ளனர் தலைநகரின் சைவ அபிமானிகள்.

சில வருடங்களுக்கு முன்னர் பாலஸ்தாபனம் செய்துவைக்கப்பட்ட இக்கோயிலில் புனருத்தாரண வேலைகள் நீண்ட காலமாக ஸ்தம்பித்துப் போயுள்ளன. திருப்பணி நின்றுவிட்டது. உடைந்துபோன கட்டமைப்போடு சிதிலமாக, இருளடைந்து காணப்படும் இவ்வாலயம், பார்க்கும் சைவ அபிமானிகளின் மனதை நோகடிப்பதாகக் காட்சி தருகின்றது.

தொன்மையும், கீர்த்தியும் அருட்சிறப்பும் மிக்க இவ்வாலயம் இப்படிக் கவனிப்பாரின்றி சீர்குலைந்து கிடப்பதற்கு யார் காரணம்? யார் பொறுப்பு?

ஆலயத்துடன் அண்டி கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை உள்ளது. அது ஓரளவு தன் பணியை ஒழுங்காகச் செய்துவருகின்றது.

அந்தச் சபைக்கு எதிராக ஆலய தர்மகர்த்தா சபையினர் பத்துப் பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர்



தாக்கல் செய்த வழக்குகள் தொண்டர் சபைக்கு சார்பாக தீர்ந்தன.

வழக்கில் கவனம் செலுத்திய தர்மகர்த்தாசபை இப்போது ஆலயப் பராமரிப்பிலும், புனருத்தாரணப் பணியிலும் கவனம்கொள்ளாமல் இருப்பதேன்?

தர்மகர்த்தா சபையால் இப்பணியைத் திருத்தமாக - செவ்வனே - செய்ய முடியாவிட்டால், அப்பணியை நிறைவேற்றக் கூடியவர்களைத் தேடி அவர்களையும் தமது பணிக்குள் அரவணைத்து, இந்த சமயப் பணியை ஏன் முன்னெடுக்கமுடியாது?

ஆலயத்தின் இந்நிலையைக் கவனத்தில்கொண்டு, தொண்டர் சபையினர் 1993ஆம் ஆண்டில் ஆலய புனருத்தாரணத்துக்காக முன்வைத்த திட்டம் இன்னும் அப்படியே உள்ளது.

இத்திட்டம் செயற்படுத்தப்படுமானால் ஆலயத்தின் இடவசதி இப்போது இருப்பதை விட நான்கு மடங்கு அதிகமாகும். உள்வீதி, வெளிவீதி அகலமாகும். ஆலய சிவாச்சாரியார்கள், கோயிலில் தொண்டு செய்பவர்கள் மற்றும் ஏனையோருக்கு மாடிக் கட்டட வசதியை ஏற்படுத்திக்கொடுக்கும் அம்சமும் இந்திட்டத்தினுள் அடங்குகின்றது.

இவ்வளவு நன்மைகள் பயக்கக்கூடிய திட்டத்தை தொண்டர்சபை மீது கசப்புணர்வு காரணமாக கோயில் நிர்வாகம் உதாசீனம் செய்துவிட்டது என்ற ஒரு குற்றச்சாட்டும் உள்ளது.

கோயில் தர்மகர்த்தாக்கள் பலர் அமரத்துவம் அடைந்துவிட கோயில் நிர்வாகம் சட்டப்படி அல்லாத சிலரின் கைகளுக்குப் போய்விட்டது என்றும் சர்ச்சை எழுப்பப்படுகிறது. அதற்காக நீதிமன்றத்துக்குப்போய் கோவில் பணியை மேலும் முடக்குவதை விடுத்து, ஆக்கபூர்வமான வழியில் பணியாற்ற சம்பந்தப்பட்டோர் திடசங்கற்பம் கொள்ள வேண்டும்.

கோவிலை இடித்துப் பாலஸ்தாபனம் செய்தவர்கள், வருடங்கள் சில கழிந்தும் புனருத்தாரண வேலைகளை துரிதப்படுத்தாமல் தொய்யப் போட்டிருப்பது பக்தர்கள் மனதைச் சுடுகின்றது. புனருத்தாரணப் பணி பூர்த்தியாவது எப்போது? கும்பாபிஷேகம் நடப்பது எப்போது? என்று ஏங்குகின்றார்கள் அவர்கள்.

தொண்டர் சபையின் திட்டத்தை மட்டும் அல்ல, பல தரப்பு ஆலோசனைகளையும் பெற்று, தலைநகர் சைவ அபிமானிகளை ஒன்றுதிரட்டி, இந்த சமயப் பணியை முன்னெடுப்பதில் கோயில் நிர்வாகம் ஆர்வம் காட்ட வேண்டும். கருத்து முரண்பாடுகளை - குரோதங்களை - தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை - இந்த சமயப் பணியில் அர்ப்பணிப்புடன் செயற்பட அனைவரும் இணங்கினால்தான் தலைநகரில் கீர்த்தி பெற்ற இந்த ஆலயம் சீர்பெறும். சைவர்கள் சிறப்படைவார்கள்.

சம்பந்தப்பட்டோர் செய்வார்களா? இறைவன் அருள் அதற்கு சித்திக்கட்டும்.

-வேந்தன்

# பிரிட்டனில் மீண்டும் பிளேயர்

கடந்தவாரம் உலகத்தின் குறிப்பாக ஜனநாயக நாடுகளின் கண்கள் பிரிட்டனில் நடைபெற்ற பொதுத் தேர்தல் மீது திரும்பி இருந்தன.

நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்த தொழிற்கட்சியைத் தொடர்ந்து மூன்றாவது தடவையாகவும் தேவையான பெரும்பான்மைப் பலத்துடன் வெற்றி பெறச் செய்து சாதனை படைத்துள்ளார் பிரதமர் பிளேயர். கன்சர்வேட்டிவ் கட்சியின் மார்க்கரட் தாட்சருக்குப் பின் தொடர்ந்து மூன்று தடவைகள் பிரதமர் பதவியைக் கைப்பற்றிய பெருமையையும் இதன் மூலம் இவர் பெற்றுள்ளார்.

1997 இல் மட்டுமன்றிப் பின்னர் 2001 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் தொழிற்கட்சியே அமோக வெற்றியீட்டியது. ஆனால், கடந்தவாரம் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் அதனது பலம் குறிப்பிடத்தக்களவு குறைந்துள்ளது.

கடந்த அரசாங்கத்தில் 410 ஆசனங்களைக் கொண்டிருந்த தொழிற்கட்சியினால்இம் முறை 355 ஆசனங்களையே கைப்பற்ற முடிந்தது. இதற்கு முற்றிலும் மாறாக சென்ற முறை 164 ஆசனங்களைக் கொண்டிருந்த கன்சர்வேட்டிவ் கட்சி இம்முறை 197 ஆசனங்களையும், 54 ஆசனங்களைப் பெற்றிருந்த லிபரல் கட்சி 62 ஆசனங்களையும் வென்றெடுத்துள்ளன.

இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில் இம்முறை கன்சவேட்டிவ் கட்சி தொழிற்கட்சியிடமிருந்து 33 ஆசனங்களையும் லிபரல்கட்சி 11 ஆசனங்களையும் கைப்பற்றி இருப்பதுதான். ஆனால் இந்த இரு கட்சிகளிடமிருந்து எந்தவொரு ஆசனத்தையாவது தொழிற்கட்சியினால் வெற்றிகொள்ள முடியாமற் போய்விட்டது.

லிபரல் கட்சித் தலைவர் சாள்ஸ் கென்னடி, பிரிட்டன் பெரியதொரு சவாலை எதிர்நோக்கி இருப்பதாகவும், மூன்று கட்சி அரசியலில் அதுகாலடி எடுத்து வைத்திருப்பதாகவும் கூறி இருக்கிறார். தொடர்ச்சியாகத் தோல்விகளைச் சந்தித்து வந்த இந்தக் கட்சி இந்தத் தடவை முன்னைய தேர்தல்களுடன் ஒப்பிடும் போது அதிகளவு ஆசனங்களில் வெற்றிபெற்றுள்ளது.

மூன்றாவது பெரிய கட்சியாக இந்தக் கட்சி வளர்ந்திருப்பது கன்சர்வேட்டிவ் கட்சியினருக்கும் தொழிற்கட்சியினருக்கும் ஒரு தலையிடியாக மாறி இருப்பதுடன் எதிர்காலத்தில் பிரிட்டனில் கூட்டரசாங்கம் அமைவதற்கான வாய்ப்புகளையும் அது அதிகரித்துள்ளது.

டோனி பிளேயர் தொழிற்கட்சி அரசாங்கத்தைத் தனியாக நடத்தக் கூடிய பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுள்ளபோதிலும், எதிர்காலத்தில் தமது அரசாங்கத்தைப் பிரச்சினைகள் எதுவுமின்றி லாவகமாக நடத்திச் செல்வதில் பெரும் நெருக்கடிகளை எதிர் நோக்குவாரென அரசியல் அவதானிகள் வேறயும் கூறியுள்ளனர்.

நாடாளுமன்றத்தில் அவர் எதிர்கொள்ள விருக்கும் சவால்களும் நெருக்கடிகளும் எதிர்க்கட்சியான கன்சர்வேட்டில் கட்சியிலிருந்து எழப் போவதில்லை. மாறாக அவை அவரது கட்சிக்குள் இருந்துதான் எழப் போகின்றன என்று அவர்கள் கூறுகின்றார்கள்.

தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் பிளேயரை, வேண்டப்படாத ஒருவராகவும் நம்பமுடியாதவராகவும் பார்க்கின்றனர். தற்போது நிதியமைச்சராகவிருக்கும் கோடன் பிரவுணினால் மட்டும்தான்



பிளேயர்

கட்சியையும், நாட்டையும் ஸ்திரமாக வைத்திருக்க முடியுமென அவர்கள் நம்புகிறார்கள். எனவே விரைவில் கோடனே பிரதமராக வேண்டும் எனவும் அவர்கள் விரும்புகிறார்கள்.

பிரிட்டனில் பணவீக்கம் குறிப்பிடத்தக்களவு ஏற்படாதிருப்பதற்கும், வேலையில்லாப் பிரச்சினை பாரிய பிரச்சினையாக உருவாகாமல் இருப்பதற்கும், வட்டி வீதம் கீழ் மட்டத்திலிருப்பதற்கும் நிதி அமைச்சர் பிரவுண்தான் காரணம். சுருக்கமாகக் கூறுவதானால் உலக நாடுகளில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது ஏனைய ஐரோப்பிய நாடுகளைப் போலன்றி பிரித்தானியாவின் பொருளாதாரத்தை ஸ்திரமாக வைத்திருப்பதற்கான நிதித் திட்டங்களை நடைமுறைப்படுத்திய பெருமை இவரையே




சாரும். அதனால் பிரிட்டன் கண்ட மிகச் சிறந்த நிதி அமைச்சரென பிளேயரே அவரை ஒருமுறை பாராட்டியுள்ளார். இவை மட்டுமன்றி பிரிட்டிஷ் மக்களின் உள்ளங்களைக் கவர்ந்த ஒருவராகவும் அவர் பிரகாசிக்கிறார்.

இவை எல்லாம் பிளேயருக்குத் தெரியாதவை அல்ல. அதனால் அவர் இன்னும் ஓரிரு வருடங்களில் தமது பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்து பிரவுண் பிரதமராவதற்கு வழிவிடக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறான நெருக்கடிகளையெல்லாம் அவர் எதிர்கொள்ள வேண்டிய இருப்பதற்கான காரணங்கள் எவை?

ஈராக்குக்கு எதிரான போரில் அமெரிக்காவுக்கு ஆதரவாகச் செயற்பட்டமை, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்கும் அவருக்குமிடையிலுள்ள நெருக்கமான நட்பு, மக்களுக்கு உண்மைகளை மறைத்துச் செயற்படும் அவரது அடாவடித்தனம், அரசியலமைப்பைப் புறந்தள்ளி நடந்துகொள்ளல் ஆகியவை மக்கள் பெருமளவில் அவரிடமிருந்து பிரிந்து நிற்பதற்கும் தற்போதைய அவரது அரசியல் நெருக்கடிகளுக்கும் அடிப்படைக் காரணிகளாக அமைகின்றன.

"இத்தேர்தலில் ஈராக் செல்வாக்குச் செலுத்தியுள்ளது எனக்குத் தெரியும். அத்துடன் பிரிட்டிஷ் மக்கள் எனது கைகளுக்குக் கட்டுப்போட விரும்புவதும் தெளிவாகியுள்ளது" என வட இங்கிலாந்தில் தனது தொகுதியில் வெற்றி பெற்றி பின் பிளேயர் கூறியுள்ளார்.

இவற்றுக்கு மத்தியில் பிளேயர் தனது நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் சாதிக்கப்போவது என்ன? இந்தக் கேள்விக்கு அரசியல் ஆய்வாளர்கள் என்ன கூறுகிறார்கள் என்று இனிப் பார்ப்போம்.

உள்நாட்டைப் பொறுத்தளவில் பிரிட்டனின் குடிவரவு நடைமுறைகளிலும், பொதுச் சேவையிலும் மாற்றங்களைச் செய்வது மட்டுமன்றி வேலைவாய்ப்பு வசதிகளை மேலும் விரிவாக்கவும் ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதிய நடைமுறைகளில் சீர்திருத்தங்களைச் செய்யவும் அவர் தயாராவாரென்று அவர்கள் கூறுகின்றார்கள்.

உடனடியாக நாட்டின் வெளிவிவகார விடயங்களுக்கே அவர் முன்னுரிமை அளிப்பாரென நம்பப்படுவதுடன் அடுத்துவரும் சில மாதங்களில் இவை சூடுபிடிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச மட்டத்தில் மாற்றங்களைச் செய்வதற்கான முயற்சிகளிலும் ஆபிரிக்காவுடன் ஒட்டிப்பிறந்த வறுமையைச் சமாளிப்பதற்காக அதற்கு அதிகளவில் உதவி வழங்குவதற்கான ஏற்பாடுகளிலும் அவர் ஈடுபடவிருக்கிறார்.

ஆனால், இந்த இரு விடயங்களிலும் தனது நெருங்கிய நண்பரும் அமெரிக்க ஜனாதிபதியுமான ஜோர்ஜ் புஷ்ஷின் எதிர்ப்பை அவர் எதிர்கொள்ளக் கூடும்.

எதிர்வரும் ஜூலை மாதம் ஐரோப்பிய யூனியனின் தலைமைப் பதவியையும் பெற்றுக் கொள்ளவிருக்கும் பிளேயர் அடுத்த வருடம் அந்த யூனியனின் அரசியலமைப்புப் பற்றிய சர்வஜனவாக்கெடுப்பொன்றை பிரிட்டனில் நடத்தவிருக்கிறார்.

அதுமட்டுமன்றி இஸ்ரேலியர்களுக்கும் பாலஸ்தீனர்களுக்குமிடையே அமைதியை ஏற்படுத்தும் விவகாரத்திலும் இறுதியாக ஈரானின் வசமுள்ள அணுவாயுதங்களை இல்லாதொழிப்பதற்கான முயற்சிகளிலும் தாம் ஈடுபடவிருப்பதாகவும் அவர் சொல்லியிருக்கிறார்.

இவ்வாறு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அவர் செயற்படுத்த உள்ள திட்டங்களில் வெற்றி பெறுவாரா, அல்லது நெருக்கடிக்கு முகம் கொடுக்க முடியாது தமது பதவியிலிருந்து விலகிவிடுவாரா என்பதற்கு காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

-மூர்த்தி-

# கனவாகிப்போன காகிதத்தூதுக்கள்......

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"என்னடா மச்சான் உன்ர ஆளைக் கண்டனியே அதுக்கிடேல வந்திட்டாய்" என்று அந்த பூங்காவின் வாசலருகே மோட்டார் சைக்கிளுடன் சுதனுக்காகக் காத்திருந்த அவனது நண்பன் இளங்கோ கேட்டதும் "இல்லையடா மச்சான் நான் தேடி வந்த மது வரேல்ல. அவ நல்லாய் ஏமாத்திட்டாள். நீ கெதியா சைக்கிள எடு" என்று அவசரப்படுத்தினான் சுதன். வினாக்குறி படர்ந்த முகத்துடன் மோட்டார் சைக்கிளை ஸ்ராார்ட் செய்தான் இளங்கோ.

அவர்கள் அங்கிருந்து நகர்ந்ததும் பூங்காவின் வாசலருகில் உள்ள பூமரம் ஒன்றின் மறைவில் இருந்து வெளிப்பட்டாள் மதுமிதா. அவளது முகத்தில் ஏமாற்ற ரேகைகளும், உதட்டில் விரக்தியான சிரிப்பும் ஒட்டியிருந்தன.

"அன்புள்ள மதுமிதாவுக்கு... நான் எவ்வளவோ முயற்சி எடுத்தும் அன்று உங்களை சந்திக்க வர ஏலாமல் போய்விட்டது. வீட்டில எனக்கு கனக்கப்பிரச்சினை. அதனால் பெற்றோர் பார்க்கின்ற பெண்ணை திருமணம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மன்னித்து விடுங்கள். இப்படிக்கு பேனா நண்பன் சுதன்"

என்று கிறுக்கி எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் படித்து முடித்த மதுமிதாவுக்கு அழுவதா? சிரிப்பதா? என்று தெரியவில்லை. கருமையான நிறமும் பருக்களும் கொண்ட தனது முகத்தை தடவிக்கொண்டவள் ஏதோ நினைவில் விரக்தியாக சிரித்தாள் 'என்னைக் காணும் முன் சுதன் எழுதிய கடிதங்களில் பொய் இல்லை. என்னைக் கண்ட பின் எழுதிய கடிதத்தில் ஒருதுளி உண்மையும் இல்லை' என்பதை மதுமிதாவின் மனம் எண்ணிய தருணத்தில் அழுகை அவளது கண்களை நிறைத்து பின் வழிந்து முகப்பருவில் பட்டு சிதறி தலையணையை நனைத்தது.

யாரோ நெஞ்சைப்பிளந்து இதயத்தை பிடுங்கி எறிந்தாற்போல வலித்தது அவளுக்கு. அழுது அழுது சோர்ந்து போனவள் மனதினுள் திடமான முடிவை எடுத்துக்கொண்டவள் போல எழுந்து உட்கார்ந்தாள்.

"பொய்யுக்கு பொய்தான் மருந்து" என்று மனதுள் நினைத்துக் கொண்டாள்.

"அன்புள்ள சுதனுக்கு.... அன்றைக்கு நான் பூங்காவில யாரோ ஒருவரைக் கண்டு நீங்கள் என்று நினைத்து ஏமாந்துவிட்டேன். எனக்கும் வீட்டில பிரச்சினைகள் தான். அதனால நாங்கள் எங்கட காகிதத் தொடர்புகளை நிறுத்திக் கொள்ளுவம் 'வாழ்க' இப்படிக்கு மதுமிதா" என்று எழுதி முடித்தாள் ஒருபொய்க்கடிதம்.

'நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் தெய்வம் ஏதுமில்லை...'

பொருத்தமான பாட்டை நிலைமை தெரிஞ்சு வானொலி பாடிக்கொண்டே இருந்தது.

(யாவும் கற்பனை)

# கிழக்கு வெறியாட்டமும்.....

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டு மேற்படி முகாம் அகற்றப்பட்டிருக்கிறது. போர்நிறுத்த ஒப்பந்த காலத்தில் ஒப்பந்தத்தை மீறி அமைக்கப்பட்ட இந்த முகாமை அகற்றுவதற்கு இவ்வளவு இரத்தக்களரி தேவையா? என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எமது மண்ணில் ஆக்கிரமிப்பு அரண்கள் அகற்றப்படும் வரை ஓயப்போவதில்லை என அப்பகுதி வயோதிபர் ஒருவர் கூறிக்கொண்டு சென்றது மக்கள் புரட்சி எழுச்சிகொள்கிறது என்பதற்கு ஓர் சமிஞ்ஞை ஆகும்.

சமாதான காலத்தில் தென்தமிழீழத்தில் நடைபெறும் கொலைவெறியாட்டம் இது முதல் முறை அல்ல. 2002 இல் அம்பாறை காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படையால் ஏழு பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதையும் நினைவு படுத்துவது பொருத்தமானதாகும்.

## கெடுபிடிகள்

அண்மைக்காலங்களில் கிழக்கில் படைத்தரப்பு பொதுமக்கள் மீது கடுமையான கெடுபிடிகளை மேற்கொள்ள ஆரம்பித்திருந்ததுடன் பொது மக்களை ஒரு பதற்றச் சூழலில் வைத்திருக்கவே விரும்புகிறது.

கிழக்கு ஏற்கனவே நிழல் யுத்தத்தை சந்தித்துக் கொண்டிருக்கும் நிலையில் இராணுவத்தின் சீண்டல்களும், அழுத்தங்களும் தீவிர யுத்தத்தை நோக்கி செல்லக்கூடும் என அஞ்சப்படுகிறது.

அரச படைகளின் வெறியாட்டத்தைக் கண்டித்து தமிழர் தாயகம் எங்கும் ஹர்த்தால், எதிர்ப்புப்போராட்டம் நடத்தப்பட்டமையானது, தமிழர் தாயகத்தின் எந்த ஒரு மூலையில் சீண்டல்கள் நடந்தாலும் தமிழர் தாயகமே கொதிக்கும் என்பதை மீண்டும் ஒரு தடவை தமிழர்களின் விரோதிகளுக்குச் சொல்லி உள்ளது,

# அதாவுல்லாவின் அதிர்ச்சி வைத்தியம்....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொம்பான காரியம்தான். விசேடமாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸில் எப்போதுமே கருத்துச் சுதந்திரம், இதய சுத்தியான பேச்சுகள் இருந்ததாக வரலாறுகள் இல்லை.

அதுபோன்றே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்துசென்ற அணிகளும் இயங்கி வருகின்றன. அதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு தேசிய முஸ்லிம் காங்கிரஸிலிருந்து ஹரீஸ் விலக்கப்பட்ட நிகழ்வாகும்.

அரசிலோ, கட்சியிலோ பதவிகளைத்தக்க வைத்துக்கொள்வதாக இருந்தால் வாய்மூடி மௌனிகளாக இருக்கவேண்டும் என்பதை இதன் மூலம் ஹரீஸுக்கு நன்கு உணர்த்தியுள்ளார் அமைச்சர் அதாவுல்லா. முஸ்லிம் சமூகத்தின் மீதான மிகப்பெரும் சாபக்கேடு இதுதான்.

பட்டம் - பதவிகள் - சொகுசுகளுக்காக சமூகம் விலை பேசப்பட்டு விற்கப்படுவதைக்கூட கண்டும் காணாமல் காலம் கடத்திவிட வேண்டும் என்பதே முஸ்லிம் அமைச்சர்களின் நிலைப்பாடாக இருந்துவருகிறது.

அமைச்சர் அதாவுல்லாவைப் பொறுத்தமட்டில் பதவியில் அவர் தன்னிறைவு கண்டுவிட்டார். இனி அதனைத் தக்கவைத்துக் கொண்டு அனுபவிப்பதற்கான வழிவகைகளையே அவர் தேட வேண்டியுள்ளது. மாறாக அமைச்சுப் பதவியைப் பறிகொடுப்பதற்கு அவர் தயாராக இல்லை.

இந்நிலையில் ஹரீஸ் போன்றவர்கள் தேசிய முஸ்லிம் காங்கிரஸில் தொடர்ந்தும் இருந்துகொண்டு எதனையும் சாதிக்கமுடியாது என்பது வெள்ளிடை மலையாகும். அதனால் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதாகக் கூறப்படும் ஹரீஸின் அடுத்த நடவடிக்கை என்ன? என்பதை முஸ்லிம் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் எம்.பி.யான ஹரீஸ் மீண்டும் அக்கட்சியில் இணைந்து கொள்வாரா? அல்லது வேறு வழிகளைத் தேடிக்கொள்வாரா? பொறுத்திருந்து பார்ப்போம்.

# நடுவருடன் மோதியதால் கால்பந்து வீரருக்குத்தடை

1998 உலகக் கிண்ணம் வென்ற பிரான்ஸ் அணியிலும், 2000ஆம் ஆண்டு ஐரோப்பியக் கிண்ணம் வென்ற பிரான்ஸ் அணியிலும் இடம்பெற்ற பெருமை பார்தேஸுக்கு உண்டு. 33 வயதான பார்தேஸ் கால்பந்து உலகில் தொடர்ந்து பெருமைகளையே பெற்றுவந்தார். இந்த நிலையில் தற்போது ஒரு சின்ன சறுக்கல் அவருக்கு ஏற்பட்டது.

'ஒலிம்பிக் மார்செல்லே' கழக அணிக்கா விளையாடி வரும் அவர் ஒரு ஆட்டத்தின் போது நடுவரிடம் மோதினார். இதற்காக அவருக்கு 6 மாதங்கள் போட்டிகளில் விளையாடத் தடை விதிக்கப்பட்டது. கடந்த ஏப்ரல் 25ஆம் திகதி இந்த தடை அமுலுக்கு வந்தது. இது குறித்து பார்தேஸ் கூறும்போது –

''நடுவரிடம் மோதும் போதே எனக்கு தடை விதிப்பார்கள் என்று தெரியும். இந்த காலத்தை நான் வீணாக்காமல் என் திறமையை மேலும் அதிகரிப்பதற்கான பயிற்சிகளை எடுப்பேன். அடுத்த ஆண்டு நடைபெறும் உலகக் கிண்ணப் போட்டியில் சிறப்பாக விளையாடுவதற்கான பயிற்சியை மேற்கொள்வேன். 2006ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியில் சிறப்பாக விளையாட வேண்டும் என்பதே என் இலட்சியம். தடையைப் பற்றி நான் கவலைப்படவில்லை'' என்றார்.

# இன்சமாம் வாழ்வில் வசந்தம்

இடையில் சறுக்கல்கள் வந்ததால் இன்சமாமின் தலைமைப் பதவி ஆட்டம் கண்டிருந்தது. ஆனால், இந்தியத் தொடரின் போது கிடைத்த அபார வெற்றியின் மூலம் இன்சமாம் மீண்டுவந்திருக்கிறார். அவரின் தலைமைப் பதவி அடுத்த ஆண்டு பாகிஸ்தானில் ஏப்ரல் மாதம் நடைபெறும் ஆசியக் கிண்ணப் போட்டி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதை பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ஷாரியார்கான் தெரிவித்துள்ளார்.

''தனக்கு தலைவராக நீடிப்பதற்குரிய எல்லாத்தகுதிகளும் இருப்பதாக இந்தியத் தொடரில் இன்சமாம் நிரூபித்துள்ளார். எனவே அவரின் பதவியை நீடித்துள்ளோம்.'' – என ஷாரியார் கூறியுள்ளார்.

2003ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணியின் தலைவராக நியமிக்கப்பட்டதிலிருந்து தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்து கடுமையான விமர்சனங்களுக்கு உட்பட்டு வந்தார் இன்சமாம். இதன் உச்சக்கட்டமாக கடந்த ஆண்டு தன் சொந்த மண்ணிலேயே இந்தியாவிடம் தொடரை இழந்து பெரிய அவமானங்களைச் சந்தித்தார். சோதனை மேல் சோதனைகளை சந்தித்த இன்சமாமின் வாழ்க்கையில் தற்போது வசந்தத்தைக் கொண்டு வந்துள்ளது இந்திய சுற்றுப் பயணம்.

# விளையாடும் தரத்தை மேம்படுத்துவதன் மூலமே ஐரோப்பிய நாடுகளை ஆசிய அணிகள் வீழ்த்தலாம்

## ஆசியக் கால்பந்து பொதுச் செயலாளர் தகவல்

''விளையாடும் தரத்தை மேம்படுத்துவதன் மூலமே ஐரோப்பிய நாடுகளை ஆசிய அணிகள் உலகக் கிண்ணப் போட்டிகளில் பின் தள்ளமுடியும்.'' – என ஆசியக் கால்பந்து சம்மேளனத்தின் பொதுச் செயலர் பீற்றர் வேலப்பன் கருத்து தெரிவித்தார்.

நீண்ட காலமாக உலகக் கிண்ணத் தொடரில் ஐரோப்பிய நாடுகளே ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. இந்நிலை மாற ஆசிய நாடுகள் தமது திறனை மேம்படுத்துவது அவசியம் என்றும் அவர் கூறினார்.

2002ஆம் ஆண்டு நடந்த உலகக் கிண்ணக் கால்பந்துப் போட்டியில் இவரது திறமையான செயற்பாட்டால் ஆசிய அணிகள் குறிப்பிட்ட இடத்தைப் பெற்றன.

அப்போட்டியில் தென்கொரியா அரையிறுதி வரை முன்னேறியது. ஜப்பான் 16ஆவது இடத்தைப் பெற்றது.

இந்நிலையில் உலகக்கிண்ணக் கால்பந்துத் தொடரில் திறமையைமேம்படுத்துவதன் மூலமே ஆசிய அணிகளால் முன்னேறமுடியும் என வேலப்பன் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:–

''ஆசிய அணிகளின் தரமும், வீரர்களின் தரமும் தொடர்ந்து மேம்பட்டு வருகிறது. ஐரோப்பிய நாடுகளைப் போல ஆசிய நாடுகளும் முன்னிலை அணிகளாகத் திகழ நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

''என்னுடைய வாழ்க்கையை ஆசியக் கால்பந்து மேம்பாட்டுக்காகவே அர்ப்பணித்துள்ளேன். ஆசியாவை நிலையான இடத்துக்குக் கொண்டு வருவதே எனது லட்சியம்'' – என்றார்.

கடந்த 27 ஆண்டுகளாக ஆசியக் கால்பந்து மேம்பாட்டுக்காக உழைத்து வருபவர் வேலப்பன். தனி மனிதராக இவர் ஆசிய அமைப்பை உயரச் செய்தவர்.

உலகக் கால்பந்து சம்மேளனம் செயற்குழு நிர்வாகத்தில் ஆசிய நாடுகளுக்கு 2 இடங்களை மட்டுமே ஒதுக்க முடிவுசெய்ததை எதிர்த்தும், கூடுதல் இடம் ஒதுக்கக் கோரியும் 1999ஆம் ஆண்டு லாஸ் ஏஞ்சல்ஸில் நடந்த கால்பந்து சங்க மாநாட்டில் வெளிநடப்பு செய்து, பரபரப்பை ஏற்படுத்தியவர் வேலப்பன் என்பது குறிப்பிடத்தக்கது.

# ''எனது கனவுக் கன்னி சுஷ்மிதா''

''இந்தி சினிமா உலகில் எனக்கு பிடித்தமான நடிகை சுஷ்மிதாசென். நான் அவரது தீவிர ரசிகன். அவர் நடித்த படங்களை நான் விரும்பிப் பார்ப்பேன். அவர் எனது கனவுக் கன்னி. அவரது ஒவ்வொரு அசைவும்எனக்குப் பிடிக்கும். அவர் மிகவும் கவர்ச்சிகரமானவர்.''

– என சுஷ்மிதாவைப் புகழ்ந்து தள்ளுகிறார் பாகிஸ்தான் முன்னாள் அணித்தலைவர் வசிம் அக்ரம்.

வசிம் அக்ரம் நீரழிவு நோய் எதிர்ப்புப் பிரசாரம் செய்வதற்காக கடந்த வாரம் லக்னோ சென்றார். அப்போது அவர் நிருபர்களிடம் கூறியதாவது:–

''இந்தியா – பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே நடந்த கிரிக்கெட் ஆட்டத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால் ஒவ்வொரு ஆண்டும் இந்தப் போட்டிகளை நடத்த வேண்டும். இதை முத்தரப்பு ஒருநாள் போட்டியாக மாற்றி நடத்தினால் மைதானங்களில் இருக்கைகள் காலியாக இருப்பதை தவிர்க்கலாம்.

''நான் இந்தி சினிமாவை விரும்பிப் பார்த்து ரசிப்பேன். தற்போது ஏக்லாம்கி, சாகிர் போன்ற படங்கள் மிகவும் நன்றாக இருக்கின்றன. இந்தி சினிமா உலகில் எனக்கு பிடித்தமான நடிகை சுஷ்மிதாசென். நான் அவரது தீவிர ரசிகன். அவர் எனது கனவுக்கன்னி.'' –என்றார்.





## சொற்சிலம்பம் போட்டி இல. 160

சொற்சிலம்பம் 160 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித்தினம் மே14 ஆம் திகதி ஆகும். விடைகள் மே 22 ஆம் திகதி சுடர் ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜூன் 05ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.157க் கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250ரூபாவும், இரண்டாவது பரிசாக 150ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85,ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 160

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | | | |
| | ■ | 9 | | | ■ | 10 | |
| 11 | 12 | | | ■ | 13 | | ■ |
| 14 | | | ■ | 15 | | | |
| ■ | | ■ | 16 | | | | ■ |
| 17 | | 18 | | ■ | | ■ | 19 |
| 20 | | | | | ■ | 21 | |

## சொற்சிலம்பம் போட்டி இல.158

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ஆ | 2 சீ | ர் | 3 வா | 4 த | ப் | 5 ப | ர் |
| 6 ப | னி | ■ | 7 க | ட | ■ | ல | ■ |
| த் | ■ | 8 உ | ட | ம் | 9 பு | ■ | 10 பெ |
| 11 பா | ர | த | ம் | ■ | 12 க | வ | ரி |
| ந் | ■ | ர | ■ | 13 பா | ழ் | ■ | ய |
| 14 த | 15 ர | ம் | 16 பி | ரி | ■ | 17 எ | ண் |
| 18 வ | தி | ■ | ற | ■ | 19 உ | ண் | ணா |
| ன் | ■ | 20 சி | ன் | ன | ண் | ணா | ன் |

## சொற்சிலம்பம் போட்டி இல.160

**இடமிருந்து வலம்**

1. ஒரு நட்சத்திரம். இந்துக்களின் திருமணத்தின்போது மணமக்களுக்குக் காட்டுவர்.
5. மறைவில் நீட்டுவது / மனைவி.
7. நசி.
8. செய்ய வேண்டிய கடமை.
9. பாரம் / மரியாதை.
10. நாங்கள்.
11. சொற்கள் சேர்ந்து உருவாவது.
13. கழித்தல் குறி.
14. பீதி / பயம்.
15. அருந்துதல் / குடித்தல்.
16. கவிஞர்.
17. சமயவாதி.
20. மிகச்சரியாக / மிகச்சுத்தமாக / சரிகணக்காக.
21. புரவி.

**மேலிருந்து கீழ்**

1. அம்பிகாபதி மனங்கவர்ந்தவள்.
2. நாக்கு அறியும் சுவை.
3. எரியும்செயல்.
4. உறுதியான தன்மை.
5. நாடாளுமன்றின் தலைவர்.
6. தியேட்டர்.
9. நெருப்பு.
12. பொறுத்துக் கொள்ளல்.
13. பித்தளைப் பாத்திரம்.
15. பன்மையைக் குறிப்பது.
16. நவீன / புது / புதுமையான.
17. போதை தருவது.
18. இராமன் ஒளிந்திருந்து அம்பு விட்டுக் கொன்றது இவனை.
19. பெரிய நீர்த்தேக்கம்.

## சொற்சிலம்பம் போட்டி. இல. 157

1. தாமோதரம் வடிவேல்
5, ஏறாவூர்
செங்கலடி.
2. க.கமால்தீன்
புன்னைக்குடா வீதி,
ஏறாவூர்.
3. திருமதி. ரபீக்கா முஹம்மது ஜான்
31, கல்லூரி வீதி,
திருகோணமலை – 31000.

### பாராட்டுப் பெறுவோர்

1. எஸ்.எம். பாரூக்
180, மன்னார் வீதி,
புத்தளம்.
2. யூ.சஜீவ்
J/13 என்டர்சன் தொடர்மாடி,
கொழும்பு – 05.
3. எஸ்.ஜீவா
மே/ப செல்லத்துரை,
45/2, 55ஆவது ஒழுங்கை,
வெள்ளவத்தை.
4. பயஸ் ஜோர்ஜ்
''ஜெயமகால்''
36 பழைய கல்முனை வீதி, கல்லடி
மட்டகளப்பு.
5. திருமதி ஜெயா ஜேசுதாசன்
185/7, ஜெம்பட்டா வீதி,
கொழும்பு – 13.
6. அ.கேதீஸ்வரன்
புளியங்குளம்.
7. கி.இராஜேந்திரா
33 – 5/1 42ஆவது ஒழுங்கை,
கொழும்பு – 6.
8. எஸ்.ஜெயச்சந்திரராசா
இராசேந்திரம் குளம்,
வவுனியா.
9. டி.மோகன முகுந்தன்
டச்சு வீதி,
சங்குவேலி,
மானிப்பாய்.
10. [illegible]
முனை வீதி,
தம்பிலுவில் – 01.

# மலையகத்தில் தொடரும் பல்டிகளும் மானக்கேடுகளும்

யாரை எங்கே வைப்பது என்று யாருக்கும் தெரியலே, ஊதுபத்திக்கும் பீடிகளுக்கும் பேதம் புரியலே. இந்த கேள்விதான் இன்று மலையகத்தின் சகல திசைகளிலும் எதிரொலிக்க ஆரம்பித்துவிட்டது.

மலையக அரசியல் வாதிகளுக்கும், தொழிற்சங்க வாதிகளுக்கும் ஒரு கொள்கை, ஒரு இலட்சியம், ஒரு நோக்கம், ஒரு கட்சி என்ற உயர்ந்த நோக்கங்களுக்கும் கொஞ்சம் கூட சம்பந்தமே இல்லை என்பது இப்போது ஊர்ஜிதப்படுத்தப்பட்டு விட்டது.

மலையகத்தில் பிரதான தொழிற்சங்கமான இலங்கை தொழிலாளர் காங்கிரஸை எடுத்துக் கொண்டால் இந்த பல்டி விடயத்தில் அந்துப்படியாகிவிட்டது. அது இன்று நேற்று அல்ல.

இ.தொ.காவின் பெருந்தலைவர் என அக்கட்சியினால் மதிக்கப்படும் மறைந்த தலைவர் சௌமிய மூர்த்தி தொண்டமான் முதன் முறையாக நியமன அங்கத்தவராக நாடாளுமன்றம் சென்றபோது முதல் பல்டியை அடித்தார்.

இதன் பின்பு எத்தனையோ பல்டிகள் இடம் பெற்றுவிட்டன அதன் ஒரு தொடர் தான் ஊவா மாகாணசபையிலும் இடம் பெற்றுள்ளது.

மலையகத்தில் அதுவும் மத்தியமாகாண சபையில் இ.தொ.காவில் இருந்து மலையக மக்கள் முன்னணியின் பக்கம் பல்டி அடித்து பெரும்பரபரப்பை ஏற்படுத்தியவர் மத்தியமாகாண சபை உறுப்பினரான கோவிந்தராஜ்.

இ.தொ.கா.வில் இருந்து பல்டி அடித்ததற்கான காரணங்களை விளக்கி செய்தியாளர் மாநாட்டையும் நடத்தினார்.

இ.தொ.கா.ஒரு ஜனநாயகக் கட்சியே இல்லை. உண்மையாக சேவை செய்பவர்களுக்கு அங்கு இடமில்லை. ஆறுமுகன் தொண்டமான ஒரு சர்வாதிகாரி. இ.தொ.கா. கூடாரத்தில் இருப்பவர்கள் எல்லோரும் முதுகெலும்பு இல்லாதவர்கள், தன்மானம் இழந்தவர்கள், வெட்கம் கெட்டவர்கள் என்றெல்லாம் கடுமையாக விமர்சித்தார்.

''நான் தன்மானத்துடன் வாழவிரும்புவதானாலேயே இ.தொ.கா.வில் இருந்து விலகுகின்றேன்'' என்று காரசாரமாக அறிக்கைவிட்டார் கோவிந்தராஜ்.

அதற்காக இவருக்கு கிடைத்த மரியாதை என்ன இ.தொ.காவில் வகித்த பதவிகளை எல்லாம் பறித்தெடுத்து இவர் விரட்டியடிக்கப்பட்டார்.

அதேவேளை மலையக மக்கள் முன்னணி கோவிந்தராஜுக்கு வரவேற்பளித்தது.

மலையக மக்கள் முன்னணியில் தான் ஒரு தனிக்காட்டு ராஜாவாக செயற்படலாம் என்ற நோக்குடனேயே அவர் நுழைந்தார்.

மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் இந்த பல்டி மன்னர்களைப் பற்றி நன்கு அறிந்தவர் என்பதால் முன் ஜாக்கிரதையாக நடந்துகொண்டார்.

எந்தவிதமான பொறுப்புக்களையும் ஒப்படைக்காமல் இறப்பர் ஸ்டேம்ப் போன்று ஒரு பிரதி தலைவர் என்ற பதவியை மட்டும் பரீட்சார்த்தமாக வழங்கிவிட்டார்.

எதிர்பார்ப்புகள் நிறைவேறாததினால் இந்த கோவிந்தராஜன் தன்னிச்சையாகவே மீண்டும் பல்டி அடித்தார். இ.தொ.கா.வில் மீண்டும் ஐக்கியமாகிவிட்டதாக மத்திய மாகாண சபையில் பகிரங்கமாக அறிவித்தார்.

இதோடு நின்றால் போதாதா? விதியாரை விட்டது? இ.தொ.கா.வில் இணைந்து கொண்ட சூட்டோடு கொட்டகலையில் இ.தொ.கா. சாம்ராஜ்யத்தில் அமைக்கப்பட்டுள்ள மறைந்த தலைவர் சீனியர் தொண்டமானின் சிலைக்கு மாலைபோட்டு மரியாதை செலுத்தி உள்ளார். இவருடைய பல்டிக்குப் பரிசாக கொட்டகலையில் நன்றாக வைத்து திருட்டுப்பட்டம் சூட்டிவிட்டனர்.

இப்பொழுது கூட என்ன சொல்கின்றார். கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று கூறுகின்றார். பாதுகாப்பு ஊழியர்களே தனக்கு திருட்டுப்பட்டம் கட்டியதாக கூறுகின்றார்.

''வெட்கம் கெட்டவர்களும், மானம் கெட்டவர்களும், ரோசம் இல்லாதவர்களும் சுயமரியாதை இழந்தவர்களும்தான் இ.தொ.கா.வில் இருப்பர் என்று கூறிய கோவிந்தராஜன் இப்போது இ.தொ.காவுடன் மீண்டும் ஒட்டிக்கொண்டார். அப்படியானால் இந்த தகுதிகள் எல்லாம் கோவிந்தராஜனுக்கு உண்டு என்பதை அவரே இன்று உறுதிப்படுத்திக் கொண்டாரா?''

இப்படித்தான் கேட்கின்றனர் மலையக மக்கள். கோவிந்தராஜனின் நிலைமை இரண்டும் கெட்டான் ஆகிவிட்டது.

அரசனை நம்பி புருசனைக் கைவிட்டு தெருவில் நிற்கும் நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டார் அவர்.

தாய்வீடு என உரிமை கொண்டாடிக் கொண்டு நுழைந்த இ.தொ.காவிலும் மரியாதை இல்லை. ஒதுங்க வந்த மலையக மக்கள் முன்னணியிலும் இனி இடமில்லை என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. இப்படியான ஒரு நிலை அவசியம்தானா?

இந்த மலையகத் தலைவர்களுக்கும் அவர்களின் சீடர்களுக்கும், சுயநலத்துக்காவும் தமது சுக போகங்களுக்காகவும் கட்சி விட்டு கட்சிமாறும் பச்சோந்திகளுக்கும் மலையகம் தக்கபாடம்படிப்பிக்க வேண்டும். பல்டி மன்னர்கள் மீண்டும் பல்டி என்ற வார்த்தையையே நினைக்க முடியாமல் அவர்களை விலாசம் இழக்கச் செய்ய வேண்டும். முற்றாகவே நிராகரிக்க வேண்டும்.

**மலையகக் கண்ணோட்டம்**

இரா. புத்திரசிகாமணி

---

**டேஸ்ட்கடை தனிகாசலம்**

தனிகாசலம் அண்ணன் அன்று சற்று தாமதமாகவே காரியாலயத்துக்கு வந்தார். அங்கே அவருக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. அதுவும் ஒரு ஆனந்தமான அதிர்ச்சி.

# கல்வித் துறையிலும் கழுத்தறுப்பு

கல்விப்பணிப்பாளர் ராசாத்தியும் பிலான்டேசன் கம்பெனி மனேஜர் கதிரேசனும் தனி அண்ணனுக்காக காத்திருந்தனர்.

தனி அண்ணனைக் கண்டதும் இருவரும் எழும்பி ''வணக்கம் அண்ணே'' என்று மரியாதை செலுத்தினர்.

''வணக்கம் வணக்கம். எப்படி இருவரும் நல்ல சுகமாக இருக்கின்றீர்களா?'' என்று கேட்டுக் கொண்டே அமர்ந்தார் தனி அண்ணன்.

இதே சிங்காரவத்தை தோட்டத்தில் கஷ்டமான குடும்பங்களில் பிறந்தவர்கள் தான் இராசாத்தியும் கதிரேசனும். தனிகாசலம் அண்ணனின் பெரும் முயற்சியால் இன்று நல்ல ஒரு நிலைக்கு அவர்கள் வந்துவிட்டனர்.

தனிகாசலம் அண்ணனின் கருணைப் பார்வை இவர்கள் பக்கம் திரும்பாமல் இருந்திருந்தால் கதிரேசன் ஏதாவது ஒரு கடையிலும், இராசாத்தி ஒரு பங்களாவிலும் வேலை செய்து கொண்டிருப்பார்கள். இவர்களுடைய யோகம் இன்று கதிரேசன் ஒரு பிலான்டேசன் கம்பெனிக்கே மனேஜராகவும் இராசாத்தி ஒரு கல்விப் பணிப்பாளராகவும் வாழ்க்கையில் உயர்ந்து விட்டனர். இவர்களை வளர்த்து படிக்க வைத்து ஆளாக்கியதோடு வாழ்க்கையிலும் இவர்களை இணைத்து வைத்துவிட்டார். இதனால் தனி அண்ணனின் வார்த்தைக்கு மறுப்புக் கூறாமல் அதை செயற்படுத்தி விடுவார்கள் இவர்கள் இருவரும்.

கதிரேசனே கதையை ஆரம்பித்தார். ''அண்ணன் நேற்று டெலிபோன் செய்த போது நான் வீட்டில் இருக்கவில்லை. இராசாத்தி நான் வந்தவுடன் தகவலை சொன்னா. அதுதான் காலையிலேயே வந்துவிட்டோம்'' என்றார் கதிரேசன்.

''அவசரமான காரியம்தான். அதற்காக இப்படி லீவு போட்டுவிட்டு வரவேண்டுமா? ஆறுதலாக மாலையில் வந்திருக்கலாமே!'' என உரிமையுடன் கடிந்து கொண்டார் தனி அண்ணன்.

''அண்ணன் எப்போதும் காரணம் இல்லாமல் அழைக்கமாட்டீங்கள். அதை உடனே செய்யவேண்டும் என்பது எங்களுடைய ஆசை. அதனால்தான் லீவு போட்டுவிட்டு வந்தோம். நாங்கள்தான் அநாவசியமாகவே லீவு எடுப்பதில்லையே! லீவும் நிறையவே இருக்கு. ஒரு நல்ல காரியத்துக்காக அதைப் பயன்படுத்திக் கொண்டால் ஒன்றும் தப்பு இல்லையே! எல்லாம் அண்ணனுக்காகத்தானே'' என ஐஸ் வைத்துவிட்டாள் இராசாத்தி.

தனி அண்ணனும் இராசாத்தியின் சமார்த்தியமான பேச்சைக் கேட்டு சிரித்துவிட்டார்.

''அண்ணன் அவசரமாக எதற்கு அழைத்தீர்கள்?'' என்றான்.

''தம்பி எல்லாம் நம்ப ஸ்ரீ பாத கல்லூரியில் நடைபெறும் தில்லு முல்லுகள் பற்றிக் கூறத்தான்''

''அப்படி என்னங்க அண்ணன் நடந்துவிட்டது?''

''தம்பி இந்த பெயர்ப்பட்டியலைப் பாருங்கள். இவை இன்றுவரை நான் சேகரித்தவை. இதேபோன்று இன்னும் எத்தனை இருக்கின்றனவோ தெரியவில்லை.'' என்று பெயர்பட்டியல் ஒன்றை நீட்டினார்.

இராசாத்தியும், கதிரேசனும் அதனை வாங்கிப்பார்த்தனர்.

''என்னங்க அண்ணன் எல்லாரும் அட்வான்ஸ் லெவல் பரீட்சையில் நல்ல



மார்க்ஸ் வாங்கி இருக்காங்களே''

''ஆமாம் இவர்கள் நல்ல மார்க்ஸ் வாங்கியது மட்டுமல்ல; ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரிக்கும் தெரிவு செய்யப்பட்டவர்கள்''

''அப்படியா சந்தோசமான செய்திதானே! இந்த பிள்ளைகளுக்கு நாங்களும் ஏதாவது உதவி செய்கிறோம்''

''அவசரப் படாதீங்க தம்பி. இவர்கள் எவருமே ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.''

''என்னங்க அண்ணன் பெரிய அதிர்ச்சியாக இருக்கு. இவர்களுக்கு என்ன நடந்தது?''

''அது மிகவும் வேதனையான கதை தம்பி. இந்த பிள்ளைகள் எல்லோருமே ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரிக்கு விண்ணப்பம் செய்து நேர்முகப் பரீட்சைக்குச் சென்றனர். பயிற்சியில் சேர்வதற்கான சகல தகைமைகளும் இவர்களுக்கு உண்டு. இதனால் இவர்கள் அனைவருமே நடப்பு ஆண்டுக்கான பயிற்சி ஆசிரியர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவர்கள் தெரிவு செய்யப்பட்டதற்கான கடிதங்களும் அனுப்பி வைக்கப்பட்டன''

''என்னங்க அண்ணன்! நேர்முகப்பரீட்சைக்குப் தோற்றினர், தெரிவு செய்யப்பட்டதற்கான கடிதங்களும் அனுப்பப்பட்டன என்று கூறுகின்றீர்கள். இவ்வளவும் நடந்த பின்பு பயிற்சிக்கு சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்றும் கூறுகின்றீர்கள். ஒரே குழப்பமாக இருக்கின்றதே!''

''உண்மையாகவே இது ஒரு குழப்பமான விடயம் தான். இதோ பாருங்கள் இந்தப் பிள்ளையின் கடிதத்தை'' என்று நீட்டினார் தனி அண்ணன்.

கடிதத்தை வாங்கிப் படித்த இராசாத்தி அப்படியே அதிர்ந்து போனாள்.

அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது அத்தனையும் உண்மை.

''இந்த பிள்ளையின் குடும்பம் மிகவும் கஷ்டப்பட்ட குடும்பம். பல சிரமங்களுக்கு மத்தியில் இந்தப் பிள்ளையை படிக்க வைந்தனர். ஜீ.சி.ஈ. சாதாரணம், உயர்தரம் என எல்லாப் பரீட்சைகளிலும் நல்ல மார்க்குகளுடன் சித்தி அடைந்தாள்.

ஸ்ரீ பாத கல்லூரித் தெரிவுக்கான நேர்முகப்பரீட்சையிலும் தெரிவானாள். கல்லூரியில் சேரவேண்டும்; நாலு பிள்ளைகளுக்கு மத்தியில் நாகரீகமாக இருக்க வேண்டும் என்பதால் பிள்ளையின் தாய், தங்கைகள் எல்லோருடைய காதுகளிலும் இருந்த கம்மல்களையும் சங்கிலிகளையும் அடகு வைத்து பிள்ளைக்கு தேவையான பொருட்களை எல்லாம் வாங்கினர்

பிள்ளை நாளை மறுதினம் கல்லூரிக்குப் போகப்போகிறாள். எங்கள் வீட்டிலும் ஒரு அரசாங்க உத்தியோகம் பார்ப்பவர் உருவாகிவிட்டார் என்ற சந்தோஷத்தில் உறவினர்களை எல்லாம் அழைத்து தமது வசதிகளுக்கு ஏற்ப விருந்து வைத்து மகிழ்ந்தனர்.

அப்போது தான் தந்தி என்ற உருவில் வந்து விழுந்தது அந்தப் பேரிடி'' என்று நிறுத்தினார் தனி அண்ணன்.

''என்னங்க அண்ணே! இது பெரிய கொடுமையா இல்ல இருக்கு! அந்த தந்தியில என்ன குறிப்பிடப்பட்டிருந்தது?''

''ஆமாம் தம்பி 'நீங்கள் பயிற்சிக்கு தெரிவு செய்யப்படவில்லை' என்று ஒரே வரித் தந்தி அந்த குடும்பத்தையே துன்பத்தின் எல்லைக்கு கொண்டு சென்றுவிட்டது''

''அதற்கு மாற்று நடவடிக்கை ஒன்றும் இல்லையா?''

''அவர்களும் போகாத இடமில்லை; பார்க்காத அரசியல் வாதிகள் இல்லை. ஆனால் எதுவுமே நடக்கவில்லை. அந்தப் பிள்ளை நடைபிணம் ஆனதுதான் உண்மை. இந்தப் பிள்ளையை விட குறைந்த மார்க்ஸ் வாங்கிய பிள்ளைகள் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்கள் வேண்டியவர்களின் பிள்ளைகள் என்பதால் தகுதியான ஏழைப் பிள்ளைகளைத் தட்டிவிட்டு தேவையான வசதியான பிள்ளைகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது என்று இந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு நாம் என்ன செய்வது என்பதைப் பற்றி ஆலோசிக்கத்தான் உங்களை அழைத்தேன்'' என்று விளக்கமாகக் கூறினார் தனி அண்ணன்.

இவ்வளவு நேரமும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த இராசாத்தி

''அண்ணன் இந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது உண்மையானால் அது ஒரு தனிமனித உரிமை மீறல் சம்பவமாகும். சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். அநீதி இழைக்கப்பட்ட பிள்ளைகளுக்கு நியாயம் பெற்றுக் கொடுக்க முடியும். எனவே தயவுசெய்து இவ்வாறு பாதிக்கப்பட்ட பிள்ளைகள் அனைவரினதும் விபரங்களையும் திரட்டித் தாருங்கள். நான் மேல் நடவடிக்கை எடுக்கின்றேன்'' என உறுதியளித்தாள் இராசாத்தி.

''கேளுங்கள் [illegible] தட்டுங்கள் திறக்கப்படும் [illegible] கூறுவது போல் இப்படியான ஊழல்களையும் மோசடிகளையும் தடுக்க மலையக அரசியல் வாதிகளும் தலைவர்களும் முன்வர வேண்டும். ஆனால் அவர்கள் செய்ய மாட்டார்கள். அவர்களை தனிகாசலம் அண்ணன் போன்றவர்கள்தான் தட்டி எழுப்ப வேண்டும்'' எனக் கூறி கதிரேசனும் இராசாத்தியும் விடைபெற்றனர்.

# ராசி பலன்

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

(1,8) உரிய செவ்வாய் 11இல் இருப்பது சிறப்பானது. இருப்பினும் ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பது கூடாது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். பிரயாணவாய்ப்பு உண்டு. மன அமைதி இருக்கும். (2,7) உரிய சுக்கிரன் இரண்டில் ஆட்சியாக இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்கும். நாலாம் வீடு சுத்தமாக இருப்பதால் தாய் நலம். வாகன சுகம் உண்டு. (3,6) உரிய புதன் ராசியில் இருப்பது கூடாது. இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் இல்லை. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எதிரிகளின் தொல்லை இருக்கும். (10,11) உரிய சனி மூன்றில் இருப்பது நல்லது. தொழில்துறை முன்னேறும். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும்.

**இடபம்: கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் ராசியில் ஆட்சியாக இருப்பது நல்லது. இருப்பினும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது கூடாது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத்தரும். உடல் ஆரோக்கியம் உண்டு. மன அமைதி இருக்கும். (2,5) உரிய புதன் 12இல் இருப்பது நல்ல பலனைத்தராது. கையில் பணம் இருக்காது. குழந்தைகளின் செயல்பாடு திருப்திதராது. நாலுக்குரிய சூரியன் ராசியில் இருப்பது கூடாது. வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. (7,12) உரிய செவ்வாய் 10இல் இருப்பது சிறப்பு இல்லை. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். சயன சுகம் இருக்காது. (9,10) உரிய சனி இரண்டில் இருப்பது கூடாது. தகப்பனுக்கு நல்ல பலன் இல்லை. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. குரு ராசியைப்பார்ப்பதால் தோசம் இருப்பின் விலகும்.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை; புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் 11இல் இருப்பது நல்லது. மேலும் சூரியனின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். தாய் நலம். வாகன சுகம் உண்டு. பிரயாணவாய்ப்பு உண்டு. இரண்டாம் வீடு சுத்தமாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். (5,12) உரிய சுக்கிரன் 12இல் ஆட்சியாக இருப்பது நல்லது. குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். சயன சுகம் உண்டு. (6,11) உரிய செவ்வாய் 9இல் இருப்பது கூடாது. மூத்த சகோதரத்துக்கு நல்லபலன் இல்லை. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். நண்பர்களுடன் பிரயாணம் போக பலன் உண்டு. (7, 10) உரிய குரு 4இல் கேதுவுடன் இருப்பது தோசம். கலியாணவாய்ப்பை பாதிக்கலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் சிங்கம் முதல் துலாம் வரை சஞ்சாரம் செய்கிறார். வாரமத்தியில் நல்லபலன் உண்டு. மற்றும் நீயகிரகங்களின் பார்வை ராசிக்கு படாதபடியால் நல்ல பலன் செய்யும். பிரயாண வாய்ப்பு உண்டு. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். இரண்டுக்குரிய சூரியன் 11இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். அறுசுவை உணவு உண்ணக்கூடிய வாய்ப்பு உண்டு. (4, 11) உரிய சுக்கிரன் 11இல் ஆட்சியாக இருப்பதால் தாய் நலம். வாகன சுகம் உண்டு. மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். (5, 10) உரிய செவ்வாய் 8இல் பலன் செய்யாது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். (7, 8) உரிய சனி 12இல் இருப்பது திருமணவாய்ப்பை பாதிக்கும்.

**சிங்கம்: மகம் பூரம், உத்தரம் 1.**

ராசிநாதன் சூரியன் 10இல் இருப்பது சிறப்பானது. மேலும் தனது நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைச் செய்யும். தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். மனஅமைதி இருக்கும். (2, 11) உரிய புதன் 9இல் இருப்பது நல்லதல்ல. கையில் பணம் இருக்காது. மூத்த சகோதரத்துக்கும் நல்ல பலன் இல்லை. நண்பர்களுடன் ஊர்சுத்த பலன் உண்டு. (3, 10) உரிய சுக்கிரன் 10இல் இருப்பதில் பலன் இல்லை. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. இளைய சகோதரத்துக்கும் நல்ல பலன் இல்லை. (4, 9) உரிய செவ்வாய் 7இல் இருப்பது தோசம். பெற்றோருக்கு நல்ல பலன் இல்லை. வாகன சுகம் இருக்காது. (6, 7) உரிய சனி 11இல் இருப்பது நல்லது. திருமணபலன் உண்டு. பகை விலகும். உடல் ஆரோக்கியம் உண்டு.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1, 10) உரிய புதன் 8இல் இருப்பது கூடாது. இருப்பினும் சூரியனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் தடைப்படலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. மனக்கட்டுப்பாடு இருக்காது. (2, 9) உரிய சுக்கிரன் 9 இல் ஆட்சியாக இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். பிதாவுக்கும் நல்ல பலன் உண்டு. (4, 7) உரிய குரு, ராசியில் கேதுவுடன் இருப்பது தோசம். வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். (5, 6) உரிய சனி 10இல் இருப்பது மத்திமபலன். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். பகை விலகும். உடல் ஆரோக்கியம் உண்டு. 12க்குரிய சூரியன் 9இல் இருப்பது கூடாது. சயன சுகம் இருக்காது. ராசியில் கேது இருப்பதும் கூடாது.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1, 8) உரிய சுக்கிரன் எட்டில் ஆட்சியாக இருப்பது நல்லது. இருப்பினும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது கூடாது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். மனக்கட்டுப்பாடு இருக்கும். பிரயாண வாய்ப்பை பாதிக்கலாம். (2, 7) உரிய செவ்வாய் 5இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. திருமணவாய்ப்பை பாதிக்கலாம். (4, 5) உரிய சனி 9இல் இருப்பது கூடாது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. வாகன சுகம் இருக்காது. குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். 10ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு. (9, 12) உரிய புதன் 7இல் இருப்பது நல்லதல்ல பிதாவுக்கு நல்லபலன் இல்லை. சயன சுகம் இருக்காது. அட்டமத்துச்சனியைவிட 9இல் உள்ள சனி நல்லது. ஏதாவது நன்மை செய்யலாம்.

**விருச்சிகம்: விசாகம் 4,அனுசம், கேட்டை**

(1, 6) உரிய செவ்வாய் 4இல் இருப்பது தோசம். மேலும் ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பது கூடாது. தொடங்கும் காரியங்கள் தடைப்படலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எதிரிகளால் தொல்லை இருக்கும். (2, 5) உரிய குரு 11இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். குழந்தைகளின் செயல்பாடு திருப்தி தரும். (3, 4) உரிய சனி 8இல் இருப்பது கூடாது. வாகனசுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. இளைய சகோதரருக்கும் நல்ல பலன் இருக்காது. (7, 12) உரிய சுக்கிரன் 7இல் இருப்பது கூடாது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். சயனசுகம் இருக்காது. தொழுக்குரிய சூரியன் 7இல் இருப்பது கூடாது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1, 4) உரிய குரு 10இல் கேதுவுடன் இருப்பது நல்லதல்ல. இருப்பினும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் தாமதமானாலும் நிறைவேறும். வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. (2, 3) உரிய சனி 7 இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. இளைய சகோதரத்துக்கும் நல்ல பலன் இல்லை. (5, 12) உரிய செவ்வாய் மூன்றில் இருப்பது விசேஷம். சயனசுகம் உண்டு. குழந்தைகள் ஆரோக்கியமாக செயல்படுவர். (6, 11) உரிய சுக்கிரன் 6இல் இருப்பது கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். மூத்த சகோதரத்துக்கும் நல்ல பலன் இல்லை. நண்பர்களால் சண்டைசச்சரவு வர வாய்ப்பு உள்ளது. (7, 10) உரிய புதன் 5இல் இருப்பது நல்லது. திருமணவாய்ப்பு உள்ளது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும்.

**மகரம்: உத்தராடம்2,3,4,. திருவோணம், அவிட்டம்1,2**

(1, 2) உரிய சனி 6இல் இருப்பது விசேஷம். மேலும், குருவின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத்தரும். கையில் பணம் இருக்கும். மனக்கட்டுப்பாடு இருக்கும். (4, 11) உரிய செவ்வாய் இரண்டில் இருப்பது தோசம். வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. மூத்த சகோதரத்துக்கும் கூடாது. நண்பர்களால் செலவு இருக்கும். (5, 10) உரிய சுக்கிரன் 5இல் ஆட்சியாக இருப்பது நல்லது. தொழில்துறை முன்னேறும். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். 7ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் திருமணபலன் உண்டு. குடும்பத்தில் அமைதி இருக்கும். (6, 9) உரிய புதன் 4இல் இருப்பதில் பயன் இல்லை. பிதாவுக்கு நல்ல பலன் இல்லை. பகைவரால் தொல்லை இருக்கும். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம்.

**இவ்வார 'ராசிபலன்' 16–05–2005 முதல் 22 –05–2005வரை**

பொ. சந்திரன்

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1, 12) உரிய சனி 5 இல் இருப்பது கூடாது. இருப்பினும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். பிரயாண வாய்ப்பை பாதிக்கலாம். சயன சுகம் இருக்காது. (2, 11) உரிய குரு 8இல் இருப்பது நல்லதல்ல. கையில் பணம் இருக்காது. நண்பர்களுக்கும் நல்ல பலன் இல்லை. மூத்த சகோதரத்துக்கும் கூடாது. (3, 10) உரிய செவ்வாய் ராசியில் இருப்பது நல்லதல்ல. தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. இளைய சகோதரத்துக்கும் கூடாது. (4, 9) உரிய சுக்கிரன் 4இல் ஆட்சியாக இருப்பது நல்லது. பெற்றோருக்கு நல்ல பலன் உண்டு. வாகன சுகம் உண்டு. 7க்குரிய சூரியன் 4இல் இருப்பது கூடாது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம்.

**இவ்வார கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| ராகு | புதன் | சூரி சுக்கிரன் | சனி |
| செவ் | செவ்வாய் சதயம் ராகு; சுக்கிரன் ரோகிணி சந்; புதன் கார்த்திகை சூரியன்; சூரியன் கார்த்திகை சூரியன்; குரு அத்தம் சந்; சனி புனர்பூசம் குரு | | |
| | | | |
| | | | குரு கேது |

வைகாசி 2 முதல் 8 வரை

சந்திரன் சிங்கம் முதல் துலாம் வரை

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1, 10) உரிய குரு 7இல் இருப்பது நல்லது. மேலும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும். பிரயாணவாய்ப்பு உண்டு. (2, 9) உரிய செவ்வாய் 12இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. பிதாவுக்கும் கூடாது. (4, 7) உரிய புதன் இரண்டில் இருப்பது நல்லது. வாகன சுகம் உண்டு. தாய்க்கும் நல்ல பலன் உண்டு. திருமணவாய்ப்பு உண்டு. 6க்குரிய சூரியன் மூன்றில் இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் உண்டு. பகைவர் சரண் அடைவர். (11, 12) உரிய சனி 4இல் இருப்பது கூடாது. சயன சுகம் இருக்காது. நண்பர்களுக்கும் நல்ல பலன் இல்லை.

# அந்தமான் தீவு ஆதிவாசிகள்


உலகிலுள்ள பழங்குடி மக்கள் பற்றிப் பல்வேறு கதைகள் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் அந்தமான் தீவுக் கூட்டங்கள் சிலவற்றில் வாழும் ஆறுவகையான பழங்குடியினரின் கதையோ வித்தியாசமானது.

இவர்களில் ஒரு கூட்டத்தினர் நிக்காபார் இனத்தவர் என அழைக்கப்படுகிறார்கள். இவ்வின மக்களின் தொகை 2,86,53 ஆகும். ஓரளவு இன்றைய மனிதர்களைப் போல்– அதாவது நமது நாட்டிலுள்ள வேடர்களைப்போல– வாழ்க்கை நடத்தும் இவர்களில் மூவாயிரம் பேர் அண்மையில் ஏற்பட்ட சுனாமியால் பலிகொள்ளப்பட்டு விட்டார்கள்.

தவிர செண்டினலிஸ், ஏஞ்செஸ், சாம்பொன் எனப்படும் மூன்று வகையான பழங்குடியினர்தான் அசல் கற்கால மனிதர்களைப் போல் எதுவித முன்னேற்றமுமின்றி வாழ்கின்றார்கள்.

ஆடை அணியாது நிர்வாணமாகவே காணப்படும் இவ்வினத்தவர்கள் தாம் வசிக்கும் பகுதிக்குள் யாரையும் அனுமதிப்பதில்லை. வேற்று மனிதர்கள் யாராவது இவர்களது பகுதிக்குள் நுழைந்தால் அவர்களை அம்பு எறிந்து கொன்று விடுவார்கள்.

அண்மையில் உலகையே உலுக்கிய சுனாமிப் பேரலையின் தாக்கத்திலிருந்து இவர்கள் தப்பிவிட்டார்களா என்று அறிந்து கொள்வதற்காக அந்தமான் தீவுகடற்படையின்ஹெலிக்கொப்டர் ஒன்று இவர்கள் வாழும் பகுதியில் தாழ்வாகப் பறந்து சென்றபோது ஒருவர் பெரிய தடியினால் அதைத்தாக்குவதற்கு முற்பட்டார். வேறுசிலர் அம்புகளால் அதற்கு எறிந்தனர்.



மேலும் இவர்கள் அனைவரும் சுனாமிக்கு பலியாகிவிட்டதாக அந்தத்தீவின் இராணுவத்தினர் கூறியிருந்த போதும் அவர்களுக்கு எதுவும் நடக்கவில்லை. எப்படி அவர்களால் தப்பிக்கொள்ள முடிந்தது என்பது யாருமே புரிந்து கொள்ள முடியாத புதிராக இருக்கிறது.

காற்றடிக்கும் திசை, கடலின்வேகம், பறவைகளின் குரல் போன்றவற்றை நன்கு தெரிந்து வைத்துள்ள இந்தப் பழங்குடியினர் கோரைப் புல்லாலான வீடுகளில் கூட்டங்கூட்டமாகவசிக்கிறார்கள். இப்போதும் கல்லை உரசித்தான் தீ மூட்டுகிறார்கள்.

உணவு தேடுவதுதான் அவர்களது தொழில். கடலுக்குள் ஈட்டி எறிந்து மீன்களைக் கொன்று பின்னர் அவற்றைச் சுட்டுச் சாப்பிடுகின்றார்கள். இவர்கள் சுனாமி தாக்கவிருப்பதை முன்னரே அறிந்து உயரமான பகுதிகளுக்குத் தப்பிச் சென்றிருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

விலங்குகளும், பறவைகளும் எப்படிச் சுனாமியிலிருந்து தப்பினவோ அப்படியே இவர்களும் இயற்கை கொடுத்த நுண்ணறிவால் தப்பிக்கொண்டனரென்று கூறப்படுகிறது.

அந்தமான் அரசும் இந்த ஆதிவாசிகளைப் பாதுகாப்பதற்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்துள்ளது.

# மனப்புரட்சியும் மனித விடுதலையும்....

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே, நான் என்பதே ஒரு படிமம். ஒரு மையப் படிமம். காலத்தால் செத்துப்போன கருத்துருவங்களிலிருந்து, நினைவுகளின் கல்லறைகளிலிருந்து உயிர்பெற்றும் இயங்கும் ஓர் எண்ணம்.

"மிகவும் விழிப்புடன் கூர்மையான கவனத்துடன், கணத்திற்குக் கணம் உனது எண்ணத்தின் அசைவுகளை அவதானித்துப் பார். நீ அவதானிப்பதும் ஆராய்வதும் உனது எண்ணமாக இருந்தால் நீ எதையும் கண்டுகொள்ளப் போவதில்லை. உனது விழிப்புணர்வின் வெளிச்சத்திலேயே நீ உன்னைக் கண்டுகொள்ள வேண்டும். உனது விழிப்புணர்வு கூர்மையாகி, உனது கவனம் முழுமைபெறும் பொழுது, அவதானிப்பவனாக, சிந்திப்பவனாக, உனது பிரக்ஞையின் மையமாக இயங்கிவரும் உனது சுயம் செயலிழந்து விடுவதை நீ கண்டுகொள்வாய். இவ் விழிப்பு நிலையில் மனமானது எண்ண இயக்கத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு அமைதி அடைகிறது. எண்ண இயக்கத்திலிருந்து விடுதலையடைந்து, அமைதிகொள்ளும் மனதில்தான் அன்பும் அழகும் ஆனந்தமும் சாத்தியமாகின்றன என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

வாழ்க்கை என்பதே ஒரு மாபெரும் இயக்கம்; ஒரு மாபெரும் சக்தி. எமது மனம், எமது எண்ணம், எமது உணர்வு, எமது ஆசைகள் எல்லாமே இந்த இயக்கத்தின், இந்த சக்தியின் வெளிப்பாடுகள்தான். எமது மனதில், எண்ணத்தில், உணர்வில், ஆசையில் பிணக்கும் போராட்டமும் தாண்டவமாடும் பொழுது, எமது உறவுகளில் முரண்பாடு தலைதூக்கும்பொழுது, இந்த சக்தி விரயமாகிறது; வீணாகிறது. மனித மனமானது விழிப்புணர்வுகொண்டு, தனக்குள் தெளிவுகண்டு, உள்ளும் புறமும் முழுமையான, அமைதியான, ஒத்திசைவான வாழ்வைத் தழுவிக்கொள்ளும் பொழுதுதான் எல்லையற்ற சக்தியாக மனிதனிடம் ஞானோதயம் பிறக்கிறது என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

எமது பழைய மனம், பயிற்றப்பட்ட மனம் இறக்க வேண்டும். அந்தச் சாவிலிருந்துதான் புதிய மனம், புரட்சிகர மனம் பிறக்க முடியும். அந்தப் புரட்சிகர மனமே முழு மனித விடுதலைக்கும், சமுதாய விடுதலைக்கும் வழிவகுக்கும்.

கிருஷ்ணமூர்த்தி போதிக்கும் மனப்புரட்சியின் சாராம்சம் இதுதான்.

(அடுத்தவாரம் 'உலக வரலாறும் மனித விடுதலையும்')


## 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ. 15,680.00 | ரூ. 23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. | ரூ. 70.00 | ரூ. [illegible]10.00 |
| (250:300 Col. Cms) | | |

# சிறார்களின் கைவண்ணம்


சி.நிரோஜினி, தரம் 11,
செம்பியன்பற்று தெற்கு.


ந.டிலானி, தரம் 8 B,
தெருங்கேணி ம.வி.


அ.சஞ்சீவ், தரம் 10 B,
யா/றிபேக் கல்லூரி,
சாவகச்சேரி


மு.யமீலா, தரம் 7,
யா/வல்வெட்டி
இந்து தமிழ்க்
கலவன்பாடசாலை

# 3 பானைகள்

ஒரு பெரிய தனவந்தர் மரணப் படுக்கையில் இருந்தார். தனது இறுதி மூச்சை விடுவதற்கு முன்பாக தனது மூன்று மகன்களையும் அழைத்தார். தான் இறந்த பிறகு படுக்கைக்கு அடியில் வைத்திருக்கும் மூன்று மண்பானைகளை எடுத்துப் பார்க்கும்படியும் அதன் படி சொத்துக்களைப் பிரித்துக் கொள்ளுமாறும் ஆலோசனை கூறினார்.



தந்தை இறந்த பின்னர், அவர் சொன்னது மாதிரியே அவரது படுக்கைக்குக் கீழே சகோதரர்கள் மூவரும் தோண்டிப் பார்த்தார்கள்.

அங்கே மூன்று மண் பானைகள் இருந்தன. மேலாக இருந்த பானையில் களி மண்ணும் நடுவில் இருந்த பானையில் பசுவின் சாணமும், கீழ் பானையில் வைக்கோலும் இருந்தன.

அந்த மூன்று பானைகளுக்கும் அடியில் சிறியதாக இன்னொரு பானையும் இருந்தது. அதில் சிறிதளவு வெள்ளி நாணயங்கள் இருந்தன.

சகோதரர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் தந்தை ஏதோ ஒரு செய்தியைச் சொல்வதற்காகத்தான் இப்படி ஒவ்வொரு பானையிலும் ஏதாவது ஒரு பொருளைப் போட்டு வைத்திருக்கிறார் என்று எண்ணினார்கள். மூளையைக் கசக்கிப் பிழிந்தும் கூட அவர்களுக்கு அதன் அர்த்தம் புரியவில்லை.

இறுதியில் தங்களுக்குத் தெரிந்த வைத்தியர் ஒருவரின் ஆலோசனையைக் கேட்பது என்ற முடிவிற்கு வந்து அந்த வைத்தியரை அணுகினார்கள்.

வைத்தியரை நேரடியாகப் பார்த்து தங்களது பிரச்சினையைக் கூறினார்கள்.

வைத்தியர் சிரித்தார். "தம்பிகளே! உங்கள் தந்தை உங்களுடன் புதிர் விளையாட்டு விளையாடி இருக்கிறார். அவ்வளவுதான். மேல் பானையில் களிமண் இருந்ததல்லவா? அப்படியென்றால் மூத்த மகன் மண் தொடர்பான எல்லா நிலபுலன்களையும் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று பொருள்.

நடுவில் இருந்த பானையில் பசுவின் சாணம் இருந்ததுதானே? அப்படியென்றால் இரண்டாவது மகன் தந்தையின் கால்நடைப் பண்ணையை வைத்துக் கொள்ளலாம் என்று பொருள்.

கீழ் பானையில் வைக்கோல் தானே இருந்தது? வைக்கோல் தங்க நிறம். எனவே வீட்டில் உள்ள எல்லாத் தங்கமும் மூன்றாவது மகனுக்குச் சொந்தம்... இது தான் உங்கள் தந்தை போட்ட புதிர்'' என்று விபரித்தார், வைத்தியர்.

''சரி', நான்காவதாக ஒரு சிறிய பானையில் கொஞ்சம் வெள்ளிக் காசுகள் இருந்தனவே அதை எதற்காக வைத்து விட்டுச் சென்றாராம்?'' மூன்று சகோதரர்களும் ஆர்வத்துடன் கேட்டார்கள்.

''அதுவா?... நீங்கள் மூன்று பேரும் என்னைப் போன்ற அறிவாளி ஒருவரிடம் சென்று நிச்சயம் ஆலோசனை கேட்பீர்கள் என்பது உங்கள் தந்தைக்குத் தெரியும். அப்படி ஆலோசனை கேட்கும் போது அதற்குக் கட்டணமாக கூலி தரவேண்டாமா? அதற்காகத்தான் அந்த வெள்ளிக் காசுகள்'' என்று சாதுரியமாகக் கூறிய வைத்தியர் அந்தக் காசுகளை சகோதரர்களிடமிருந்து வாங்கிக் கொண்டார்.

பிழைக்கத் தெரிந்த வைத்தியர்!

## அறிந்து கொள்ளுங்கள்

01. உலகின் மிகப்பெரிய சிகரம்
    எவரெஸ்ட் (இந்தியா)
02. மிகப் பெரிய நூதனசாலை?
    பிரிட்டிஷ் நூதனசாலை (லண்டன்)
03. உலகில் மிகவும் பெரிய விரிகுடா
    விருட்சன் விரிகுடா 315500 சதுரகி.மீ
04. மிகப் பெரிய சமுத்திரம்
    பசுபிக் சமுத்திரம்
05. மிகப் பெரிய கண்டம்
    ஆசியா
06. மிகப் பெரிய தடாகம்
    மியாட் தாடகம்
07. நீளமான நதி
    அமேசன்
08. மழை அதிகமாக பெய்யும் இடம்
    அஸ்ஸாமிலுள்ள சிரபுஞ்சி
09. உப்பு அதிகமாக உள்ள கடல்
    சாக்கடல்

ஏ.சுகந்தம், தரம் 11
நயினாதீவு ஸ்ரீ கணேசா கனிஷ்ட வித்தி.



# பெண்களின் வெற்றிக்கு...



பெண்கள் தாங்கள் ஈடுபட்ட துறையில் வெற்றிக்கொடி நாட்ட கடைப்பிடிக்க வேண்டியவை.

எந்த வேலையை பெண்கள் பொறுப்பில் விட்டாலும், கடினமாக உழைத்து, அதை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். எந்த வேலையாக இருந்தாலும் அதற்காகக் கடுமையாக உழைக்க வேண்டும் என்ற கொள்கையை இயல்பான வாழ்க்கைமுறையாகப் பெண்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

'ஏதோ ஒரு வேலையை நம்மிடம் கொடுத்துவிட்டார்கள். கொடுத்ததற்காக அதைச் செய்யவேண்டும்' – என்ற மனோபாவம் பெண்களிடம் ஏற்பட்டால் அந்த வேலையில் ஆர்வமற்று ஈடுபாடு இல்லாமல் போய்விடும். ஏனோதானோவென்று அந்த வேலையைச் செய்து முடித்துவிடுவார்கள். அப்படி இல்லாமல் எந்த வேலையாக இருந்தாலும் முழுமன ஈடுபாட்டோடு அதைச் செய்ய வேண்டும்.

நெருக்கடி இல்லாத வாழ்க்கை இல்லை எத்தனையோ நெருக்கடிகள் ஏற்பட்டாலும், பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அதில் இருந்து எப்படியாவது மீண்டுவிடலாம் என்ற தன்னம்பிக்கை எப்போதுமே பெண்களிடம் இருக்க வேண்டும். எதற்கும் தளராத மனமுள்ளவர்கள் வாழ்க்கையில் ஒரு போதும் வெறுப்படையமாட்டார்கள். அவர்கள் தங்கள் குறிக்கோளை வேகமாக எட்டிக்கொண்டே இருப்பார்கள்.

பெண்கள் குடும்பத்திற்கும், நட்பிற்கும், உறவினர்களுக்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டும். நட்பையும், உறவையும் குடும்பத்தையும் விலக்கி விட்டு பெண்கள் வெற்றி பெற்று எந்தப் பலனும் இல்லை. தனியாக இயங்குவதற்குப்பதில் தன்னோடு சிலரை சேர்த்துக் கொண்டு இயங்கினால் அதிக சாதனைகள் புரிய முடியும். தனிச் சாதானையைவிட கூட்டுச் சாதனையே மிகப் பெரிய அளவில் பேசப்படும். பெண்களின் எந்த ஒரு செயலிலும் அடுத்தவர்கள் மனம் நோகும்படி நடந்துவிடக்கூடாது. மற்றவர்களை மனம் நோகவைப்பவர்களால் சாதனையாளர்களாக உருவாக முடிவதில்லை.

பெண்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையிலும் மிகக் கவனமாக இருக்கவேண்டும். பேசும் வார்த்தை என்பது கையில் இருந்து செல்லும் கல்போன்றது. அது அடுத்தவர்களை காயப்படுத்தாமல், மாங்காயை விழ வைப்பதாக இருக்க வேண்டும்.

# நான்கு வழிகளில் நடைப்பயிற்சி

நடப்பது நல்ல விஷயம், நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று இன்று நகரவாசிகள் மாறிப்போனதற்கு முக்கிய காரணம் அவர்களது வாழ்க்கை முறை மற்றும் உணவுப் பழக்கமே.

இதனால் பல்வேறு நோய்களால் அவர்கள் அவஸ்தைப்படுகிறார்கள். குறிப்பாக சர்க்கரை நோயாளிகள் நகர்ப்புறங்களில் அதிகம் உள்ளனர்.

இதனால் நடப்பது மட்டுமே சர்க்கரையை கரைக்கும் என்று டாக்டர்கள் சிபாரிசு செய்கிறார்கள். ஆகவே பீச், பூங்கா, நீண்ட வீதிப் பகுதிகளில் காலையில் நகர மக்கள் சுறுசுறுப்பாக நடக்கிறார்கள் ஆனாலும், இவர்களில் பெரும்பாலானவர்களுக்கு எப்படி நடப்பது என்று தெரிவதில்லை.

நடைப்பயிற்சிக்குநான்குவழிகள் உண்டு.

தலை, தோள்பட்டை, மார்பு- நடக்கும் போது தலையை நிமிர்த்தி தோள்பட்டைகளுக்கு நடுமையமாக தலை இருக்குமாறு வைத்துக் கொள்வது அவசியம். கண்கள் நேரான திசையில் இருக்க வேண்டும். நடக்கும் போது தோள்பட்டையை சற்று ஏற்றி இறக்கி நடை பயிலுங்கள். பொதுவாக மார்பு எல்லோருக்கும் நிமிர்ந்த நிலையில் இருக்கும். இருந்தாலும் மார்பை இன்னும் சற்று முன்னோக்கி நிமிர்த்தியவாறு நடக்கவும்.

கைகளும், புயங்களும்- நடக்கும் போது உங்கள் கைகளை 90 டிகிரி கோணத்தில் இயக்க வேண்டும். இரண்டு கைகளையும் முன்னும் பின்னும் வேகமாக உடலையொட்டி அசைத்து நடக்கவும். கைகளை தளர்வாக விட்டு நடக்கக் கூடாது.

இடுப்பு, தொடை, கால்- வேகமாக நடக்கும் போது எல்லோரும் தொடைப் பகுதியைத்தான் வேகமாக இழுத்தவாறு நடப்பார்கள். அதைவிட இடுப்பு பகுதியை அசைத்து நடப்பதுதான் சிறந்த பலனைத் தரும்.



நடை சீரற்ற முறையில் இருக்கக்கூடாது. குறுகிய தூரம் அடியெடுத்து வைத்தாலும் வேகமாக பாதுகாப்பாக, உறுதியாக கால்களை முன்னோக்கிக் கொண்டு சென்று நடக்க வேண்டும்.

அடிவயிறு- உங்கள் அடிவயிற்றுப் பகுதியைமெதுவாகஇழுத்து நடக்கவும். அப்போது முதுகெலும்பும், இடுப்பும் சற்று முன்னோக்கி வரும். இதன் காரணமாக நீங்கள் உயரமானவராகவும் நிமிர்ந்த தோற்றம் கொண்டவராகவும் காணப்படுவீர்கள்.

# இரட்டைக் கவனம்

இரட்டைக் குழந்தைகள் பிறந்தால் அது இரட்டைச் சந்தோஷமா? அல்லது இரட்டைச் சுமையா? இரண்டும் தான். ஒரே முட்டை இரண்டாகப் பிரிந்து அதனால் இரட்டைக் குழந்தைகள் பிறக்கலாம். அப்படிப் பிறக்கும் குழந்தைகள் இரண்டும் ஆண்களாகவோ அல்லது இரண்டும் பெண்களாகவோ பிறக்கும். பெண்களின் கரு முட்டை ஒன்றுதான் உருவாகும். அரிதாக இரண்டு முட்டைகள் உருவாகி இரண்டும் கருத்தரித்தால் அப்படிப் பிறக்கும்இரட்டைக் குழந்தைகளில் ஒன்று ஆணாகவும் மற்றது பெண்ணாகவும் இருக்க வாய்ப்பு அதிகம்.

கருவைச் சுமக்கும் ஆரம்பக் கட்டத்திலேயே தாயின் எடை "விர்" என்று ஏறினால் அது உள்ளே இரட்டையர்கள் உருவாகியிருக்கிறார்கள் என்பதற்கு அறிகுறி.

எப்போதுமே இரட்டைக் குழந்தைகளைப் பெறுவது என்பது சிக்கலானது தான். முக்கியமாக இரண்டாவது குழந்தைப் பிறப்பு. காரணம், முதல் குழந்தை பிறந்தவுடனேயே அம்மாவின் உடல் சோர்வடைந்து விடுகிறது. பன்னீர் குடப் பகுதியிலுள்ள தண்ணீரும் மிகவும் குறைவடைந்து விடுவதால் இரண்டாவது குழந்தை பிறக்கும் போது சிக்கல் ஏற்படலாம். தவிர, மற்றக் குழந்தைகளை விட மன வளர்ச்சி குன்றியிருக்கும் குழந்தைகளாக இருப்பது இரட்டைக் குழந்தை களிடையே சற்று அதிகம் ஆனாலும் நவீன மருத்துவ வசதிகள் இந்தநிலையை வேகமாக போக்கி வருகின்றன.



வழக்கமாக கர்ப்பிணியை விட இரட்டைக் குழந்தைளைச் சுமந்து கொண்டிருக்கும் பெண்கள் அதிக அளவில் ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

கருவில்வளரும்முதல் ஏழு மாதங்கள் வரை இரு குழந்தைகளும் ஒரே அளவு எடை கொண்டவையாகத்தான் இருக்கின்றன. அதன்பின் ஒன்றின் இரத்தத்தை இன்னொன்று உறிஞ்சிவிடக்கூடும்.

எனவே, பிறக்கும் போது ஒரு குழந்தை மற்றதை விட மிகவும் எடை குறைவானதாக இருக்கக் கூடும். பெரும்பாலும் இரண்டாவதாக பிறக்கும் குழந்தை தான் எடை குறைவானதாக இருக்கிறது.

உடல் ஒட்டிப் பிறக்கும் குழந்தைகளை "சயாமிஸ் ருவின்ஸ்" என்பார்கள். காரணம் முதன் முதலாக இப்படிப் பட்ட குழந்தைகள் பிறந்தது சயாம் (இப்போது தாய்லாந்து) நாட்டில் தான். மூளைப்பகுதி, குடல் பகுதி இப்படி எவை வேண்டுமானாலும் ஒட்டிக் கொண்டிருக்கலாம். அறிவியல் பெரிதும் வளர்ந்து விட்டதால் இப்படி ஒட்டிப் பிறக்கும் குழந்தைகளைத் தனியாக்குவது மிகவும் கஷ்டமாக இருப்பதில்லை. ஆனால் மூளைப் பகுதி ஒட்டிக்கொண்டு பிறந்தால் அது கொஞ்சம் சிக்கலாகத் தான் இருக்கிறது.

மற்றக் குழந்தைகளைவிட இரட்டைக் குழந்தைகள் சற்று மெதுவாகவே பேச ஆரம்பிக்கிறார்கள். அதற்கு ஒரு காரணத்தையும் மருத்துவர்கள் குறிப்பிடுகிறார்கள். இந்த இரண்டு குழந்தைகளுக்கும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வது புரிந்து விடுவதால் பிறருடன் பேசும் அவசியம் குறைந்து போகிறது. இதனால் பேச்சுவரத் தாமதமாகிறது. நாளடைவில் கூடத் தாங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் பேசுவதிலேயே திருப்தி அடைந்து விடுவதால் இரட்டையர்கள் பிறருடன் கலந்து பழகுவதில் ஆர்வம் காட்டாமல் இருக்கக் கூடும்.

இரட்டைக் குழந்தைகளில் தந்தை மகிழ்ச்சியடைகிறார். ஆனால் தாய்க்கு சுமை அதிகம் தான். அதிக அளவில் பால் கொடுக்க வேண்டும். அதிக துணிகளை சுத்தமாக்க வேண்டும். தவிர, ஒரு குழந்தையை சற்று குறைவாகக் கவனிக்கிறோமா என்ற குற்ற உணர்வும் ஏற்படக்கூடும்.

இரட்டையர்களுக்கோ வேறு விதமான சுமை. அடிக்கடி அவர்களை ஒப்பிடுவார்கள். இதனால் அவர்களுக்கிடையே பொறாமை ஏற்பட வழியுண்டு.

எனவே இரட்டைக் குழந்தைகள் பெற்ற அல்லது அவர்களை பெற்றுக்கொள்ள இருக்கும் தாய்மார்களே ஜாக்கிரதை குழந்தை வளர்ப்பில்.

# காய்கறிகளை நல்லதாய் வாங்குவது எப்படி?

எந்தெந்தக் காய்கறிகளை எப்படி எப்படி வாங்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியுமா?

வெண்டைக்காய் வாங்கும்போது அது இளசாக இருக்கிறதா என்பதற்காக அதன் நுனிப் பகுதியை முறித்துப் பார்ப்பார்கள். இதனால் வெண்டைக்காய் சேதமாகும். அதைத்தவிர்க்க வெண்டைக்காயை லேசாக அழுத்திப் பார்த்தாலே போதும். விதைகள் தட்டுப்பட்டால், அது முற்றிவிட்டது என்று அர்த்தம்.

*கொத்தவரைக்காயை லேசாக வளைத்துப் பார்க்கவேண்டும். வளைந்தால் இளசு என்பதும் முறிந்தால் முற்றியது என்றும் தெரிந்துகொள்ளலாம்.

* மாங்காயில் கொட்டை பெரிதாக இருந்தால், மாங்காய் வாங்குபவருக்கு பயன்குறைவு தான். அதனால்கொட்டை சிறிதாக இருக்கக் கூடிய மாங்காயைப் பார்த்து வாங்க என்னவழி? மாங்காயைக் காதருகே வைத்து தட்டிப்பாருங்கள். தேங்காயில் வருவதுபோல் நன்றாக சத்தம் வந்தால், அதில் கொட்டை சிறிதாக இருக்கும்.

* கத்தரிக்காய் முற்றலா? இளசா என்பதை அதன் தோலைப் பார்த்துத்தான் தெரிய வேண்டும். பார்க்க மென்மையாக தெரிந்தால் இளசு. கத்திரிக்காய்த் தோல் முரட்டுத்தனமாக இருந்தால், முற்றல்.

* குடை மிளகாய் அதிக பச்சை நிறமாக இருந்தால் நல்லது. வதங்கியது நல்லதல்ல.

*பீர்க்கங்காயின் அடிப்பகுதி குண்டாகவும், முனைப்பகுதி சிறுத்தும் இருக்கக்கூடாது.



எல்லா பகுதிகளும் சீராக இருப்பதே சிறந்தது.

* சிவப்புநிறகுடை மிளகாயும் உண்டு. சிவப்புநிற குடைமிளகாய் தோல் 'பிரஷ்'ஷாக இருக்கவேண்டும்.

* நாட்டு அவரைக்காய் நார் அதிகம் இல்லாமல் இருக்கவேண்டும். தொட்டுப் பார்த்தால், விதைகள் தெரியும். விதைகள் பெரிதாக இருந்தால் அதை வாங்கவேண்டாம்.

* நோகோல் வாங்கும்போது அதன் அடிப்பகுதியான வேர்ப்பகுதி சிறுத்து இருப்பது நல்லது. வேர்ப்பகுதி பெருத்துக் காணப்பட்டால், அது முற்றியது என்று தெரிந்துகொள்ளலாம்.

* வெள்ளைக் கத்திரிக்காயில் காம்பு, நெட்டிப் பகுதி பெரிதாக இருந்தால், அது இளசு.

* நாட்டுத் தக்காளி வாங்கும் போது லேசாக அழுத்திப் பாருங்கள். பஞ்சு போன்று மென்மையாக இருப்பது நல்லது.

* பீட்ரூட்டை லேசாகக் கிள்ளிப் பாருங்கள். அதிக சிவப்பாக இருக்கும். அதுவே சிறந்தது.

*வாழைப் பூக்கள் கறுத்துக் காணப்பட்டால் பழையது. காம்புப் பகுதி அதிக வெள்ளையாக இருந்தால் புதியது.

* புடலங்காய் கெட்டியாக இருக்கவேண்டும். அப்படியானால் தான் தசைப்பகுதி அதிகமாக இருக்கும்.

* முள்ளங்கித் தோல் மென்மையாக இருந்தால், இளசு.

* பாகற்காய் உருண்டை வடிவத்தில் இருக்கக்கூடாது. தட்டையாக நீளமாக இருப்பதே சமையலுக்கு நல்லது.

* கோவா இதழ்கள் இளசாக இருப்பதைப் பார்த்து வாங்கவேண்டும்.

## பெண்

### நெய் அப்பம்

தேவையானவை: அரிசி மாவு - 1 கப், வெல்லம் - 1 கப், மைதா 2 மேசைக்கரண்டி, ஏலப்பொடி - 1 மேசைக்கரண்டி, நெய் - 4 கரண்டி, தேங்காய்த்துருவல் - 1/8கப், பேக்கிங் பவுடர் - ஒரு சிட்டிகை, நெய் அல்லது எண்ணெய் - வேகவிடத் தேவையான அளவு.

செய்முறை:- வெல்லத்தைப் பொடியாக்கி 1/2 கப் நீரில் போட்டு அடுப்பில் வைத்துக் கரைந்தபின், வடிகட்டவும். அதில் அரிசிமாவு, மைதா, தேங்காய்த் துருவல், பேகிங் பவுடர், ஏலப்பொடி, 4 கரண்டி நெய் சேர்த்து தோசை மாவில் பதமாகக் கரைக்கவும். தேவையெனில் நீர் சேர்க்கவும்.

அடுப்பில் நெய் அல்லது எண்ணெய் வைத்துக் காய்ந்ததும் கரைத்த மாவை ஒரு சிறு குழிக்கரண்டியால்எடுத்து விட்டு, நன்கு உப்பி வெந்ததும் எடுக்கவும். இதையே குழிப்பணியாரத்தட்டில், சின்னக் குழியில் 2 கரண்டி நெய்விட்டு மேலே மாவு போட்டு அதன் மேல் 2 மே. கரண்டி நெய்விட்டு அதன் பின் ஒரு மூடியால் மூடி அடுப்பைச் சிறிதாக எரிய வைக்கவும். மேல் பாகம் வெந்ததும் ஒரு சிறு கரண்டியினால் குழி அப்பத்தைத்திருப்பிவிட்டு, மேலும் 2மே.கரண்டி நெய் சேர்த்து வேகவிட்டு எடுக்கவும் சுவையான நெய் அப்பம் தயார்.

# தொடரும் தவிப்பு

## 32 மகனை மீட்கப் போராடும் தாய் இவள்

தூக்குத் தண்டனைக்கு காத்திருக்கும் தன் மகனை தூக்குக் கயிற்றின் பிடியிலிருந்து மீட்பதற்குப் போராடும் ஒரு தாயின் உண்மைக் கதை இது.

நவீன புறநானூறாக உணர்வும், விறுவிறுப்பும்நிறைத்து இதனைச் செதுக்கியுள்ளார் இளம் எழுத்தாளர் பூங்குழலி.

மலைப் பாதையின் துவக்கத்தில் ஒரு சோதனைச் சாவடி. அதைத் தாண்டியதும் ஒருபெரிய பலகை. 'முண்டந்துறை புலிகளின் சரணாலயம் உங்களை வரவேற்கிறது'... அதைப் பார்த்தவுடன் அனைவரும் சிரித்துக் கொண்டனர்.

அவர்கள் சிரிப்புக்கு காரணம் இருந்தது. பாபநாசம் வனப்புலிகளுக்கு மட்டுமல்ல, ஒரு காலத்தில் விடுதலைப்புலிகளுக்கும் சரணாலயமாக திகழ்ந்திருக்கிறது. நெடுமாறனின் இந்த வீட்டில்தான் 1980 – களின் நடுவே, புலிகளின் முக்கிய தளபதிகள் பலரும் தங்கி இருந்தனர். இந்தச் செய்தி அனைவருக்கும் தெரியுமாதலால், முண்டத்துறை 'புலிகளின் சரணாலயம் உங்களை வரவேற்கிறது' என்ற அறிவிப்புப் பலகை மகிழ்ச்சியை வரவழைத்துவிட்டது.

மலைப் பாதை குறுகலாக இருந்தாலும் செம்மையாக இருந்தது. அங்கிருந்து பார்த்தால். இவர்கள் தங்கியிருந்த வீடும், ஆறும் தெரிந்தது. சிறிது தூரம் ஆற்றின்கரையிலேயே பாதை சென்றது. தூரத்தில் அருவி பெரிய மலைக்கு நடுவே கிளை பரப்பி வெள்ளையாக விழுந்து கொண்டிருந்தது. விழும் நீர் சுழித்துக் கொண்டு அவசரமாக கிடைத்த இடங்களில் எல்லாம் புகுந்து ஒடி, பின் ஓரிடத்தில் ஒன்றாகி ஒரு ஆறாகிய காட்சி மிக அற்புதமாகத் தெரிந்தது.

அருவி என்றால் குற்றாலம் போல கற்பனை செய்து வந்தவர்களுக்கு, கூட்டமின்றி, அமைதியாக, சுத்தமாக இருந்த அந்தச் சூழல் ஒரு ஆச்சரியம் என்றால், வருடம் பூராவும் நீர் வரத்து இருக்கும் அருவி என்று நெடுமாறன் கூறிய தகவல் மற்றொரு ஆச்சரியம்.

வேறுவெளி ஆட்களின்றி இவர்கள் மட்டும் என்பதால் சுதந்திரமாக ஆசை தீர குளித்தனர். கிண்டலும் கேலியும் கலாட்டாவுமாகப் பொழுது கழிந்தது. அங்கேயே உணவு அருந்திவிட்டு கிளம்பினர்.

மீண்டும் மலை மேலே பயணம். இப்போது சூழல் மாறி இருந்தது. அடர்ந்த காட்டுப் பாதையில் வேறு சத்தங்களின்றி சென்றது வண்டி. காட்டு விலங்குகள் நடமாடும் இடமாகையால் எந்த வித அநாவசிய சத்தமும் எழுப்ப வேண்டாமென அறிவிப்புப் பலகைகள் வழியெங்கும் இருந்தன.

'அங்கப் பாருங்க... மான்...' யாரோ கத்தினார்கள்.

காட்டிய திசையில் திரும்பிப் பார்த்தால் மான் கூட்டம். மலங்க மலங்க விழித்தபடி ஓடத்தயாராக... வண்டி சத்தத்தில் மிரண்டு சிலது ஓடவும் துவங்கிவிட்டன.

'அட... இது தானா... மான் போல துள்ளி ஓடுவதுஎன்றால் இப்படித்தானா...' குழந்தையைப் போல சிரிந்து இரசித்தார்.

'அறிவு... கண்டிப்பா உன்னை இங்கக் கூட்டிட்டு வரணும்டா.. சே நீயில்லாம போயிட்டியே... இருந்திருந்தா இன்னும் எப்படி எல்லாம் இரசிச்சிருக்கலாம்... ஆனா நிச்சயமா உன்னோட வந்து இங்க இருந்து எல்லாத்தையும் நிதானமா இரசிச்சு சுத்திப் பார்க்கணும்..'

மனதில் எத்தகைய உணர்வு எழும்பினாலும் அதை மகனிடம் பகிர்ந்து கொள்ளத் துடிக்கும் தாய் மனசு.

அவர்கள் சென்று அடைந்த இடம் முண்டாந்துறை. வண்டிகளை ஒரு இடத்தில் நிறுத்திவிட்டு காட்டுக்கு நடுவே ஒரு மண் பாதையில் நடந்து சென்றனர். அந்தப் பாதையின் முடிவில் ஒரு படி கீழிறங்கியது. 'இதென்ன மர்மகதைகளில் வருவதுபோல...' என கிண்டலடித்தவாறே இறங்கினால்... அப்பா... காட்டாறு என்றால் இது தானோ? கீழே மயைடிவாரத்தில் அமைதியாக ஒடிய அதே ஆறுதானா இங்கு இப்படி அடர்ந்த காட்டிற்கு நடுவே சுற்றிச் சுழன்று பெருக்கெடுத்து ஆவேசமாக ஒடுவது? யார் மீது கோபமோ? என்ன அவசரமோ? எதற்கு இந்த வேகமோ? நம்பவே முடியவில்லை அற்புதத்திற்கு.

ஒவ்வொன்றையும் காணக் காண அறிவை அங்கே அழைத்து வரவேண்டும் என்ற எண்ணம் மட்டும் வலுப்பெற்றுக் கொண்டே வந்தது.

மாலையில் கன்னியாகுமரியில் கூட்டம். கன்னியாகுமரி நோக்கிச் செல்லும்போதே, திருவனந்தபுரம் செல்லும்போது வந்து சென்றது நினைவிற்கு வந்தது அற்புதத்திற்கு. கூட்டத்திற்கு, இரவு உணவு, தங்குவதற்கு என எல்லா ஏற்பாடுகளையும் தாமஸ் குடும்பத்தினர் ஈடுபாட்டுடன் செய்திருந்தனர். மீண்டும் அவர்களைக் கண்டதில் அற்புதத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சி. அவர்கள் குடும்பத்தினருடன் பேசி நலம் விசாரித்தார்.

அடுத்த நாளிலிருந்து மீண்டும் வடக்கே சென்னையை நோக்கிப் பயணம். செல்லும் வழியெங்கும் உற்சாகமான வரவேற்பு. எழுச்சியான கூட்டங்கள். நெகிழ வைக்கும் நிதியளிப்புகள்.




அதிலும் புதுக்கோட்டையில் அளிக்கப்பட்ட வரவேற்பை யாருமே சற்றும் எதிர்பார்க்கவில்லை. புதுக்கோட்டை பாவாணனும், புலவர் மதிவாணனும், இரும்பொறையும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

ஊர் எல்லையிலிருந்தே மேள தாளங்களுடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். அதோடு வாண வேடிக்கைகள் வேறு.

ஊர் எல்லையில் நிறுத்தப்பட்டு முதல் வெடி வெடித்தபோது வரவேற்பு மிகச் சிறப்பாக இருக்கப் போவதாக அற்புதம் யூகித்துவிட்டார்.

வயிற்றுக்குள் ஏதோ செய்தது. இந்தக் கேளிக்கை நமக்குத் தொடர்பில்லாத ஒன்று என்ற எண்ணம் வந்தது. 'இப்படி ஒரு வரவேற்பில் நாம் எந்த அடிப்படையில் கலந்து கொள்வது? எல்லாரும் இப்படி மகிழ்ச்சியா இருக்கிற நேரத்தில் நாம் மட்டும் ஒடுங்கி ஒதுங்கி போறா மாதிரி நிலைமை ஆயிருச்சே...' 'கண்களில் நீர் தளும்பியது. யாரும் பார்துவிடா வண்ணம் முகத்தைத் திருப்பிக் கொண்டார். நம் சோகம் நம்மோடு – இவர்கள் மகிழ்ச்சியை அது பாதித்துவிடக்கூடாது என்ற எண்ணம் வந்தது. தன் உணர்வுகளை அடக்கிக் கொண்டு இயல்பாக இருக்க வேண்டும்.

அடுத்து மயிலாடுதுறையல் ஒரு மனிதர் தன் கையிலிருந்த மோதிரத்தை கழற்றி நிதியாக அளித்தபோது பெரும் ஆரவாரம். பேசியவர்கள் அனைவரும் அந்த மனிதரை புகழ்ந்து அவரது உணர்வுகளைப் பாராட்ட மிகவும் உணர்ச்சிவசப்பட்ட அவர் தன் கையிலிருந்த மற்றொரு மோதிரத்தையும் நிதியாக அளித்துவிட்டார்.

எல்லாக் கூட்டங்களிலும் கவிஞர் அறிவுமதி விடுதலை ஆனவர்களை அறிமுகப்படுத்திப் பேசினார்.

விடுதலை ஆனவர்கள் சார்பாக ஒவ்வொரு கூட்டங்களிலும் ஒருவர் இருவர் என உரையாற்றினர். சில இடங்களில் அற்புதமும் உரையாற்ற அழைக்கப்பட்டார்.

குயில்தாசன் மகனை நினைத்து எழுதிய பாடல் ஒன்றை அறிவுமதி கூட்டங்களில் பாடினார்.

அறிவுமதியின் உருக்கும் குரலில் அப்பாடலைக் கேட்ட அனைவருமே உருகிப் போயினர்.

பத்மா தன் பங்கிற்கு குழுவிற்கு நன்றி கூறி ஒரு பாடல் பாடினார்.

இரும்பொறை பேசும்போது கூறிய தகவல்கள் கேட்போரை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

'ஒரு நாகரிகமுள்ள மனிதன் மற்றொரு நாகரிகமுள்ள மனிதனிடம் சொல்லமுடியாத வகையிலான சித்ரவதைகளை அனுபவித்தேன். மன ரீதியாக, உடல் ரீதியாக என பலவகையிலும் கொடூரமான வதைகளுக்கு ஆளாக்கியே வாக்குமூலங்கள் என்ற பெயரில் பல எழுதப்பட்ட மற்றும் எழுதப்படாத தாள்களில் எங்களிடம் கையெழுத்து பெறப்பட்டது. இன்று தூக்கு மர நிழலில் நிற்கும் நால்வரும்கூட அதற்கு விதிவிலக்கல்ல. சொல்லப்போனால் எங்களைவிட அதிகமான வதைகளை அவர்கள் அனுபவித்ததால்தான், எங்கள் மீது சுமத்தப்பட்டதைவிட மோசமான வழக்குகள் அவர்கள் மீது போடப்பட்டன. அதன் பயனாகத்தான் இன்றும் அவர்கள் மரண தண்டனையின் பிடியில் நிற்கிறார்கள். அவர்களும் என்று வெளிவருகிறார்களோ அன்றுதான் எங்களுக்கு உண்மையாக மகிழ்ச்சி' என்று கூறினார்.

ரங்கநாத் பேசும்போது 'சிவராசனின் இறுதிகாலத்தில் உடன் இருந்தவன் நான். அதனால் உண்மையில் யாருக்காக யாருடைய தூண்டுதலில் இக்கொலை நடந்தது என்று எனக்குத் தெரியும். நான் அவற்றையெல்லாம் வாக்குமூலமாக அளிக்க முன்வந்தபோது அதைப் பதிவு செய்ய அதிகாரிகள் பிடிவாதமாக மறுத்துவிட்டனர். மற்றவர்களுக்கு எல்லாம் வாக்குமூலங்களில் கையெழுத்துப் போடுவதற்காக சித்ரவதை என்றால் எனக்குத் தெரிந்த உண்மைகளை வெளியே சொல்லக்கூடாதென்ற சித்ரவதை. இப்போது இக்கொலை வழக்கை மீண்டும் விசாரிக்க பலநோக்கு கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது. அதன்முன் இந்த உண்மைகளைக் கூறுவேன். இன்று மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள நால்வரும் உண்மையில் குற்றமற்றவர்கள் என்பதை நிருபிப்பேன்' என்று கூறினார்.

இவர்களைவிட செல்வலட்சுமி தன் கதையைக் கூறியபோது கோபம், அதிர்ச்சி, வேதனை, பரிதாபம் என பல உணர்ச்சிகளும் வந்தவர்களை ஆட்கொண்டன. அவரது கதையின் வழக்கில் கைதான 5 பெண்களான செல்வலட்சுமி, சாந்தி, ஆதிரை, நளினி, பத்மா அனைவரின் துயரமும் வெளிப்பட்டது.

**யமனுக்கு மனிதநேயம் இருந்தது. மனிதர்களுக்கு....?**

(தவிப்பு தொடரும்.....)




# நாய்க்குட்டிக்கு தாய்ப்பால் கொடுக்கும் பெண்!



ஆக்லேண்ட் செய்தி நிறுவனம் ஒன்று வெளியிட்டிருக்கும் தகவல்படி, நியூசிலாந்தில் 'ஹேஸ்டிங்' என்ற நகரில் வசிக்கும் 'குராதுமானாகோ' என்ற தாய், தன் நான்கு மாதப் பெண் குழந்தைக்குத் தன் பாலை ஊட்டுவதுமில்லாமல், தான் வளர்க்கும் இரண்டு மாத நாய்க்குட்டிக்கும் அதை ஊட்டுகிறாளாம்.

''அதையும் என் குழந்தையாகவே கருதுகிறேன். எந்த விதமான வித்தியாசமும் நான் பார்க்கவில்லை. இயற்கை என் மார்பில் ஏராளமான பாலை சுரக்க வைக்கிறது. அத்தனை பாலையும் என் குழந்தை சாப்பிடுவதில்லை. ஆகவே, பால் வீணாகக் கூடாது என்பதால், தாயிடமிருந்து பிரித்துக் கொண்டு வந்த நாய்க்குட்டிக்கும் ஊட்டுகிறேன். இதைப் பார்த்து கேலி செய்பவர்களும் இருக்கின்றார்கள். நான் அதை பொருட்படுத்துவதில்லை.

நாய்க்குட்டி வளர்ந்து பெரிதான பிறகு, அது என் குழந்தையை நல்லபடியாகக் கவனித்துப் பாதுகாக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதற்கும் என் குழந்தைக்கும் நான் ஒரே பெயர்தான் வைத்திருக்கிறேன். 'ஹேரானி' என்பது தான் அந்தப் பெயர்'' என்று பத்திரிகை நிருபரிடம் சொல்லியிருக்கிறாள் அந்தத் தாய்.

கடந்த வருடம் ஹோனியைப் பெற்றெடுத்தபின், அந்தப் பெண் இப்போது மீண்டும் கர்ப்பவதியாகியிருக்கிறாள். ''மனிதப் பாலைக் குடித்து வளர்ந்த நாய்க்கு எதிர்காலத்தில் ஏதாவது 'கோளாறு'கள் ஏற்படலாம். அது பெரிதான பிறகு, அதனுடைய 'நடத்தை' ஏதாவது பிரச்சினையை ஏற்படுத்துமா என்பதை இப்போது நிச்சயமாகக் கூற முடியாது'' என்கிறார்கள் நியூசிலாந்தின் பிராணி பராமரிப்பு நிறுவனத்தின் அதிகாரிகள். எது எப்படி இருந்தாலும் நாய்க்குட்டிக்கு இப்போது ஒரே ஜாலிதான்.

# ஒளிந்திருக்கும் ஓவியம்




படத்திலே ஒரு சிறிய மான் தெரிகிறது. ஆனால் இன்னொரு பெரிய மான் ஒளிந்திருக்கிறது. கண்டுபிடியுங்கள்.

# குறும்பு



ஆஹா அவர் அங்கு துடைக்கிறார்...
இவர் இங்கே துடைக்கிறாரே....!

# கண்ணாமூச்சி



படத்தைப் பாருங்கள். நீர்வீழ்ச்சி ஒன்று கீழே விழுகிறது. சரி... ஆனால் அந்த நீர் வீழ்ச்சிக்கான நீர்... எங்கே ஆரம்பமாகிறது?

# விந்தை செய்தி

உலகம் போற போக்கைப் பாரு...

தற்போதைய உலகத்தில் என்னத்தை விற்பது — என்னத்தை வாங்குவது என்று விவஸ்தையே இல்லாமல் போய்விட்டது. அமெரிக்காவில் பிரபல்யமான பொப் பாடகி பிரிட்னி பியர்ஸ். இவர் தனது கணவர் கெவின் பெடர்லைனுடன் அமெரிக்க நகரங்களில் ஒன்றான லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கி இருந்தார்.

அவர்கள் ஹோட்டல் அறையை காலி செய்துவிட்டு சென்றதும் அந்த ஹோட்டலின் ஊழியர்கள் அவர்கள் இருந்த அறையைச் சுத்தம் செய்தனர். அப்போது அந்த அறையில் உள்ள குளியல் அறையின் குப்பைக் கூடையில் பிரிட்னி பியர்ஸ் கர்ப்பமாக இருப்பதை உறுதி செய்த மருத்துவ அறிக்கை (அதாவது பிரிட்னி பியர்ஸின் URIN REPORT) கிடந்தது. இதனை எடுத்து GOLDEN PLACE.COM என்ற இணையத்தளத்திடம் கொடுத்தனர் அந்த ஊழியர்கள்.

அந்த இணையத்தளம் INTER NET மூலம் இந்த மருத்துவ அறிக்கையை ஏலம்விடப் போவதாக அறிவித்தது. பலர் அந்த அறிக்கையை வாங்க அடிபிடிப்பட்டனர். ஆனால் கனடாவில் உள்ள NEW HOT89.9. என்ற வானொலி நிலையம் அந்த அறிக்கையை அதிகவிலை கொடுத்து வாங்கிவிட்டது.

இந்த ஏல விற்பனை மூலம் கிடைத்த பணத்தை அந்த இணையத்தளம் புற்று நோயாளிகளுக்கு உதவும் நிறுவனம் ஒன்றுக்கும் ஊனமுற்ற சிறுவர்களுக்கு உதவும் அறக்கட்டளை நிறுவனம் ஒன்றுக்கும் பகிர்ந்தளித்துள்ளதாம்.

பாருங்கள்... இதைக்கூட விற்கிறார்கள். அதையும்போய் வாங்குகிறார்கள்... ம்.... ம்... ம்...

# சத்தமில்லாத டமாஸ்



மொனாலிசா... ஏன் சிரித்தாள்..... ஆஹா... இதனைக் கண்டா?

# ஐடியா

கையடக்க தொலைபேசியை (MOBILE PHONE) எப்போதும் காதிலே வைத்துப் பேசினால் அதிலிருந்து வெளிவரும் கதிர்கள் மூளையைப் பாதிக்குமாம். எனவே, தற்போது பலரும் HEAD SET களைப் பாவித்து வருகின்றனர். எனவே, அதில் புதிய ஐடியா இது ...






## ஜோக்

உங்களுக்குச் சொந்தமா நிலபுலன்கள் ஏதாவது இருக்கா?

எதுக்கு டாக்டர் கேக்கிறீங்க?

ஆப்பரேஷனுக்குப் பிறகு அங்கேயே புதைக்கலாமென்றுதான்.



## சுடர் ஒளியில் வாராந்தம்



## கல்விச் சுடர்

**5ஆம் தர**
**புலமைப் பரிசில் பரீட்சை**
**மாதிரி வினாத்தாள்கள்**
**தேர்ச்சி பெற்ற பரீட்சகர்களால் தயாரிக்கப்பட்டவை.**

வாராந்தம் புதன்கிழமைகளில் தவறாமல் பிரசுரமாகும்.

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!

---

திருகோணமலையில்... சுடர் ஒளி உதயன் விளம்பர பணிமனை

எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை திருகோணமலை 39, அருணகிரி வீதியில் அமைந்திருக்கும் எமது விளம்பர பணிமனையில் கையளிக்கலாம்.

திருகோணமலையில் தொடர்புகளுக்கான தொலைபேசி இலக்கம் 026 2220783, 026 2221670

011 4734401 - 3, 011 2398606 - 70

---

இப்பொழுது வெள்ளவத்தையில்...



தமிழ் பேசும் மக்களின் தன்மான பத்திரிகைகளான

## உதயன் சுடர் ஒளி

THE SUDAR OLI

## கிளைப் பணிமனை

**379** முதலாம் மாடி, காலி வீதி, கொழும்பு-06.

தொ.பே:- 011 4528699, 0714 150300

(ஹோட்டல் சப்பயருக்கு சமீபமாக)

---

## EXPOAIR எக்ஸ்போ எயார்

*your friend in the skies...*

வானத்தில் உங்கள் நண்பன்...





யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 349999/8888
கொழும்பில் - 011 2372952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com

---

யாழ். நகரில் குறைந்த விலையில் நிறைந்த ரகங்கள்! நிகரில்லாத் தரங்கள்!
அழகிய புடவைத் தினுசுகளின் குளிரூட்டப்பட்ட சாம்ராஜ்யம்



நாளைய நாகரிகத்தை நாம் இன்றே அறிமுகப்படுத்துகின்றோம்
ஒரு முறை விஜயம் செய்துபாருங்கள் உண்மை புரியும்.

## கிறீன் பலஸ் எம்போறியம்



பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.

---

மீண்டும் வன்னியில் புதுப்பொலிவுடன்...

உங்களின் இக்காலத் தெரிவுக்கு...



## குமரகுரு



### புடைவை அழகுப்பொருள் வாணிபம்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை உள்ளடக்கிய திருமண மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுர சாறிகள், பட்டுச்சாறிகள், பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண், சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள், சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள உடன் நாடுங்கள்.

**குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்** | **KUMARAKURU TEXTILE & FANCY HOUSE**

யாழ் சாலை, கிளிநொச்சி | Tel: 021 228 5971 | Yarl Road, Kilinochchi

இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2005, மே. 15 ஆம் திகதி வெளியிடப்பட்டது.